  பொருத்த நிலையில், இலக்கியங்கள் மீதான சொல்லடைகள் பற்றிய பெயர்த்தல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Translation ➢ Aesthetics
புரிதல் : பெயர்த்தல் ➢ முருகியல்

- Instruction to the teacher :
  The aesthetic elements that are generally available in the couplets may be explained.
  குறட்பாக்களிலுள்ள பொதுவான முருகியல் கூறுகள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Explain as how the simile used in the following couplet enhances the literary value.
  கொடுக்கப்பட்டுள்ள குறளிலுள்ள உவமை எவ்வாறு இலக்கிய நயம் மிளிர உரைக்கப்பட்டுள்ளது எனக் கூறுக.

- Question / item stem :
  கானமுயல் எய்த அம்பினில் யானை
  பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

  – திருவள்ளுவர்

  விடை: எளிய செயல் செய்து வெற்றி பெறுவதை விட அரிய செயல் செய்ய முயன்று தோல்வியுறுவது உயர்ந்தது என்பதை இக்குறள் நயம்படக் கூறுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetic : Aspect in isolation - Usage of simile
- Objective - ability level : To test comprehension in terms of translation with reference to the usage of simile.
- Name of the item format : Subjective category - Short Answer

- Administering mode : Written
- General educational level : L_1 - Higher Secondary
- Rationale : Comprehension in terms of translation with reference to the usage of simile is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், இலக்கியத்தில் உவமைப் பயன்பாடு பற்றிய பெயர்த்தல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Translation ➢ Affectives
புரிதல் : பெயர்த்தல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  Various kinds of feelings that are generally expressed in literary works, may be explained.
  இலக்கியங்களில் பொதுவாக வெளிப்படுத்தப்படும் உணர்வுகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Pick out the phrases in the second poem which are enhancing the feelings expressed by the underlined phrases of the first poem.
  முதற்பாடலில் உள்ள கோடிட்ட தொடர்கள் வெளிப்படுத்தும் உணர்வினை இரண்டாம் பாடலில் உள்ள சில தொடர்கள் மிகுதிப்படுத்துவனவாக உள்ளன. அவற்றை எடுத்தெழுதுக.

- Question / item stem :

1. தருவனத்துள் யானியற்றும்
   தவவேள்விக்கு இடையூறாய்
   வெருவரச் சென்றடை காமவெகுளியென
   நிருதரிடை விலக்காவண்ணம்
   செருமுகத்துக் காத்தியென நின் சிறுவர்
   நால்வரினும் கரிய செம்மல்
   ஒருவனைத் தந்திடுதியென உயிரிரக்கும்
   கடுங்கூற்றின் உளையச் சொன்னான்.

   – கம்பர்

2. எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
   மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால் எனச்
   செவியில் புகுதலோடும்
உண்ணிலாவிய துயரம் பிடித்து உந்த ஆருயிர்
   நின்றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்
   கடுந்துயரம் கால வேலான்.

– கம்பர்

விடை: புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால் எனச்
செவியில் புகுதலோடும்
உண்ணிலாவிய துயரம் பிடித்து உந்த ஆருயிர்
நின்றூசலாட ...

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Ideologies - Meaning & scope.
- Objective - ability level : To test comprehension in terms of translation with reference to the meaning & scope of literature.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Comprehension in terms of translation with reference to the meaning & scope of literature is tested at the identification level. இனங்காணுதல் நிலையில், இலக்கியத்தின் பொருளும் எல்லையும் பற்றிய பெயர்த்தல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

312200 COGNITIVE / COMPREHENSION / **INTERPRETATION**

உறுபொருள் தரல்

Note :	*Read the given passage carefully and answer the following four questions suitably.*
குறிப்பு :	கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்துணர்ந்து அடுத்து வரும் நான்கு வினாக்களுக்கும் பொருத்தமான விடை தருக.

அடிமைத்தனமும் சமுதாய வீழ்ச்சியும்

அரசர்கள் காலத்திலிருந்து அடிமைப்பட்டுப் பழகிப் போய்விட்ட நம்மைப் புரிந்து கொண்டனர் ஆங்கிலேயர். அதனால் மேலும் முந்நூறு ஆண்டு காலம் அடிமையாக்கிச் சுரண்டிப் பிழைத்தக் கிழக்கிந்தியக் கும்பெனிக்காரர்களிடமிருந்து முதலாளிகள் கற்றுக் கொண்ட பாடம் சுரண்டல். உழைப்பாளிகள் புரிந்து கொண்டதோ அடிமையாக விசுவாச–முடன் இருப்பதுதான். கும்பெனிக்காரரிடம் கண்காணியாய் இருந்தவர்கள் பின்னர் முதலாளிகளாய் மாறி அவரவர் போக்கில் நிலவுடைமைக்–காரராய்ச் சுரண்டலில் ஈடுபட்டார்கள். அடிமையாய் இருந்து பழக்கப்–பட்டுப் போய்விட்ட மக்களோ தங்களினப் பெண்களுக்கு எதிர்ச் சிந்தனை ஏற்பட்டு விடாமலிருக்க 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' எனக் கூறி கிணற்றுத் தவளையாய் ஆக்கினார்கள்.

மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதியை இங்ஙனம் ஒடுக்கிய பின், எஞ்சியோரையும் கல்விக் கோட்பாட்டில் நிற்கவிடாமல் சுரண்டிப் பிழைத்ததனால், போதுமான அளவு உண்ணமுடியாமல் போன பாட்டாளித் தொழிலாளியிடம் கல்வி பற்றிய சிந்தனை மலராமலே போய்விட்டது.

கல்வி பற்றிய சிந்தனை ஒருவேளை எழுந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கும்பெனிக்காரர்கள் பலமான அடித்தளத்துடன் செய்முறைப் பயிற்சி இல்லாத கல்வித் திட்டத்தைப் புகுத்தி அதன் மூலமும் சுரண்டலையே நிரம்பச் செய்துவந்தனர். இதனால் பெரும்பாலான மக்கள் வாழும் வகை அறியாது படாதபாடுபட்டனர்.

Comprehension : Interpretation
புரிதல் : உறுபொருள் தரல்

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ *Illustrative Example*

Instruction to the teacher :

The oppressive measures of the rulers that were detrimental to the social development from time to time, may be explained.

மக்களை ஒடுக்கி வளர்ச்சிப் போக்கினைத் தடுத்து வந்த பல்வேறு ஆட்சிக்காலங்களை வரலாற்று அடிப்படையில் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Complete the following statement suitably by rearranging the periods of governance.

  பல்வேறு ஆட்சிக் காலங்களை வரலாற்று அடிப்படையில் வரிசைப்-படுத்திக் கூற்றினைப் பொருத்தமாக நிறைவு செய்க.

- Question / item stem :

  வரலாற்று அடிப்படையில் அடிமைத்தனம் மிகுந்திருந்த கால வரிசை

  அ. மன்னர் காலம்

  ஆ. மக்களாட்சிக் காலம்

  இ. முதலாளித்துவக் காலம்

  ஈ. ஆங்கிலேயர் காலம்

  விடை: அ. மன்னர் காலம்

  ஈ. ஆங்கிலேயர் காலம்

  இ. முதலாளித்துவக் காலம்

  ஆ. மக்களாட்சிக் காலம்

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Background - Trends & Movements
- Objective - ability level : To test comprehension in terms of interpretation with reference to trends and movements of literary history.
- Name of the item format : Objective category - Rearrangement
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Comprehension in terms of interpretation with reference to trends and movements of history is tested at the suitability level.

  பொருத்த நிலையில், வரலாற்றின் போக்கும் இயக்கமும் பற்றிய உறுபொருள் தரல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Interpretation
புரிதல் : உறுபொருள் தரல்

➢ Generics
➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  Different systems of governance which have unleased oppressive measures adopted on the people may be explained.
  மக்களை ஒடுக்கி வளர்ச்சிப் போக்கினைத் தடுத்துவந்த பல்வேறு ஆட்சிக்காலங்களை வரலாற்று அடிப்படையில் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Complete the following statement by choosing an appropriate one from the given alternatives, based on the passage given in the previous page.
  முன்பக்கத்திலுள்ள உரைப்பகுதியில் ஆசிரியர் வலியுறுத்தி உணர்த்த விரும்பும் கருத்து யாதெனத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றினை நிறைவு செய்க.

- Question / item stem :

  ஆசிரியர் வலியுறுத்தும் கருத்து ....

  அ. சுரண்டலின் கேடு
  ஆ. விடுதலை எழுச்சி
  இ. பெண்மையின் நிலை
  ஈ. ஏழ்மைக்குக் காரணம்

  விடை: ஆ. விடுதலை எழுச்சி

- Scoring procedure : Enumerative
- Literary input : Generics : Prose II - Content & theme of essays
- Objective -ability level : To test comprehension in terms of interpretation with reference to the contents and themes of essay.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Comprehension in terms of interpretation with reference to the contents and themes of essay is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், கட்டுரையின் கருத்தும் உள்ளடக்கமும் பற்றிய உறுபொருள் தரல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Interpretation ➢ Aesthetics
புரிதல் : உறுபொருள் தரல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The uses of metaphors in literary works, may be explained.
  இலக்கியங்களில் உருவகப் பயன்பாடு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Complete the following statement by choosing a suitable one from the given alternatives.
  கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பின்வரும் கூற்றை முழுமையாக்குக.

- Question / item stem :
  'கிணற்றுத்தவளை' என்ற சொல்லாட்சியினால் வெளிப்படும் பொருள் நயம் . . . .

  அ. தாம் கண்டதே முழுமையெனக் கருதும் மனப்பாங்கு
  ஆ. எதையும் எட்டிப் பிடிக்க முயலும் இயல்பு
  இ. பொருளற்றவாறு பேசும் மனப்போக்கு
  ஈ. கிடைத்ததே போதும் எனும் மன நிறைவு

  விடை: அ. தாம் கண்டதே முழுமையெனக் கருதும் மனப்பாங்கு

- Scoring procedure : Enumerative
- Literary input : Aesthetic : Aespects in isolation - Usage of metaphors
- Objective - ability level : To test comprehension in terms of interpretation with reference to the usage of metaphors.

- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher Secondary
- Rationale : Comprehension in terms of interpretation with reference to the usage of metaphors is tested at the identification level.
  பொருத்த நிலையில், உருவகங்களின் பயன்பாடு பற்றிய பெயர்த்தல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Interpretation ➢ Affectives
புரிதல் : உறுபொருள் தரல் ➢ உணர்வியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  Superstitions and irrational beliefs that infected the society from time to time may be explained.
  பல்வேறு காலகட்டங்களில் மக்களைப் பாதித்துவந்த மூடப் பழக்கவழக்கம் பகுத்தறிவற்ற நம்பிக்கை ஆகியவற்றைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Write a short note on the following topic.
  பின்வரும் தலைப்பில் ஒரு சிறு குறிப்பு வரைக.

- Question / item stem :

  எளிதில் விடுபட இயலாத சமூகப் பழக்க வழக்கம்

  விடைக்குறிப்பு : காலங்காலமாக இருந்த நிலை – இன்றைய நிலை– இவற்றின் தொடர்பு நிலை

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives - Ideologies - Social habits
- Objective - ability level : To test comprehension in terms of interpretation with reference to social life.
- Name of the item format : Subjective category - Short Answer

- Administering mode : Written
- General educational level : L_1 - Higher Secondary
- Rationale : Comprehension in terms of interpretation with reference to social life is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், மக்களின் சமூகநிலை பற்றிய உறுபொருள் தரல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

312300 *COGNITIVE* / COMPREHENSION / ***EXTRAPOLATION***

புறநிலை நீட்டல்

Note :	*Read the given passage carefully and answer the following four questions suitably.*
குறிப்பு :	கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்துணர்ந்து அடுத்து வரும் நான்கு வினாக்களுக்கும் பொருத்தமான விடை தருக.

அடிமைத்தனமும் சமுதாய வீழ்ச்சியும்

அரசர்கள் காலத்திலிருந்து அடிமைப்பட்டுப் பழகிப் போய்விட்ட நம்மைப் புரிந்து கொண்டனர் ஆங்கிலேயர். அதனால் மேலும் முந்நூறு ஆண்டு காலம் அடிமையாக்கிச் சுரண்டிப் பிழைத்த கிழக்கிந்தியக் கும்பெனிக்காரர்களிடமிருந்து முதலாளிகள் கற்றுக் கொண்ட பாடம் சுரண்டல். உழைப்பாளிகள் புரிந்து கொண்டதோ அடிமையாக விசுவாசமுடன் இருப்பதுதான். கும்பெனிக்காரரிடம் கண்காணியாய் இருந்தவர்கள் பின்னர் முதலாளிகளாய் மாறி அவரவர் போக்கில் நிலவுடைமைக்காரராய்ச் சுரண்டலில் ஈடுபட்டார்கள். அடிமையாய் இருந்து பழக்கப்பட்டுப் போய்விட்ட மக்களோ தங்களினப் பெண்களுக்கு எதிர்ச் சிந்தனை ஏற்பட்டு விடாமலிருக்க 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' எனக் கூறி கிணற்றுத் தவளையாய் ஆக்கினார்கள்.

மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதியை இங்ஙனம் ஒடுக்கிய பின், எஞ்சியோரையும் கல்விக் கோட்பாட்டில் நிற்கவிடாமல் சுரண்டிப் பிழைத்ததனால், போதுமான அளவு உண்ணமுடியாமல் போன பாட்டாளித் தொழிலாளியிடம் கல்வி பற்றிய சிந்தனை மலராமலே போய்விட்டது.

கல்வி பற்றிய சிந்தனை ஒருவேளை எழுந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கும்பெனிக்காரர்கள் பலமான அடித்தளத்துடன் செய்முறைப் பயிற்சி இல்லாத கல்வித் திட்டத்தைப் புகுத்தி அதன் மூலமும் சுரண்டலையே நிரம்பச் செய்துவந்தனர். இதனால் பெரும்பாலான மக்கள் வாழும் வகை அறியாது படாதபாடுபட்டனர்.

Comprehension : Extrapolation ➢ Genesis
புரிதல் : புறநிலை நீட்டல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The impact caused on to the society by various political systems that existed from time to time, may be explained.
  பல்வேறு காலகட்டங்களில் நிலவிய அரசியல் அமைப்புக்கள் மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புக்களை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Extrapolate your own conclusions based on the above passage.
  மேலே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் பற்றிய உங்களது கருத்தைப் புறநிலை நீட்டல் வாயிலாக விளக்குக.

- Question / item stem :

  அடிமைத்தனமும் சமுதாயவீழ்ச்சியும்

  விடை: எளியார் உரிமைகளையும் உடைமைகளையும் வலியார் தம் சுயநலத்துக்காக வலிந்து பெறுதல் – போன்ற கருத்துக்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Background - Social and political life
- Objective - ability level : To test comprehension in terms of extrapolation with reference to social and political life.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Comprehension in terms of extrapolation with reference to social and political life is tested at the production level.
வெளிப்படுத்துதல் நிலையில், சமுதாயம் மற்றும் அரசியல் வாழ்வு பற்றிய புறநிலை நீட்டல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Extrapolation ➢ Generics
புரிதல் : புறநிலை நீட்டல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

The importance of education for the society may be explained.
சமுதாயத்துக்கான கல்வியின் அவசியம் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

Write as directed.
கேட்டுள்ளபடி எழுதுக.

- Question / item stem :

Based on the passage given in previous page, state the three essential features that are to be nurtured to eradicate the sufferings of the people.
முன்பக்கத்திலுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில், மக்களின் அவலங்களைப் போக்குதற்குரிய மூன்று தலையாய அம்சங்களைக் குறிப்பிடுக.

விடை: 1. விடுதலை உணர்வு
2. பெண் முன்னேற்றம்
3. வாழ்க்கை முன்னேற்றம்

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Prose - Essay on the importance of education
- Objective - ability level : To test comprehension in terms of extrapolation with reference to essay on the importance of nurturing the society with rational thoughts.

- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Comprehension in terms of extrapolation with reference to essay on the importance of nurturing the society with rational thoughts, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், கல்வியின் அவசியம் கட்டுரை பற்றிய புறநிலை நீட்டல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Extrapolation
புரிதல் : புறநிலை நீட்டல்

➢ Aesthetics
➢ முருகியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  The uses of proverbs in literary works may be explained.
  இலக்கியங்களில் பழமொழிகளின் பயன்பாடு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Complete the statement by choosing a suitable one from the given alternatives.
  பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை முழுமையாக்குக.

- Question / item stem :

  'படாதபாடுபட்டனர்' என்னும் தொடரின் பொருளின் பின்விளைவைக் குறிக்கத்தக்க பழமொழி ....

  அ. சாது மிரண்டால் காடு கொள்ளாது.

  ஆ. குட்டக் குட்ட குனிபவன் முட்டாள்; குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்.

  விடை: அ. சாது மிரண்டால் காடு கொள்ளாது

- Scoring procedure : Enumerative

- Literary input : Aesthetics : Aspects in isolation - Usages of Proverb
- Objective - ability level : To test <u>comprehension</u> in terms of extrapolation with reference to the usage of proverb.
- Name of the item format : Objective category - Constant Alternative
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : <u>Comprehension</u> in terms of extrapolation with reference to the usage of proverb is tested at the identification level. இனங்காணுதல் நிலையில், பழமொழிகளின் பயன்பாடு பற்றிய புறநிலை நீட்டல் வாயிலாகப் <u>புரிதல் இயலுமை</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Comprehension : Extrapolation ➢ Affectives
புரிதல் : புறநிலை நீட்டல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The views expressed by various poets on education may be explained.
  கல்வி பற்றிய பல்வேறு கவிஞர்களின் கூற்றுக்களை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Complete the statement by choosing a suitable one from the given alternatives.
  பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கூற்றினை முழுமையாக்குக.

- Question / item stem :

  கல்வி, விடுதலை உணர்வுடன் தொடர்புடையது என்பதைத் தெளிவுபடுத்துமாறு அமையும் தொடர் ....

  அ. கற்றனைத்து ஊறும் அறிவு
  ஆ. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

இ. அறிவு அற்றம் காக்கும் கருவி
ஈ. கல்வி மம்மர் அறுக்கும் மருந்து

விடை: ஈ. கல்வி மம்மர் அறுக்கும் மருந்து

- Scoring procedure : Enumerative
- Literary input : Affective - Ideologies - Importance of education
- Objective - ability level : To test comprehension in terms of extrapolation with reference to the belief on education.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Comprehension in terms of extrapolation with reference to the views on education by various poets is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், கல்வி தொடர்பான பல்வேறு கவிஞர்களின் கருத்துகள் பற்றிய புறநிலை நீட்டல் வாயிலாகப் புரிதல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

313000 *COGNITIVE / APPLICATION*

ஆளல்

Application ➢ Genesis
ஆளல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

The general form and contents of various literary genre may be explained.
பல்வேறு இலக்கிய வகைகளின் பொதுவான அமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  The following two verses have similar contents. Based on the first verse, fill in the blanks of the second one suitably.
  கொடுக்கப்பட்டுள்ள இரு பாடல்களும் ஒரே கருத்தை உடையவை. முதற்பாடலை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் பாடலில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமாக நிரப்புக.

- Question / item stem :

  1. யாயும் ஞாயும் யாராகியரோ
     எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
     யானும் நீயும் எவ்வழி யறிதும்
     செம்புலப் பெயல்நீர் போல
     அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.
     – குறுந்தொகை

  2. முன்னை உன்னை அறிந்திலேன் முனைந்து
     என்றும் தேடிட இயைந்திலேன் – இன்றோ
     ________ பெய்த மாமழை போல
     எண்ணம் நம்மை __________ .

  விடை: மண்ணில், இணைத்ததுவே.

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Evolution - Generic forms and contents
- Objective - ability level : To test application with reference to generic forms and contents.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Application of the generic form and contents of one poem is used to understand the other one is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், ஒரு கவிதையின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஆளல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Application
ஆளல்

➢ Generics
➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The ancient Tamil concepts of love and valour (heroism) as elucidated in various literary works may be explained.
  பழந்தமிழ்க் கோட்பாடுகளான அகத்திணை, புறத்திணை பற்றிப் பல்வேறு இலக்கியங்கள் வெளிப்படுத்துவதை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Specify the class (literary background) which describes the following events.
  கீழ்வரும் நிகழ்வுகளை விளக்குவதாக அமையும் அகப்பொருள் திணையின் பிரிவு யாது ?

- Question / item stem :

  மன்னன் போருக்குச் சென்றான் –
  படை வீரர்கள் உடன் சென்றனர் –
  குளிர் காலம் வந்து சேர்ந்தது –
  மன்னனை அவன் தேவி எதிர்பார்த்திருந்தாள் –
  அவன் வெற்றி பெற்று வருவான் எனக் காத்திருந்தாள் –
  மன்னன் வெற்றி பெற்று நாடு மீண்டான் –
  புலவர்கள் அவனைப் புகழ்ந்தனர் –
  மன்னன் புலவர்களுக்குப் பரிசு வழங்கினான்.

  விடை: முல்லை (குறுகிய விளக்கத்துடன்)

- Scoring procedure : Enumerative
- Literary input : Generic : Poetry - General Characteristics
- Objective - ability level : To test application with reference to general characteristics.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : <u>Application</u> with reference to general characteristics of poetry class is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், அகப்பொருள் கவிதையின் பொதுப் பண்பினைப் பயன்படுத்தும் <u>ஆளல் இயலுமை</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Application ➢ Aesthetics
ஆளல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The general aesthetics of literature may be explained.
  இலக்கியங்களின் பொதுவான முருகியல் நயம் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Respond as directed.
  கேட்டுள்ளபடி எழுதுக.

- Question / item stem :
  கொடுக்கப்பட்டுள்ள சூழல்களுள் ஒன்றிற்குப் பொருத்தமான தொடரைக் கீழே கொடுக்கப்பட்ட பாடலிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

  சூழல் : 1. கைகேயி காலம் சில கழிந்து பெருந்துன்பம் உறுவாள்
  2. பாம்பு கடிப்பதால் மிகுந்த வலி ஏற்படும்
  3. வலி மிகுதியால் தொல்லை ஏற்படும்.

  பாடல் : எய்தி அக்கேகயன் மடந்தை ஏடவிழ்
  நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினால்
  செய்த பேருவமை சால் செம்பொன் சேறடி
  கைகளின் தீண்டினாள் காலக் கோளனாள்.
  – கம்பர்

  விடை: சேறடி கைகளின் தீண்டினாள் காலக் கோளனாள்.

- Scoring procedure : Enumerative
- Literary input : Aesthetics - Aspects in isolation - imagery

- Objective (QWI) : To test application with reference to imagery of poetry.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General Educational Level : L_1 - Graduate
- Rationale : Application with reference to imagery of poetry is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில் கவிதையின் படிமக் கூறுகளைப் பயன்படுத்தும் ஆளல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Application
ஆளல்

➢ Affectives
➢ உணர்வியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  The affective feelings expressed in literary works may be explained.
  இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  The following three stanzas express the tragedy of life. Pick out the one which depicts more of this aspect.
  கீழ்க்காணும் மூன்று பாடல்களிலும் அவலம் வெளிப்படுகிறது. அவற்றில் எப்பாடலில் மிகுதியாக உள்ளது என்பதை எடுத்து எழுதுக.

- Question / item stem :

  1. காலே பரிதப்பினவே ; கண்ணே
     நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
     அகல் இரு விசும்பின் மீனினும்
     பலரே மன்ற, இவ்வுலகத்துப் பிறரே.
     – குறுந்தொகை

  2. மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
     வேலைநீ வாழி பொழுது.
     – திருவள்ளுவர்

3. மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்
ஊற்றுநீர் போல மிகும்.

– திருவள்ளுவர்

விடை: பாடல் 2 – மாலையோ அல்லை
என்று தொடங்கும் பாடல்.

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Affective - Emotion
- Objective - ability level : To test application with reference to causal emotion of poetry.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Application with reference to affective emotion of poetry is tested at the suitability level.
இனங்காணுதல் நிலையில், கவிதையின் உணர்ச்சிக் காரணிகளைப் பயன்படுத்தும் ஆளல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

314000 COGNITIVE / **ANALYSIS**

பகுத்தல்

314100 COGNITIVE / ANALYSIS / **ANALYSIS OF ELEMENTS**

கூறுகள்

Analysis : Elements ➢ Genesis
பகுத்தல் : கூறுகள் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

The story of Manonmaniyam may be explained
மனோன்மணியத்தின் கதை பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read the following statements carefully and answer the question by choosing it from the given alternatives.
  கீழ்வரும் நிகழ்வுகளைக் கவனமாகப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்குரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

- Question / item stem :

  கீழ்க்காணும் நிகழ்வுகளில் குடிலனின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ள வாக்கியம் எது ?

  1. ஆண் வாரிசில்லாத சீவக வழுதி தன் அமைச்சன் குடிலனை நம்பிக்கைக்கு உரியவனாகக் கருதியிருந்தான்.
  2. பேராசை மிக்க குடிலன் மன்னனின் ஒரே மகள் மனோன்மனியைத் தன் மகனுக்கு மணமுடிக்க விரும்பினான்.
  3. சீவக மன்னனுக்கு உற்ற துணைவனாக இருப்பதுபோல் நடித்து சேர மன்னன் புருடோத்தமனைப் பாண்டிய நாட்டின் மேல் படையெடுக்கும்படி செய்தான்.
  4. புருடோத்தமன் போரிட்டு வெல்லுமுன், குடிலன் மனோன்மணியைத் தன் மகனுக்குத் திருமணம் புரிவிக்க ஏற்பாடு செய்தான்.
  5. அதற்கேற்ற முன்னேற்பாடுகள் நடைபெறும் போது குடிலன் புருடோத்தமனைச் சந்தித்துத் தன் திட்டத்தைக் கூறினான்.
  6. புருடோத்தமனின் நேர்மையால் குடிலனின் திட்டம் நிறைவேறவில்லை.

  விடை: உ–ஆம் வாக்கியம்

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Background - Theme of the story
- Objective - ability level : To test analysis in terms of elements with reference to the theme of the story.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Analysis in terms of elements with reference to the theme of the story is tested at the suitability level.
  இனங்காணுதல் நிலையில், ஒரு கதையின் பற்றிய கூறுகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Elements ➢ Generics
பகுத்தல் : கூறுகள் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The forms and structures of various types of speeches may be explained.
  பல்வேறு வகையான சொற்பொழிவுகளின் வடிவம் மற்றும் அமைப்பு பற்றி விளக்கிக் கூறலாம்

- Instruction to the student :

  An extract of a speech delivered by a person on the stage is given below. Read it carefully and identify the position of the speaker in the meeting.
  பொதுக்கூட்ட மேடையில் உள்ள ஒருவரின் சொற்பொழிவு கீழே தரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அந்தச் சொற்பொழிவாளரின் நிலை யாது என்பதை உய்த்துணர்ந்து எழுதுக.

- Question / item stem :

  அன்பார்ந்த பெருமக்களே,

  இன்று உங்கள் மத்தியிலே இருப்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி-யடைகிறேன். பலமுறை உங்களைச் சந்திக்க எண்ணினேன். பல்வேறு அலுவல்கள் காரணமாக இயலவில்லை. இன்று அந்த வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். பல பேச்சாளர்கள் பேசவிருக்கும் இக்கூட்டத்தில் எனக்குத் தாங்கள் கொடுத்த மதிப்புக்கும், மரியாதைக்கும் நன்றி. நான் நீண்ட நேரத்தை வீணாக்காமல், உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு பேச்சாளர்களை அழைக்கிறேன். முடிவில் என் கருத்தைச் சொல்கிறேன்.

  விடை: கூட்டத் தலைவர்

- Scoring procedure : Enumerative

- Literary input : Generics : Prose - Form and Structure of a particular speech
- Objective - ability level : To test analysis in terms of elements with reference to the form and structure of a particular speech communication.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Analysis in terms of elements with reference to form and structure of a particular speech is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், ஒரு குறிப்பிட்ட சொற்பொழிவின் வடிவம் மற்றும் கட்டமைப்பு பற்றிய கூறுகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Elements
பகுத்தல் : கூறுகள்

➢ Aesthetics
➢ முருகியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  The status of implicit simile in the area of literature may be explained.
  இலக்கியத்தில் உள்ளுறையின் நிலை பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Find out the implicit simile which depicts the state of mind of the heroine from the following verse.
  கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள தலைவியின் மனநிலையைக் காட்டும் உள்ளுறையை எடுத்துக் கூறுக.

- Question / item stem :

  கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென
  கைம்மை உய்யாக் காமர் மந்தி
  கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
  ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
  சாரல் நாட ! நடு நாள்
  வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே !

  – குறுந்தொகை

விடை: குரங்கின் தன்மை – தலைவியின் நிலை ஆகிய இரண்டையும் பொருத்திக் காட்டுதல்.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics - Aspects in isolation - Usage of Metaphor
- Objective - ability level : To test analysis in terms of elements with reference to the usage of metaphor.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Analysis in terms of elements with reference to the usage of metaphor is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், உருவகத்தின் பயன்பாடு பற்றிய கூறுகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Elements ➢ Affectives
பகுத்தல் : கூறுகள் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The inner feelings expressed through proverbs may be explained.
  உள் உணர்வினை வெளிப்படுத்துவதாக அமையும் பழமொழிகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Analyse the given proverb and specify the feeling that is centred around it.
  கொடுக்கப்பட்டுள்ள பழமொழி புலப்படுத்தும் மன உணர்வினை எடுத்துக் கூறுக.

- Question / item stem :
  கணக்குப் பிள்ளை பெண்சாதி
  கடுக்கன் போட்டுக் கொண்டாளென்று
  காரியக்காரன் பெண்சாதி
  காதை அறுத்துக் கொண்டாளாம்.

விடை: பொறாமை

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Approach - The feeling and the meaning depicted in proverb.
- Objective - ability level : To test analysis in terms of elements with reference to the feelings and the meaning depicted in proverb
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary
- Rationale : Analysis in terms of elements with reference to the feeling and meaning depicted in proverb is tested at the production level. *வெளிப்படுத்துதல் நிலையில், பழமொழியில் வெளிப்படும் உணர்வு மற்றும் பொருள் பற்றிய கூறுகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.*

* * *

314200 *COGNITIVE* / ANALYSIS / *ANALYSIS OF RELATIONSHIPS*

தொடர்பு

Analysis : Relationships
பகுத்தல் : தொடர்பு

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The similarity among the various literary works may be explained.
  பல்வேறு இலக்கியங்களுக்குள் உள்ள ஒற்றுமை பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read the following two statements carefully and choose a suitable answer.
  கீழ்வரும் இரண்டு கூற்றுக்களையும் கவனமாகப் படித்துப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

Question / item stem :

1. திருவள்ளுவர் இயற்றிய 'உழவு' அதிகாரத்துக்கும் கம்பர் இயற்றிய 'ஏர் எழுபதுக்கும்' ஒரு தொடர்பு இருக்கிறது.

2. ஆண்டாள் இயற்றிய 'திருப்பாவைக்கும்', மாணிக்கவாசகர் இயற்றிய 'திருவெம்பாவைக்கும்' ஒரு தொடர்பு இருக்கிறது.

இந்தத் தொடர்புக்குக் காரணம்

அ. பாட்டு எண்ணிக்கை

ஆ. போற்றுதல்

இ. எழுந்த காலம்

ஈ. பண்பாடு விளக்கம்

விடை: ஆ. போற்றுதல்

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Evolution- Similarity of generic contents
- Objective - ability level : To test analysis in terms of relationships with reference to similarity of generic contents.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Analysis in terms of relationships with reference to similarity of the generic contents is tested at the suitability level. பொருத்த நிலையில், பல்வேறு இலக்கியங்களுக்குள் உள்ள தொடர்புகளைப் பகுத்தல் தொடர்பு வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Relationships ➢ Generics
பகுத்தல் : தொடர்பு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The similarity and dissimilarity that prevail among various literary works may be explained.
  பல்வேறுவகை இலக்கியங்களுக்குள் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Answer the following question by choosing a correct one from the given alternatives.
  கீழ்க்காணும் வினாவுக்குப் பொருத்தமான கூற்றை கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து தேர்ந்தெடுக்க.

- Question / item stem :

  பத்துப்பாட்டிற்கும் மெய்க்கீர்த்திப்பாடல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை மனத்திற்கொண்டு, கொடுக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

  அ. பத்துப்பாட்டில் பெரும்பாலானவையும் மெய்க்கீர்த்திகளில் எல்லாமும் மன்னர்களைப் போற்றுவதாக அமைகின்றன.

  ஆ. பத்துப்பாட்டிலும் மெய்க்கீர்த்தியிலும் பிறமொழிக் கலப்பு மிகுந்துள்ளது.

  இ. மெய்க்கீர்த்திகள் மன்னர்களின் பெருமையைப் பாட பத்துப்பாட்டு மன்னர்களின் போர் வெற்றிகளைக் கூறுகின்றது.

  ஈ. மெய்க்கீர்த்திகள் பத்துப்பாட்டுக்கு முன்னோடியாய் அமைந்ததோடு, அக்கால மக்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துக்காட்டுகின்றன.

  விடை: அ. பத்துப்பாட்டில் பெரும்பாலானவையும் மெய்க்கீர்த்திகளில் எல்லாமும் மன்னர்களைப் போற்றுவதாக அமைகின்றன.

- Scoring procedure : Enumerative
- Literary input : Generics : Poetry - Comparability of similarity and difference of literature.

- Objective - ability level : To test analysis in terms of relationship with reference to comparability of similarity and difference of literature.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Analysis in terms of relationship with reference to comparability of similarity and difference of literature is tested at the suitability level.
  பொருத்த நிலையில், இலக்கியங்களுக்குள் உள்ள தொடர்புகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Relationships ➢ Aesthetics
பகுத்தல் : தொடர்பு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The artistic qualities available in Thirukkural may be explained.
  திருக்குறளில் உள்ள இலக்கிய நயத்தினை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Explain the features of love as found in the following couplet in relation to the aham concepts.
  கொடுக்கப்பட்டுள்ள குறட்பாவில் களவியல் கோட்பாட்டினை விளக்குவதாக அமைந்துள்ள நயத்தினைச் சுட்டிக் காட்டுக.

- Question / item stem :

  கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
  ஒண்டொடி கண்ணே உள.

  விடை: அகத்திணை இலக்கணக் கோட்பாட்டில் காணப்படும் மெய்யுறுபுணர்ச்சி அடிப்படையில் விளக்க வேண்டும்.

- Scoring procedure : Global quality scaling

- Literary input : Aesthetics : Aspects in isolation - Usage of rhymes
- Objective - ability level : To test analysis in terms of relationship with reference to the usage of rhymes.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Analysis in terms of relationship with reference to the usage of rhymes is tested at the production level.
  பொருத்த நிலையில், இலக்கியத்தில் ஒலிநயத்தின் பயன்பாடு பற்றிய தொடர்புகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Relationships ➢ Affectives
பகுத்தல் : தொடர்பு ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The trends and sequences as found in the story of Kamparamayanam may be explained.
  கம்பராமாயணக் கதைப்போக்கு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Based on the following verses, choose a suitable one from the given alternatives.
  கீழேயுள்ள பாடல்களின் அடிப்படையிலான கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்குரிய விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

- Question / item stem :

  தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
  ஈண்டு வந்து உனை இரந்தவர்க்கு இருநிதி அவளை
  வேண்டி ஈதியோ ? வெள்குதியோ ? விம்மல் நோயால்
  மாண்டு போதியோ ? மறுத்தியோ ? எங்ஙனம் வாழ்தி ?

காதல் உன்பெருங் கணவனை அஞ்சி அக்கனிவாய்ச்
சீதை தந்தை உன் தாதையைத் தெறுகிலன் இராமன்
மாதுலன் அவன்; நுந்தைக்கு வாழ்வு இனி உண்டோ ?
பேதை ! உன்துணை யார் உளர் பழிபடப் பிறந்தார் ?

கெடுத்து ஒழிந்தனை உனக்கு அரும் புதல்வனை ; கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன், ஒரு மகற்கு எனவே
கொடுத்த பேர் அரசு அவன் குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்; பிறர்க்கு ஆகுமோ ? என்றாள்.

– கம்பர்

இப் பாடல்களுள் மந்தரை கூறிய செய்திகளால், கைகேயியிடம் மனமாற்றம் ஏற்படக் காரணமாயிருந்த உணர்வு

அ. கோசலை பெருவாழ்வு பெறுதல்
ஆ. தன் மகனுக்கு இழப்பு ஏற்படுதல்
இ. இராமன் சிறப்படைதல்
ஈ. தன் சிறப்பு குன்றுதல்

விடை: ஆ. தன் மகனுக்கு இழப்பு ஏற்படுதல்

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Approaches - Causal emotion of incidence
- Objective - ability level : To test analysis in terms of relationship among various parts of the same epic.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Analysis in terms of relationship among various parts of the same epic is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், இலக்கியத்தில் இடம் பெறும் நிகழ்வுகளுக்கான உணர்ச்சிக் காரணி பற்றிய தொடர்புகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

314300 *COGNITIVE* / ANALYSIS / *ANALYSIS OF ORGANISATIONAL PRINCIPLES*

அமைப்புக் கொள்கைகள்

Analysis : Organisational Principles ➢ Genesis
பகுத்தல் : அமைப்புக் கொள்கைகள் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The excellance of Cilapathikaram may be explained.
  சிலப்பதிகாரக் காப்பியத்தின் பல்வேறு சிறப்புகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Answer the question as directed.
  கேட்டுள்ளபடி விடை எழுதுக.

- Question / item stem :

  'ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டுமாறு சிலப்பதிகாரம் விளங்குகிறது' என்னும் கூற்றை அவ்விலக்கியத்தின் வடிவம் மற்றும் உட்கூறுகள் வாயிலாக விளக்குக.

  விடை: காண்டப் பெயர்கள், தமிழகத்தின் மூன்று நாடுகள், நாட்டுச்சிறப்பு, மன்னர் சிறப்பு, சமயப்பொதுமை போன்றவற்றை எடுத்துக்கூறி ஒருமைப்பாட்டுக் கூறுகளை பொருத்திக் காட்டுதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evolution - Generic contents of an epic
- Objective - ability level : To test analysis in terms of organisational principles with reference to the generic contents of an epic.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General Educational Level : L_1 - Postgraduate

- Rationale : Analysis in terms of organisational principles with reference to the generic contents of an epic is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், ஒரு காப்பியத்தின் வகைமை உள்ளடக்கம் பற்றிய அமைப்புக் கொள்கைகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Organisational Principles ➢ Generics
பகுத்தல் : அமைப்புக் கொள்கைகள் ➢ வகைமையியல்

- Instruction to the teacher :

  The interrelatedness among various features of a festival, may be explained.
  ஒரு விழா தொடர்பான பல்வேறு கூறுகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Based on the information bits, answer the question by choosing a suitable one from the given alternatives.
  கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில், அடுத்து வரும் வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

- Question / item stem :

  துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்ட சில கடிதப்பகுதிகள் வழியில் கிடந்தன. அவற்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தபொழுது கீழ்க்காணும் சொற்களும் தொடர்களும் காணப்பட்டன.

  சிறப்பு – நேரம் – காலை 8 மணி – தலைமை – வருக – ஒத்துழைப்பு – விழா – அனைவரும் – குடியரசு – கொண்டாட – இடம்

  முழுத்தாளில் எழுதப்பட்ட செய்தி எப்பொருள் பற்றியதாக இருக்கும் எனக்கூறுக.

  அ. குடியரசுவிழா வரலாறு

  ஆ. குடியரசுவிழா அறிக்கை

  இ. குடியரசுவிழா அழைப்பு

  ஈ. குடியரசுவிழாச் சொற்பொழிவு

விடை: அ. குடியரசுவிழா அழைப்பு

- Scoring procedure : Enumerative
- Literary input : Generics : Prose - Contents of an invitation
- Objective - ability level : To test analysis in terms of organisational principles with reference to the contents of an invitation.
- Name of the item format : Objective category - Multiple Choice
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Analysis in terms of organisational principles with reference to the contents of an invitation is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், ஓர் அழைப்பிதழின் உள்ளடக்கம் பற்றிய அமைப்புக் கொள்கைகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Organisational Principles ➢ Aesthetics
பகுத்தல் : அமைப்புக் கொள்கைகள் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  Various elements of aesthetics available in Kamparamayanam may be explained.
  கம்பராமயணத்தில் உள்ள பல்வேறு முருகியல் கூறுகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read the given verses carefully and answer the questions appropriately.
  கொடுக்கப்பட்டுள்ள பாடல்களைக் கவனமாகப் படித்து அடுத்துவரும் வினாவிற்குப் பொருத்தமான விடை தருக.

- Question / item stem :

  தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
  ஈண்டு வந்து உனை இரந்தவர்க்கு இருநிதி அவளை
  வேண்டி ஈதியோ ? வெள்குதியோ ? விம்மல் நோயால்
  மாண்டு போதியோ ? மறுத்தியோ ? எங்ஙனம் வாழ்தி ?

காதல் உன்பெருங் கணவனை அஞ்சி அக்கனிவாய்ச்
சீதை தந்தை உன் தாதையைத் தெறுகிலன் இராமன்
மாதுலன் அவன்; நுந்தைக்கு வாழ்வு இனி உண்டோ ?
பேதை ! உன்துணை யார் உளர் பழிபடப் பிறந்தார் ?

கெடுத்து ஒழிந்தனை உனக்கு அரும் புதல்வனை ; கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒரு மகற்கு எனவே
கொடுத்த பேர் அரசு அவன் குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ ? என்றாள்.

– *கம்பர்*

இராமனுக்கு முடி சூட்டாது, பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று கைகேயியின் மனத்தை மாற்றுமளவிற்கு அமைந்த மந்தரையின் கருத்துமிக்க உரைச்சுருக்கம் யாது ?

விடை:
1. கைகேயி தனக்கு ஏற்படும் இழப்பு
2. கைகேயியின் தந்தைக்கு ஏற்படும் இழப்பு
3. மகன் பரதனுக்கு ஏற்படும் இழப்பு ஆகியவற்றை நிரன்முறையாக அமைத்தமை.

- Scoring procedure : Enumerative
- Literary input : Aesthetics : Aspects in isolation - Usage of aesthetic elements.
- Objective - ability level : To test <u>analysis</u> in terms of organisational principles with reference to the usage of aesthetic elements.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : <u>Analysis</u> in terms of organisational principles with reference to the usage of aesthetic elements is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், ஓர் இலக்கியத்தில் முருகியல் கூறுகளின் பயன்பாடு பற்றிய அமைப்புக் கொள்கைகளைப் பகுத்தல் வாயிலாகப் <u>பகுத்தல் இயலுமை</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Analysis : Organisational Principles ➢ Affectives
பகுத்தல் : அமைப்புக் கொள்கைகள் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The influence of the feeling of love in the poems may be explained.
  கவிதைகளில் காதல் உணர்வு ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Explain the intention of the poet on the feeling of love in the light of the following poem.
  காதல் பற்றிய புலவரின் உட்கருத்தைக் கொடுக்கப்பட்டுள்ள பாடலில் இருந்து புலப்படுத்துக.

- Question / item stem :
  வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
  சாரல் நாட செவ்வியை ஆகுமதி
  யாரஃ தறிந்திசி னோரே சாரல்
  சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கிவள்
  உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே
  — குறுந்தொகை

  விடை: காதல் வலிமை – உயிரை விட மிகுதி.

- Scoring procedure : Global quality
- Literary input : Affectives : Ideologies - Thematic consideration
- Objective - ability level : To test analysis in terms of organisational principles with reference to thematic consideration of a poet.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Analysis in terms of organisational principles with reference to thematic consideration of a poet is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில் ஒரு புலவரின் கருத்துச் சார்பு பற்றிய அமைப்புக் கொள்கைகளைப் பகுத்தல் வாயிலாகப் பகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

315000 *COGNITIVE* / ***SYNTHESIS***
தொகுத்தல்

315100 *COGNITIVE* / SYNTHESIS / ***PRODUCTION OF UNIQUE COMMUNICATION***
தனித்தகவல் உருவாக்கல்

Synthesis : Production of Unique Communication ➢ Genesis
தொகுத்தல் : தனித்தகவல் உருவாக்கல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The rights of women in the society may be explained.
  சமுதாயத்தில் பெண்ணுரிமை பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  The beginning and the end of a short story are given below. Keeping in mind these two, complete the story by inserting appropriate points on the rights of women.
  ஒரு சிறுகதையின் தொடக்கமும் முடிவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பெண் உரிமை தொடர்பான குறிப்புக்களைக் கொண்டு கதைப் பகுதியை நிறைவு செய்க.

- Question / item stem :

  எப்படியாவது தன்மகள் கமலாவிற்குத் திருமணம் செய்து வைப்பதில் தம் வாழ்க்கையின் இலட்சியம் இருப்பதாகக் கருதிய வாசுதேவன், அப்படியே திருமணம் சங்கரோடு நிகழ்ந்ததற்காகப் பெருமைப் பட்டார் .... (தொடக்கம்)

  நடந்ததை எல்லாம் ஒரு கனவாக நினைத்து மறந்த கமலா தன் புதிய வாழ்வைப் பார்த்தசாரதியோடு தொடங்கினாள். .... (முடிவு.)

  விடை: கமலா திருமணம் – இளம் வயதில் கணவன் இழப்பு – தனிமையின் கொடுமை தந்தை வாசுதேவனின் தவிப்பு – மறுமணப் பேச்சு – உறவினர் எதிர்ப்பு – புரட்சி மறுமணம் – புதியவாழ்வின் தொடக்கம்.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Background - Rights of women & equality

- Objective - ability level : To test synthesis in terms of production of unique communication with reference to rights of women & equality.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Sythesis in terms of production of unique communication with reference to rights of women & equality.
  வெளிப்படுத்துதல் நிலையில், பெண்ணுரிமை பரப்புதல் பற்றிய தனித் தகவல் உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of Unique Communication ➢ Generics
தொகுத்தல் : தனித்தகவல் உருவாக்கல் ➢ வகைமையியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :
  The four major metres of Tamil prosody may be explained.
  தமிழின் முக்கிய நான்கு பா அமைப்புகள் பற்றி விளக்கிக் கூறலாம்.
- Instruction to the student :
  Write a five line 'aciriyappa (poem) on the basis of the given notes.
  கீழ்க்காணும் குறிப்பைக் கொண்டு ஐந்தடிகளைக் கொண்ட ஓர் ஆசிரியப்பா புனைக.
- Question / item stem :
  முழு நிலா இரவு. அமைதியான நேரம். வீட்டு மொட்டை மாடியின் மேலிருந்து நிலாவையும் நிலத்தையும் காண்கிறீர்கள். உங்களுக்குள் ஒரு நேரிசை ஆசிரியப்பா முகிழ்க்கிறது. அதன் முதலடி :

  நிலாவின் பாலொளி நிலமெலாம் வீழ்ந்திட ,

  ....

விடை மாதிரி : நிலாவின் பாலொளி நிலமெலாம் வீழ்ந்திட
வெண்மணல் விளங்கும் ஆற்றின் கரையில்
உலகம் விளங்கும் இரவினில் ஒருநாள்
இதயங்குளிர வருவாய் என்றே
காதல் தோழியே காத்திருப் பேனே.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Composing a poem according to the rules of Tamil prosody.
- Objective - ability level : To test <u>synthesis</u> in terms of production of unique communication with reference to composing of a poem, according to as per the rules of the prosody.
- Name of the item format : Subjective category - Completion
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : <u>Synthesis</u> in terms of production of a unique communication with reference to composing of a poem, as per the rules of Tamil prosody, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், தமிழ் செய்யுளியல் விதிகளுக்கேற்ப கவிதை எழுதுதல் பற்றிய தனித் தகவல் உருவாக்கல் வாயிலாகத் <u>தொகுத்தல் இயலுமை</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of Unique Communication ➢ Aesthetics
தொகுத்தல் : தனித்தகவல் உருவாக்கல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The process of writing essays in an artistic way, may be explained.
  இலக்கிய நயத்துடன் கட்டுரைகள் எழுதும் முறை பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Write an essay with humour by making use of the following hints on a travel by train.
  கீழேயுள்ள குறிப்புக்களைக் கொண்டு இரயில் பயணம் பற்றிய நகைச்சுவைக் கட்டுரை ஒன்று எழுதுக.

- Question / item stem :

  இரயில் பயணம் – பயணம் செய்த பெட்டி பழைய பெட்டி. பல குழந்தைகள் உடன் பயணம் – பலவித இடையூறுகளுடன் பயணம்.

விடை: பயணம் பற்றிய நிகழ்ச்சிக்கோவை – சுவையான சம்பவங்களுடன் பொருத்தமான கட்டுரை எழுதப்பட வேண்டும்

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Discourse - Essay writing based on the given hints
- Objective - ability level : To test synthesis in terms of production of unique communication with reference to essay writing.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Synthesis in terms of production of unique communication with reference to essay writing, is tested at production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், சுவைபடக் கட்டுரைகள் எழுதும் பாங்கு பற்றிய தனித்தகவல் உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of Unique Communication ➢ Affectives
தொகுத்தல் : தனித்தகவல் உருவாக்கல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The expression of one's feelings through letter writing may be explained.
  கடிதங்கள் வாயிலாக எழுதுவோரின் உணர்வுகள் வெளிப்படுவதை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Assuming that you are a student leader, address a letter to the college principal in about 300 words by taking into account the following hints.
  நீங்கள் ஒரு மாணவர் தலைவர் எனக் கருத்திற்கொண்டு கீழ்க்காணும் குறிப்புக்களை வைத்துக் கல்லூரி முதல்வருக்கான கடிதம் ஒன்றினைச் சுமார் 300 சொற்களில் எழுதுக.

- Question / item stem :

  குறிப்புக்கள் :

  மாணவர்களிடையே எழும் சிக்கல்களுள் ஒன்றினைத் தேர்ந்தெடுத்தல் – மாணவரின் உணர்வினைக் காரணகாரியத் தொடர்பு கொண்டு விளக்குதல் – இணக்கமான தீர்வுகளைக் குறிப்பிட்டுக் காட்டுதல் –

  விடை: கடித அமைப்பு மற்றும் வடிவினைப் பின்பற்றி எழுதப்பட வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Relation to other fields - Letter writing.
- Objective - ability level : To test synthesis in terms of unique production with reference to letter writing.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Synthesis in terms of unique production with reference to letter writing is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், கடிதம் எழுதும் பாங்கு பற்றிய தனித்தகவல் உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

315200 *COGNITIVE / SYNTHESIS* / *PRODUCTION OF A PLAN OR PROPOSED SET OF OPERATIONS*

திட்டம் அல்லது செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல்

Synthesis : Production of a Plan or Proposed set of Operations ➢ Genesis

தொகுத்தல் : திட்டம் (அ) செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The matching expressions of the poets in tune with the changes that take place in society may be explained.

  மாறிவரும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கேற்ப கவிஞர்களின் ஒத்த கவிதை வெளிப்பாடு அமைவதை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Answer the given question suitably.

  கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமாக விடை தருக.

- Question item :

  கீழ்க்காணும் செய்திகளின் அடிப்படையில் இலக்கியப் படைப்-பாளர் சமுதாயத்திற்குக் கூறுவன யாவை ?

  செய்திகள் :

  அ. பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய், திருவருள் வளத்தால் கிடைத்த தொன்-மொழி ஒன்றிடத்து மனம் பற்றச்செய்து அத்தொன்மொழியால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாவித்தருளினீர்.

  – வள்ளலார்

  ஆ. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்
  தொழுது படித்திடடி பாப்பா.

  – பாரதியார்

இ. தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் தொண்டு செய்வீர்.

– பாரதிதாசன்

விடை: மொழிப் பயன்பாடு, மொழி உயர்வு , கருத்து வளர்ச்சி, மொழி வளர்ச்சி.

- Scoring procedure : Global quality scaling
- Literary input : Genesis : Background - Trends and Movements for the upliftment of Tamil.
- Objective - ability level : To test synthesis in terms of production of a plan or proposed set of operation with reference to the trends and movements for the upliftment of Tamil.
- Name of the item format : Subjective category -Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Synthesis in terms of production or a plan of proposed set of operation with reference to the trends and movements for the upliftment of society is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய போக்கும் இயக்கமும் பற்றிய திட்டம் அல்லது செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of a Plan or Proposed set of Operations ➢ Generics

தொகுத்தல் : திட்டம் (அ) செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The metres in Tamil prosody may be explained.
  தமிழ்ப் பாக்களின் சீர் வகைகளைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Complete the poem by suitably filling the blanks on the basis of the given hints.
  கீழ்வரும் பாடலிலுள்ள கோடிட்ட இடங்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக் கொண்டு பொருத்தமான சீர்களால் நிறைவு செய்க.

- Question / item stem :

  செங்கதிர் வெம்மை தணிந்ததடி – வாசத்
  தென்றல் உலாவி எழு __1__

  பொங்கி வருஞ் சோணை மாநதியும் – ஒரு
  __2__ நிறம் பெற்றுப் பொலிந்ததடி

  முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி– ஆம்பல்
  மூடிய வாயும் திறந்ததடி

  எல்லை யிலாம வர்ச் சோலையில் – வண்டும்
  இன்னிசை பாடித் __3__

  தாயும் இறங்கி வருகுதடி – கன்றும்
  __4__ குதித் தோடிச் செல்லுதடி

  ஆயும் பொழிலில் பறவையெல்லாம் – அந்தி
  அங்காடி போல ஒலிக்குதடி

  – கவிமணி

  குறிப்பு : இயைபுத் தொடையில் அமைதல், அடிமடக்கு மோனை பெற்றிருத்தல் – மாலைக்கால வருணனையாக அமைதல் – மகடூஉ முன்னிலையாக அமைதல்

  விடை: 1–(எழு)ந்ததடி 2–பொன்(நிறம்)
  3–திரிந்ததடி 4–தாவி

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Composing a poem according to the rules of Tamil prosody.
- Objective - ability level : To test synthesis in terms of production of a plan or proposed set of operations with reference to composing a poem according to rules of Tamil prosody.
- Name of the item format : Subjective category - Completion
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate

- Rationale : Synthesis in terms of production of a plan or proposed set of operations with reference to writing a poem according to the rules of Tamil prosody, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், இலக்கண விதிகளுக்கேற்ப கவிதை எழுதுதல் பற்றிய திட்டம் அல்லது செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of a Plan or Proposed set of Operations ➢ Aesthetics

தொகுத்தல் : திட்டம் (அ) செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The characteristics of a hero as depicted in various literary works may be explained.
  தலைவனுக்குரிய பண்புகளாகப் பல்வேறு இலக்கியங்கள் கூறுவனவற்றை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  State the five essential characteristics of a hero in the light of the following poems.
  கீழ்வரும் பாடல்களின் அடிப்படையில் ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய தலையாய பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

- Question / item stem :

1. வானூறு மதியை அடைந்ததுன் வதனம்
   மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
   கானூறு புலியை அடைந்த துன்வீரம்
   கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
   தேனூறு மலராள் அரியிடம் புகுந்தாள்
   செந்தழல் அடைந்ததுன் தேகம்
   நானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்
   நந்தியே நந்தயா பரனே!

   – நந்திக்கலம்பகம்

2. பொருதடக்கை வாளெங்கே மணிமார்பெங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்.
– கலிங்கத்துப்பரணி

விடை: அழகு, புகழ், வீரம், ஈகை, செல்வம், புறங்கொடாத் தன்மை ஆகிய குறிப்புகள் இடம்பெற வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics - Aesthetics in isolation - General Characteristics of a literary hero.
- Objective - ability level : To test synthesis in terms of production of a plan or proposed set of operations with reference to the general characteristics of a hero as depicted in literature.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Synthesis in terms of production of a plan or proposed set of operations with reference to the general characteristics of a hero as depicted in literature is tested at the production level.
வெளிப்படுத்துதல் நிலையில், இலக்கியங்கள் சித்தரிக்கும் தலைவனின் பொதுப் பண்புகள் பற்றிய திட்டம் அல்லது செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Production of a Plan or Proposed set of Operations ➢ Affectives

தொகுத்தல் : திட்டம் (அ) செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
The uses of essay forms to effectively highlight emotional feelings may be explained.

சமுதாய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குக் கட்டுரை வடிவங்கள் எந்த அளவுக்குப் பயன்படுகின்றன என்பதைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  List atleast five essential information to be included in the following editorial.
  கீழேயுள்ள தலையங்கத்தில் இடம்பெற வேண்டிய ஏதேனும் ஐந்து இன்றியமையாத செய்திகளை வரிசைப்படுத்துக.

- Question item :

  இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவு

  விடை:
  1. உயிர்ச்சேதம்
  2. பொருட் சேதம்
  3. மக்களின் துயரம்
  4. பசியும் பட்டினியும்
  5. உறைவிடமின்மை
  6. தூக்கம் இன்மை
  7. கல்விச் சீரழிவு

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Relation to other fields - narrating the sufferings of the people due to natural calamity.
- Objective - ability level : To test synthesis in terms of production of a plan or a set of operations with reference to narrating the sufferings of the people due to natural calamity.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Post graduate
- Rationale : Synthesis in terms of production of a plan or a set of operations with reference to narrating the sufferings of the people due to natural calamity is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், இயற்கைச் சீற்றத்தால் வாடும் மக்களின் நிலையைச் சித்தரிக்கும் பாங்கு பற்றிய திட்டம் அல்லது செயல்பாட்டுத் தொகுதி உருவாக்கல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

315300 *COGNITIVE* / SYNTHESIS / ***DERIVATION OF A SET OF ABSTRACT RELATION***
நுண்தொடர்பு வருவித்தல்

Synthesis : Derivation of a set of Abstract Relation ➢ Genesis
தொகுத்தல் : நுண்தொடர்பு வருவித்தல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The similarity in the ideas of poets belonging to various periods may be explained with examples.
  பல்வேறு காலங்களைச் சேர்ந்த கவிஞர்களின் கருத்தொற்றுமை பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Give the themes of the following poems under a common title.
  கொடுக்கப்பட்டுள்ள நான்கு பாடல்களின் கருத்துகளையும் அவற்றுக்கான ஒரு பொதுத் தலைப்பினையும் தருக.

- Question / item stem :

  1. நாடா கொன்றோ காடா கொன்றோ
     அவலா கொன்றோ மிசையா கொன்றோ
     எவ்வழி நல்லவர் ஆடவர்
     அவ்வழி நல்லை வாழிய நிலனே. – ஔவையார்

  2. பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
     மண்புக்கு மாய்வது மன். – திருவள்ளுவர்

  3. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
     செத்தாருள் வைக்கப் படும். – திருவள்ளுவர்

  4. தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
     சகத்தினை அழித்திடுவோம். – பாரதியார்

விடை: பொதுத்தலைப்பு : மக்கள் இயல்பு

1. நல்லவராய் வாழ்தல்
2. பண்பாளராய் வாழ்தல்
3. ஒப்புரவு உடையராய் வாழ்தல்
4. தேவைகள் நிறைவேறா நிலையில் எழுச்சி

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Background - naming of poetry
- Objective - ability level : To test synthesis in terms of derivation of a set of abstract relation with reference to naming of poetry.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Synthesis in terms of derivation of a set of abstract relation with reference to naming of poetry is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், கவிதைத் தலைப்பிடும் பாங்கு பற்றிய நுண்தொடர்பு வருவித்தல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Derivation of a set of Abstract Relation ➢ Generics
தொகுத்தல் : நுண்தொடர்பு வருவித்தல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The trends of social thinking that were in existence from time to time, may be explained.
  பல்வேறு காலகட்டங்களில் நிலவிவந்த சமுதாயச் சிந்தனைப் போக்கினை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Choose the suitable message depicted in the given poetic line.
  கொடுக்கப்பட்டுள்ள பாடல் வரிகளில் பொதிந்துள்ள உட்கருத்தை எழுதுக.

- Question / item stem :

  தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
  சகத்தினை அழித்திடுவோம்.

  – பாரதியார்

விடை: அனைவருக்கும் உணவு கிடைத்திடும் வகையில் உலகம் அமைய வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics - Poetry - The contents and themes depicted in a poem
- Objective - ability level : To test synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the contents and themes depicted in a poem.
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the contents and themes of a poem, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், ஒரு கவிதையின் உள்ளடக்கமும் கருவும் பற்றிய நுண்தொடர்பு வருவித்தல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Derivation of a set of Abstract Relation ➢ Aesthetics
தொகுத்தல் : நுண்தொடர்பு வருவித்தல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The aesthetic features adapted by the poets to express their ideas may be explained.
  தங்கள் கருத்தை வெளிப்படுத்தக் கவிஞர்கள் கையாண்ட முருகியல் கூறுகள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Specify the approaches adopted by the poets to convey their message through the following poems.
  தங்கள் கருத்தை வெளிப்படுத்தக் கீழ்வரும் பாடல்களில் கவிஞர்கள் கையாளும் அணுகுமுறைகளைக் குறிப்பிடுக.

- Question / item stem :

  1. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
  கெடுக உலகியற்றி யான். – திருவள்ளுவர்

  2. தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
  சகத்தினை அழித்திடுவோம். – பாரதியார்

  விடை: 1. வள்ளுவர் : மென்மை – சாபமிடுதல்
  2. பாரதியார் : வன்மை – சூளுரைத்தல்

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Asepects in isolation - Approach adopted by poets.
- Objective - ability level : To test synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the approach adopted by poets.
- Name of the item format : Subjective category - Simple Question
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the aproach adopted by poets, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், உணர்வுகளை வெளிப்படுத்தக் கவிஞர்கள் கையாண்ட அணுகுமுறை பற்றிய நுண்தொடர்பு வருவித்தல், வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Synthesis : Derivation of a set of Abstract Relation ➢ Affectives
தொகுத்தல் : நுண்தொடர்பு வருவித்தல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The experiences of life are the sources for creation of poetry. This may be explained with illustrations.

வாழ்க்கை அனுபவம்தான் கவிதைக்குத் தூண்டுகோலாக அமைகிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  The thinking of the people is the determining factor for the literary approaches. Highlight this fact through the following poems.
  மக்களின் எண்ணப்போக்கு இலக்கிய அணுகு முறைக்கு அடிப்படையாக அமைகிறது என்பதைக் கீழ்க்காணும் பாடல்களின் அடிப்படையில் வெளிப்படுத்துக.

- Question item :

  1. நாடாகொன்றோ காடாகொன்றோ
     அவலாகொன்றோ மிசையாகொன்றோ
     எவ்வழி நல்லவர் ஆடவர்
     அவ்வழி நல்லை வாழிய நிலனே. – ஔவையார்

  2. பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
     மண்புக்கு மாய்வது மன். – திருவள்ளுவர்

  3. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
     செத்தாருள் வைக்கப் படும். – திருவள்ளுவர்

  4. தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
     சகத்தினை அழித்திடுவோம். – பாரதியார்

விடை: எண்ணப்போக்கு – அணுகுமுறை

1. உலக நலம் – ஆடவர் பண்பு
2. மக்கள் பண்பு – கூற்று வெளிப்பாடு
3. மக்கள் பண்பு – கூற்று வெளிப்பாடு
4. அனைவருக்கும் உணவு – புரட்சி முழக்கம்

சிறு விளக்கங்களுடன் தரப்படவேண்டும்

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - Depiction of society (realism) in the literature

- Objective - ability level : To test synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the depiction of society.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Post graduate
- Rationale : Synthesis in terms of derivation of a set of abstract relation with reference to the depiction of society is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், இலக்கியங்களில் சமுதாயத்தைச் சித்தரிக்கும் பாங்கு பற்றிய நுண் தொடர்பு வருவித்தல் வாயிலாகத் தொகுத்தல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

316000 *COGNITIVE* / **EVALUATION**
மதிப்பிடல்

316100 *COGNITIVE* / EVALUATION / **JUDGEMENTS IN TERMS OF INTERNAL EVIDENCE**
அகச்சான்றுவழி முடிவுரைத்தல்

Evaluation : Judgements in terms of Inter. Evidence ➢ Genesis
மதிப்பிடல் : அகச்சான்றுவழி முடிவுரைத்தல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The quotative particles used in the grammatical rules of the traditional Tamil grammars may be explained.
  மரபு இலக்கணங்களில் உள்ள நூற்பாக்களில் காணப்படும் எடுத்துக்காட்டுக்களுக்கான இடைச் சொற்கள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Answer the question as directed.
  கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கேற்ப விடை தருக.

- Question / item stem :

  தொல்காப்பியத்திற்கு முன்னரே பல இலக்கணநூல்கள் இருந்தன என்பதனைத் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டு நிறுவுக.

  விடை: என்ப, மொழிப, என்மனார் புலவர், உணர்ந்தோர் கண்ட– வாறே ஆகிய சொற்கள் பயின்று வரும் நூற்பாக்களின் அடிப்படையில் சான்றுகள் கொடுக்கப்பட வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evoln. - Origin of grammatical works.
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of internal evidence with reference to the origin of grammatical works.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate & Research
- Rationale : Evaluation (judgement) in terms of internal evidence with reference to the origin of grammatical works is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், இலக்கண நூல்களின் தோற்றம் பற்றிய அகச்சான்று வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaluation : Judgements in terms of Inter. Evidence ➢ Generics
மதிப்பிடல் : அகச்சான்றுவழி முடிவுரைத்தல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The general structure of epic works may be explained.
  காப்பியங்களின் பொதுவான அமைப்பு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Establish the validity of the following statement in terms of internal evidence.
  கொடுக்கப்பட்டுள்ள கூற்றின் உறுதிப்பாடு பற்றிய உங்கள் முடிவினை அகச்சான்று வழி நிறுவுக.

- Question / item stem :
  சிலப்பதிகாரம் ஒரு பெருங் காப்பியம் என்பதை அதன் அமைப்பே வெளிப்படுத்துகிறது.

  விடை: காண்டப் பெயர்கள் – தமிழ்நாட்டின் மூன்று நிலப் பகுதிகள்– மூன்று மன்னர்கள் – மூன்று நாட்டு மக்களின் பழக்கவழக்கங்கள் – கதை நிகழ்ச்சி மூன்று நாடுகளில் – இயல், இசை, நாடகம் அமைப்பு – போன்ற செய்திகள் தரப்பட வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Forms and Structures of epic
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of internal evidence with reference to the structure of an epic.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Evaluation (judgement) in terms of internal evidance with reference to the structure of an epic, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், காப்பியத்தின் கட்டமைப்பு பற்றிய அகச்சான்று வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaln. : Judgements in terms of Internal Evidence ➢ Aesthetics
மதிப்பிடல் : அகச்சான்றுவழி முடிவுரைத்தல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The usage of pun (paronomasia) in poetry may be explained.
  செய்யுள்களில் சிலேடையின் பயன்பாடு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Establish the validity of the following statement in terms of internal evidence.
  கொடுக்கப்பட்டுள்ள கூற்றின் உறுதிப்பாட்டைப் பற்றிய உங்கள் முடிவினை அகச்சான்றுவழி நிறுவுக.

- Question / item stem :

  'செய்திகளை நயம்பட உரைப்பதற்குச் சிலேடைச் செய்யுளுள் சந்தி அமைப்புக்கள் உதவுகின்றன'

  சங்கரற் குமாறுதலை சண்முகற்கு மாறுதலை!
  ஐங்கரற்குமாறுதலை யானதே – சங்கைப்
  பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா நின்பாதம்
  பிடித்தோர்க்கு மாறுதலைப் பார்.

  – காளமேகப்புலவர்

  விடை: ஆறு தலையில் உள்ளது, ஆறு தலைகள் மாறிய தலை, ஆறுதல் போன்ற தொடர்களை விளக்குதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics - Aesthetics in isolation - Form and Structure
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of internal evidence with reference to the form and structure of paronomasia (poetry of multiple meaning).
- Name of the item format : Subjective category - Short Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Evaluation (judgement) in terms of internal evidence with reference to the form and structure of paronomasia, is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், பலபொருள் சிலேடையின் வடிவம் மற்றும் கட்டமைப்பு பற்றிய அகச்சான்று வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaluation : Judgements in terms of Inter. Evidence ➢ Affectives
மதிப்பிடல் : அகச்சான்றுவழி முடிவுரைத்தல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The manner in which one's feelings are expressed through letter writing may be explained.
  கடிதங்கள் வாயிலாக எழுதுவோரின் உணர்வுகள் வெளிப்படுத்தப்-படுவதை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Establish the validity of the following statement in terms of internal evidence.
  கொடுக்கப்பட்டுள்ள கூற்றின் உறுதிப்பாட்டைப் பற்றிய உங்கள் முடிவினை அகச்சான்றுவழி நிறுவுக.

- Question item :

  ' தம்பிக்கு ' என்னும் தலைப்பில் அறிஞர் அண்ணா எழுதிய கடிதங்கள் அவரது அரசியலறிவைப் பாசப்பிணைப்போடு வெளிப்படுத்துகின்றன.

  விடை: கடிதங்களில் அடங்கியுள்ள செய்திகள், தம்பியர் பற்றி பரிவுடன் கூறும் விதம் – தன்னைப் பற்றிக் கூறல் – அண்ணன் தம்பி போன்ற பாசப்பிணைப்பான சொற்கள் – போன்றனவற்றை விளக்குதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Affective : Approaches - Style and Content of letter written by a political leader.
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of internal evidence with reference to the style and control of letter written by a political leader.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Post graduate

- Rationale : Evaluation (judgement) in terms of internal evidence with reference to the style and contents of letter written by a political leader, is tested at the production level.
வெளிப்படுத்துதல் நிலையில், ஓர் அரசியல் தலைவரின் கடிதத்தின் நடை மற்றும் உள்ளடக்கம் பற்றிய அகச்சான்று வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

316200 *COGNITIVE* / EVALUATION / ***JUDGEMENT IN TERMS OF EXTERNAL CRITERIA***

புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல்

Evaluatin : Judgements in terms of External Criteria ➢ Genesis
மதிப்பிடல் : புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

The origin and development of self respect movement may be explained.
சுயமரியாதை (தன்மான) இயக்கத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

Establish the validity of the following statement in terms of external criteria.
கொடுக்கப்பட்டுள்ள கூற்றின் உறுதிப்பாட்டைப் பற்றிய உங்கள் முடிவினைப் புறத்தகுநிலைவழி நிறுவுக.

- Question / item stem :

பாரதிதாசன், கவிஞர் சுரதா ஆகியோரின் படைப்புகள் வாழ்க்கைப் பிரச்சினைகளோடு இணைந்து உருவாகச் சுயமரியாதை (தன்மான) இயக்கம் உதவியது.

விடை: 1. படைப்புகள் பற்றிய சுருக்கக் குறிப்பு –
2. தன்மான இயக்கக் கொள்கைகளைப் பற்றிய குறிப்புகள்
3. பாரதிதாசன் மற்றும் சுரதா படைப்புகளுக்கான வாழ்க்கைப் பின்னணிகள்
4. அக்காலகட்டத்தில் நிலவிவந்த மூடப் பழக்க வழக்கங்கள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள் போன்ற கருத்துக்கள் கட்டுரையில் இடம் பெற வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis - Evolution - Origin : Generic contents
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of external criteria with rference to generic contents influenced by self respect movement.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Evaluation (judgement) in terms of external criteria with reference to generic contents influenced by self respect movement, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், தன்மான இயக்கத்தின் தாக்கத்தோடு உருவான வகைமை உள்ளடக்கம் பற்றிய புறத்தகு நிலைவழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaluation : Judgements in terms of External Criteria ➢ Generics
மதிப்பிடல் : புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The general style and structure of minor literary works in Tamil may be explained.
  சிற்றிலக்கியங்களின் பொதுவான மொழிநடை, அமைப்பு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Establish the validity of the following statement in terms of external criteria.
  கொடுக்கப்பட்டுள்ள கூற்றின் உறுதிப்பாடு பற்றிய உங்கள் கருத்தைப் புறத்தகுநிலைவழி நிறுவுக.

- Question / item stem :
  இலக்கியங்களில் பள்ளு, அல்லது குறவஞ்சி அமைப்பு, மொழிநடை ஆகியன அவற்றின் பாடுபொருளுக்கு ஏற்றவாறு அமைகின்றன.

விடை: பள்ளு, குறவஞ்சி இலக்கியங்களில் எளிய சொல்லாட்சி – இசையமைப்பு – கூற்றுமுறை – பாடுபொருளுக்கு ஏற்ப அமைந்துள்ளன என்பதைப் புறநிலை எடுத்துக் காட்டுகளுடன் நிறுவுதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Form and Structure of other varieties (minor literature)
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of external criteria with reference to form and structure of other varieties (minor literature)
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Evaluation (judgement) in terms of external criteria with reference to form and structure of other varieties (minor literature) is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், சிற்றிலக்கியத்தின் வடிவம் மற்றும் கட்டமைப்பு பற்றிய புறத்தகுநிலை வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaluation : Judgements in terms of External Criteria ➢ Aesthetics
மதிப்பிடல் : புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The general features of aesthetics available in the film songs may be explained.
  திரை இசைப்பாடல்களில் காணப்படும் பொதுவான முருகியல் கூறுகள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Establish the validity of the following statement in terms of external criteria.
  பின்வரும் கூற்றின் உறுதிப்பாடு பற்றிய உங்கள் முடிவினை புறத்தகுநிலைவழி நிறுவுக.

- Question / item stem :

  திரை இசைப் பாடல்களில், இசை முதன்மை பெறினும் கதைச் சூழலுடன் பொருந்தி வரும் சொல்லாட்சியே முருகியல் உணர்வின் அடிப்படையாகிறது.

  விடை: இசையின் சிறப்புக் கூறல் – பாடலின் கதையமைப்போடு கலந்த பாடலின் சொல்லாட்சிப் பற்றி எடுத்துக்காட்டல் – ஒப்புமைகாட்டித் தனது கருத்தினை புறத்தகுநிலை வழி நிறுவுதல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics - aspects in isolation - Usage of various aesthetic elements.
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of external criteria with reference to the usage of various aesthetic elements.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Post graduate
- Rationale : Evaluation (judgement) in terms of external criteria with reference to the usage of various aesthetic elements, is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், பல்வேறு முருகியல் கூறுகளின் பயன்பாடு பற்றிய புறத்தகுநிலை வழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Evaluation : Judgements in terms of External Criteria ➢ Affectives
மதிப்பிடல் : புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The emergence of jokes as a reflection of day to day events, may be explained.
  சிரிப்புத் துணுக்குகள் பெரும்பாலும் அன்றாட நடை முறைகளின் வெளிப்பாடாக இருப்பதைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Establish the validity of the following statement in terms of external criteria.
  பின்வரும் கூற்றின் உறுதிப்பாடு பற்றிய உங்கள் முடிவினைப் புறத்தகுநிலை வழி நிறுவுக.

- Question / item stem :

  பத்திரிகைகளில் வரும் சிரிப்புத் துணுக்குகள் அன்றாட நடைமுறை-களின் பாதிப்புகளைப் பிரதிபலிக்கின்றன.

  விடை: சிரிப்புத் துணுக்குகளின் சில எடுத்துக்காட்டுகள் – அவை ஒவ்வொன்றிலும் அமையும் சமுதாய நிகழ்வுகள் – போன்றன பற்றி விரித்துரைத்தல் வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - The expression of jokes
- Objective - ability level : To test evaluation (judgement) in terms of external criteria with reference to the expression of jokes.
- Name of the item format : Subjective category - Long Answer
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Evaluation (judgement) in terms of external criteria with reference to the expression of jokes is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், சிரிப்புத் துணுக்கு வெளிப்பாடு பற்றிய புறத்தகுநிலைவழி முடிவுரைத்தல் வாயிலாக மதிப்பிடல் இயலுமை நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

317000 *COGNITIVE / EVALUTION*

மதிப்பிடல்

318000 *COGNITIVE / GENERAL*

பொது

AFFECTIVE DOMAIN
உணர்வுக் களம்




Fig. 7 *Components of Affective Domain (Per.)*

Source Pon Subbiah, *Assessment in Language and Literature : A Conceptual Framework*

AFFECTIVE DOMAIN
உணர்வுக்களம்

321000 AFFECTIVE / RECEIVING
ஏற்றல்

321100 AFFECTIVE / RECEIVING / AWARENESS
விழிப்பு

Receiving : Awareness
ஏற்றல் : விழிப்பு

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the historical account of chastity in Tamil literary works may be given.

  தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கற்பின் மேன்மை பற்றிப் பொதுவான செய்திகளை வரலாற்று அடிப்படையில் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Following are the statements on the glory of chastity as outlined in various literary works. State whether each of them is correct or not.

  கற்பின் மேன்மையைப் பற்றிய இலக்கியச் செய்திகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் சரியா தவறா எனக் குறிப்பிடுக.

- Question / item stem :

  அ. பெண்களுக்குக் கற்பு என்னும் பண்பு உயிரை விட மேலானது என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. — சரி / தவறு

  ஆ. கற்பு என்னும் மனத்திண்மை இயல்பாகவே பெண்களுக்கு உரிய பண்பு என்று திருக்குறள் காட்டுகின்றது. — சரி / தவறு

  இ. கற்புடைய பெண்கள் தெய்வமாகவே போற்றப் பெறுவர் என்பதைச் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் புலப்படுத்துகின்றன. — சரி / தவறு

ஈ. பாரதியின் இலக்கியங்கள் ஆடவர்க்கும்
கற்பு வேண்டும் என்று கூறுகின்றன. சரி / தவறு

உ. ஆண்களுக்கும், பெண்களுக்கும் கற்பு என்பது
கருதத்தக்க ஒன்றன்று என்று தற்போதைய
புனைகதை இலக்கியங்கள் கூறுகின்றன. சரி / தவறு

ஊ. கற்பு என்பது நல்ல குடும்பவாழ்வுக்கு ஏற்ற
ஒன்று என்று பெரியோர் காட்டிய
மரபுகள் கருதுகின்றன. சரி / தவறு

விடை: அ, இ, ஈ, உ மற்றும் ஊ – சரியானவை

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Evolution-Tamil's concept of chastity
- Objective - ability level : To test receiving in terms of awareness with reference to Tamil concept of chastity.
- Name of the item format : Check list
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Receiving in terms of awareness with reference to Tamil concept of chastity in literature is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், கற்பு தொடர்பான இலக்கியச் செய்திகள் பற்றிய விழிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Awareness ➢ Generics
ஏற்றல் : விழிப்பு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  A general briefing about the availability of various literary forms for communication may be given.
  கருத்துக்களை வெளிப்படுத்தப் பயன்படும் பல்வேறு இலக்கிய வடிவங்களைப் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate the order of your preference as which of the given literary forms are considered more effective for the purpose of communicating ideas.

  கருத்துக்களை வலியுறுத்தக் கையாளப்பட்ட இலக்கிய வடிவங்களுள் சிறந்ததாகக் கருதப்படுவதை உங்கள் நோக்கில் வரிசைப்படுத்துக. (நான்கு மட்டும்)

- Question / item stem :

  அ. ஆசிரிய விருத்தம்

  ஆ. ஆசிரியப்பா / அகவற்பா

  இ. கும்மிப் பாட்டு

  ஈ. நொண்டிச் சிந்து

  உ. கலிவிருத்தம்

  ஊ. குறள் வெண்பா

  எ. ஓரடிப்பா

  ஏ. கலிப்பா

  ஐ. வஞ்சிப்பா

  ஒ. பஃறொடை வெண்பா

  விடை: அ, ஊ, ஆ, ஈ என்ற வரிசையில் அமைய வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Usage of a specific form.
- Objective - ability level : To test receiving in terms of awareness with reference to specific forms of literature for effective presentation.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Receiving in terms of awareness with reference to the use of specified literary form for effective presentation, is tested at the suitability level.

  பொருத்த நிலையில், இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தும் பாங்கு பற்றிய விழிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Awareness ➢ Aesthetics
ஏற்றல் : விழிப்பு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing about the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகளைப் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Various features of the given poetic piece are listed below. Give your opinion by making a ✓ mark on either 'Yes' or 'No'.

  கொடுக்கப்பட்டுள்ள பாடலின் முருகியல் பண்புகள் பற்றிய கூற்றுக்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் கருத்தை 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதில் ✓ குறியிடுவதன் மூலம் வெளிப்படுத்துக.

- Question / item stem :

  பாடல் :

  வாய் முத்தம் தாராமல்
  மழலையுரை யாடாமல்
  சேய் கிடத்தல் கண்டெனக்குச்
  சிந்தை தடு மாறுதையா
  முகம் பார்த்துப் பேசாமல்
  முலைப் பாலும் உண்ணாமல்
  மகன் கிடக்கும் கிடைகண்டு
  மனம் பொறுக்கு தில்லை ஐயா.

  கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

  கூற்றுக்கள் :

  அ. ஒருவரின் சிந்தை தடுமாற்றத்தை வெளிப்படுத்துமாறு பாடலில் சொற்கள் அமைந்துள்ளன. ஆம் / இல்லை

ஆ. உணர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் பாடலின் நடையும் சொற்களின் பயன்பாடும் உள்ளன. ஆம் / இல்லை

இ. உணர்ச்சியின் வெளிப்பாட்டுக்குப் பெருந் துணைபுரியுமாறு பாடலில் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. ஆம் / இல்லை

ஈ. இயல்பான நிகழ்ச்சிகள் சொல்லப் பெறும் முறையால் கவியழகு பெறுகின்றன. ஆம் / இல்லை

விடை: அ, ஆ, இ, ஈ – அனைத்துமே ஆம்

- Scoring procedure : Enumerative
- Literary input : Aesthetics : Aspects in isolation - Artistic features.
- Objective - ability level : To test receiving in terms of awareness with reference to prosodic features of poetry.
- Name of the item format : Check list
- Administrating mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Receiving in terms of awareness with reference to artistic features of poetry is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில் கவிதைப் பண்புகள் (முருகியல் கூறுகள்) பற்றிய விழிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Awareness
ஏற்றல் : விழிப்பு

➢ Affectives
➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  A general briefing about idealogies as expressed in literature may be given.
  இலக்கியங்களில் காணப்படும் கருத்தியல்கள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Various features of the poem 'Paanchaali Sabhatam' by Subramaniya Bharathiyaar are listed below. Give your opinion by making a ✓ mark in the five point scale.

  சுப்பிரமணிய பாரதியார் எழுதிய 'பாஞ்சாலிசபதம்' என்னும் நூலில் காணப்படும் பல்வேறு உணர்வுக்கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் கவிஞர் கொடுத்துள்ள முக்கியத்துவத்தைப் பற்றிய உங்கள் கருத்தை ஐந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  ஐந்நிலைக் கணிப்பளவுக்கான எண்களின் விளக்கம் :

  5 – மிக முக்கியம்; 4 – முக்கியம் ; 3 – ஓரளவு முக்கியம் ; 2 – எப்போதாவது முக்கியத்துவம் ; 1 – ஒருபோதும் முக்கியமில்லை

- Question / item stem :

அ. கல்வி உணர்வு	. . . .	5	4	3	2	1
ஆ. காதல் உணர்வு	. . . .	5	4	3	2	1
இ. வீர உணர்வு	. . . .	5	4	3	2	1
ஈ. நாட்டுப்பற்று	. . . .	5	4	3	2	1
உ. நகைச்சுவை உணர்வு	. . . . . .	5	4	3	2	1

விடை: ஈ. நாட்டுப்பற்றுக்கு அதிக மதிப்பு

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - as expressed in 'Paanchaali Sabhatam'.
- Objective - ability level : To test receiving in terms of awareness with reference to ideologies as expressed in literature.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Receiving in terms of awareness with reference to ideologies as expressed in literature, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், இலக்கியத்தின் வழி வெளிப்படுத்தப்படும் உணர்வுகள் பற்றிய விழிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

321200 *AFFECTIVE / RECEIVING / **WILLINGNESS TO RECEIVE***

ஏற்றல் விருப்பு

Receiving : Willingness to Receive ➢ Genesis
ஏற்றல் : ஏற்றல் விருப்பு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on evolution of generic forms in literature may be given.

  இலக்கியத்தின் வகைமை வடிவப் பரிணாமம் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Based on the characters of the epic 'Cilappatikaaram', a statement is given below. Give your opinion by making a ✓ mark in the binary scale.

  சிலப்பதிகாரக் கதைப்பாத்திரங்களின் அடிப்படையிலான கூற்று ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றிய உங்கள் கருத்தினை இருநிலைக் கணிப்பளவில் '✓' குறியீடு செய்து வெளிப்படுத்துக.

- Question / item stem :

  'சிலப்பதிகாரத்தில் காணப்படும் சில இலக்கியக் கூறுகள் பிற்காலத்தில் தனி இலக்கியங்களாக உருவெடுத்தன'

  ஆம் / இல்லை

  விடை: ஆம்

- Scoring procedure : Enumerative

- Literary input : Genesis : Evolution - Generic contents as seen in 'Cilappatikaaram'.
- Objective - ability level : To test receiving in terms of willingness to receive with reference to generic contents.
- Name of the item format : Objective category : Constant Alternative
- Administering mode : Written
- General educational level : L_1 - Secondary
- Rationale : Receiving in terms of willingness to receive with reference to generic contents is tested at the suitability level.
  பொருத்த நிலையில், வகைமை உள்ளடக்கம் மற்றும் கதாபாத்திரங்களின் சித்தரிப்பு பற்றிய ஏற்றல் விருப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Willingness to Receive ➢ Generics
ஏற்றல் : ஏற்றல் விருப்பு ➢ வகைமையிய

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :
  A general briefing on the generic contents and themes of literature may be given.
  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்கம், கரு ஆகியவை பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.
- Instruction to the student :
  Based on the characteristics of seven philanthropists enunciated by various Tamil literary works, some statements are given below. Give your opinion on each of them by making a ✓ mark to indicate either 'Yes' or 'No'.
  இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள கடையேழு வள்ளல்களின் பண்புகளை அடியொற்றிச் சில கூற்றுக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் மீதான உங்கள் கருத்தினை ஆம் அல்லது இல்லை என்பதில் ✓ குறியிட்டுக் காட்டவும்.

- Question / item stem :

கூற்றுக்கள் :

அ. பிறருக்கு உதவுவதற்காக நேரத்தைச் செலவு செய்தார்கள். ஆம் / இல்லை

ஆ. எப்பொழுதும் உடனிருக்கும் நண்பர்கள் பிறருக்கு உதவுவதற்காகத் தற்காலிகமாக விட்டுப் பிரிவதைக்கூட பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆம் / இல்லை

இ. தாங்கள் வருந்தி ஈட்டிய பெருஞ்செல்வத்தைக் கூட பிறருக்குக் கொடுக்க விரும்பினார்கள். ஆம் / இல்லை

ஈ. தங்களுக்கெனவே இருந்தவற்றைப் பிறர் நலனுக்காகத் தியாகம் செய்ய விரும்பினார்கள். ஆம் / இல்லை

உ. பொது நலனுக்காகத் தனிப்பட்ட ஒருவர் வருந்துவதை ஏற்றுக் கொண்டார்கள். ஆம் / இல்லை

ஊ. தங்களால் இயலுகின்ற செயலைச் செய்யப் பிறரை வேண்டுவதில் விருப்பம் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆம் / இல்லை

எ. பிறருடைய குற்றங்களின் அளவினை அறிந்து அவற்றை நீக்கி அவர்களுக்கு உதவுவதற்கு விருப்பம் உடையவர்களாக இருந்தார்கள். ஆம் / இல்லை

விடை: அ, ஆ, இ, ஈ, எ – ஆம்
ஊ மட்டும் இல்லை

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Ethical - Philanthropic concept
- Objective - ability level : To test <u>receiving</u> in terms of willingness to receive with reference to the philanthropist concepts.
- Name of the item format : Questionnaire - Inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Receiving in terms of willingness to receive with reference to the concept of philanthropy, is tested at the identification level.
இனங்காணுதல் நிலையில் கொடைத் தன்மைக் கொள்கை பற்றிய ஏற்றல் விருப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Willingness to Receive ➢ Aesthetics
ஏற்றல் : ஏற்றல் விருப்பு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
A general briefing on the aesthetics of literature may be given.
இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :
Based on the aesthetics of the poetic piece, few statements are given below. Indicate whether they are acceptable or not.
பாடலிலுள்ள முருகியல் கூறுகளின் அடிப்படையிலான சில கூற்றுக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றையும் உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறது என்றால் 'ஏற்பு' என்றும், இல்லை என்றால் 'மறுப்பு' என்றும் குறிப்பிடுக.

- Question / item stem :

முழுநிலாவினைப் பற்றிய ஒரு பாடல் :

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோலமுழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ! வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்றோ!
காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!

– பாரதிதாசன்

கூற்றுக்கள் :

அ. ஒரு பொருளைக் காணும் பொழுது அதன் அகத்தோற்றத்தையும் பார்க்க வேண்டும் — ஏற்பு / மறுப்பு

ஆ. ஒரு பொருளின் அழகினைக் காணும் பொழுது அதனைப் பாராட்டிப் பேச வேண்டும். — ஏற்பு / மறுப்பு

இ. ஒரு பொருளைக் காணும்பொழுது அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். — ஏற்பு / மறுப்பு

ஈ. ஒரு பொருளைக் காணும்பொழுது பல்வேறு கோணங்களில் அதன் சிறப்பினை எண்ணிப் பார்க்க வேண்டும். — ஏற்பு / மறுப்பு

உ. ஒரு பொருளைக் காணும்பொழுது அதனைப் பிறவற்றோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும். — ஏற்பு / மறுப்பு

ஊ. ஒரு பொருளைக் காணும்பொழுது அதன் உட்கூறுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். — ஏற்பு / மறுப்பு

விடை: 'அ' முதல் 'ஊ' வரை – ஏற்பு.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Aspects in discourse
- Objective - ability level : To test receiving in terms of willingness to receive with reference to the appreciation of aesthetic aspects.
- Name of the item format : Questionnaire - inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Receiving in terms of willingness to receive with reference to the appreciation of aesthetic aspects is tested at the suitability level. பொருத்த நிலையில், முருகியல் கூறுகளைப் பாராட்டும் தன்மை பற்றிய ஏற்றல் விருப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Willingness to Receive ➢ Affectives
ஏற்றல் : ஏற்றல் விருப்பு ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate whether each of the explanatory statements on Thirumandiram is acceptable to you or not [make a ✓ mark].

  கொடுக்கப்பட்டுள்ள திருமந்திரப் பாடல் தொடர்பான விளக்கக் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உங்களுக்கு ஏற்புடையதா, இல்லையா என்பதை ✓ குறியிட்டுக் காட்டுக.

- Question / item stem :

  பாடல் :

  என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
  பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும்
  அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி
  என்போல் மணியினை எய்த ஒண்ணாதே.

  – திருமந்திரம்

கூற்றுக்கள் :

அ. ஓர் இலக்கை அடைய எந்த இன்னல்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஏற்பு / மறுப்பு

ஆ. ஓர் இலக்கை அடைய ஒரே ஒரு முறையைத் தான் பின்பற்ற வேண்டும். ஏற்பு / மறுப்பு

இ. ஒரு கருத்தை முடிவுசெய்ய உடன்பாட்டு நன்மைகளையும், எதிர்மறைக் கேடுகளையும் கவனிக்க வேண்டும். ஏற்பு / மறுப்பு

ஈ. நீடித்த பயனைத் தருவதற்குப் புறத்தூய்மையை மேற்கொள்ள வேண்டும். ஏற்பு / மறுப்பு

உ. நெடுநாள் பயனைப் பெறுவதற்கு அகத்தூய்மை நிலையே சிறந்ததாகக் கருத வேண்டும். ஏற்பு / மறுப்பு

ஊ. நெடுநாள் பயனைப் பெறுவதற்கு எந்த நிலை சிறப்பானது என்பதைக் கவனிக்க வேண்டும். ஏற்பு / மறுப்பு

விடை: அ, இ, உ மற்றும் ஊ – ஏற்பு ; ஆ, ஈ – மறுப்பு

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - philosophy
- Objective - ability level : To test receiving in terms of willingness to receive with reference to the philosophy of life expressed in a literary piece.
- Name of the item format : Questionnaire - inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Receiving in terms of willingness to receive with reference to the philosophy of life expressed in a literary piece is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், ஓர் இலக்கியப் பகுதி கூறும் வாழ்க்கைத் தத்துவத்தை நினைவு கூரும் பாங்கு பற்றிய ஏற்றல் விருப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

321300 AFFECTIVE / RECEIVING / CONTROLLED OR SELECTED ATTENTION
கட்டுப்பாட்டுக் கவனிப்பு (அ) தெரிவுக் கவனிப்பு

Receiving : Controlled or Selected Attention ➢ Genesis
ஏற்றல் : கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

.......to be filled in later........

* * *

Receiving : Controlled or Selected Attention ➢ Generics
ஏற்றல் : கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the generic contents and themes of literature may be given.

  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்கம், கரு ஆகியவை பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate the kind of feeling that you are likely to get when you happen to read a novel again and again in the given five point scale by encircling the appropriate number.

  நீங்கள் படித்த நாவலை மீண்டும் மீண்டும் படிக்கும்போது உங்கள் விருப்பம் எப்படி அமையலாம் என்பதைக் கொடுக்கப்பட்டுள்ள கணிப்பளவு எண்களில் ஒன்றை வட்டமிடுவதன் மூலம் குறிப்பிடுக.

  ஐந்நிலைக் கணிப்பளவுக்கான எண்கள் விளக்கம் :

  5 - மிக மிக விருப்பம்; 4 - மிக விருப்பம்; 3 - விருப்பம்; 2 - ஓரளவு அளவு விருப்பம்; 1 - விருப்பம் இல்லை

- Question / item stem :

  நான் ஒரு முறை படித்த புதினத்தை மீண்டும் படிக்க நேர்ந்தால், படிக்க விரும்புவது

அ. நகைச்சுவைப் பகுதிகளை	5	4	3	2	1
ஆ. வர்ணனைப் பகுதிகளை	5	4	3	2	1
இ. வாழ்க்கை முறை பற்றிய பகுதிகளை	5	4	3	2	1
ஈ. கதையின் உச்சக்கட்டப் பகுதிகளை	5	4	3	2	1
உ. காதல் தொடர்பான பகுதிகளை	5	4	3	2	1

விடை: தேர்வுக்குரியவர் தம் விருப்பப்படி 'அ' முதல் 'உ' வரையுள்ள ஒவ்வொரு கருத்துக்கும் தங்கள் விருப்பத்திற்கேற்ற கணிப்பினை உரியவகையில் குறிக்க வேண்டும்.

- Scoring procedure : Analytical

- Literary input : Generics : Prose - characteristic features of a novel
- Objective - ability level : To test receiving in terms of controlled attention with reference to characteristic features of a novel.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate
- Rationale : Receiving in terms of controlled or selected attention with reference to characteristic features of a novel is tested at the suitability level.
  பொருத்த நிலையில் ஒரு நாவலின் பண்புக்கூறுகள் பற்றிய கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Controlled or Selected Attention ➢ Aesthetics
ஏற்றல் : கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Four pieces of poetries with different contents along with a set of statements are given below. Indicate the quantum of aesthetic feelings that you are likely to get while reading them in the five point scale.

  கொடுக்கப்பட்டுள்ள நான்கு பாடல்களும் அவை தொடர்பான சில கூற்றுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் கருத்தைக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  ஐந்நிலைக் கணிப்பளவுக்கான எண்களின் விளக்கம் :

  5 – மிக மிகத் தேவை; 4 – மிகத் தேவை; 3 – தேவை; 2 – ஓரளவு தேவை, 1 – தேவையில்லை

- Question / item stem :

பாடல்கள் :

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ.
– கம்பராமாயணம் ... ... (1)

பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனியெமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலேம் என்றார்
மதியி ழந்துதன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்.
– அரிச்சந்திர புராணம் ... ... (2)

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்த் தவனே.
– பட்டினத்தார் பாடல் ... ... (3)

அன்னாய் வாழிவேண்டு அன்னை நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனியஅவர் நாட்டு
உவலைக் கூவல் கீழ
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே.
– ஐங்குறுநூறு ... ... (4)

கூற்றுக்கள் :

அ. உணர்ச்சி வகைக்கு ஏற்றவாறு சொற்கள் அமைதல்	5	4	3	2	1
ஆ. வெளிப்படும் உணர்ச்சிகளுக்கு ஏற்ற ஒலிநயம் அமைதல்	5	4	3	2	1

இ. உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும், பயன்படுத்துகின்ற சொற்களுக்கும் நெருங்கிய தொடர்பு அமைதல்	5	4	3	2	1
ஈ. எளிமையான சொற்கள் இல்லாவிட்டாலும் ஓசைநயத்தோடு கூடிய சொற்கள் உணர்ச்சியை வெளிப்படுத்துமாறு அமைதல்	5	4	3	2	1
உ. எவ்வகையான உணர்ச்சி ஆயினும் உரியவாறு வெளிப்படுத்துவதற்குரிய எளிய சொற்கள் அமைதல்	5	4	3	2	1
ஊ. உணர்ச்சிகளை வெளிப்படுத்தச் சொற்களை விடக் கருத்துகளே அமைதல்	5	4	3	2	1
எ. வீரச்சுவைக்கு எளிய சொற்களும், அவலச் சுவைக்கு நீண்ட தொடர்களும் அமைதல்	5	4	3	2	1
ஏ. இறையன்புக்கும், காதலுக்கும் கருத்துச் செறிவு, ஒலிநயம் ஆகியன கொண்ட சொற்களும் தொடர்களும் அமைதல்	5	4	3	2	1
ஐ. எவ்வகை உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாடலும் கருத்துச் செறிவோடு அமைதல்	5	4	3	2	1

விடை: தேர்வுக்குரியவர் தம் விருப்பப்படி 'அ' முதல் 'ஐ' வரையுள்ள ஒவ்வொரு கருத்துக்கும் ஒரேயொரு கணிப்பினை உரியவகையில் குறிக்க வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Aspects in discourse
- Objective - ability level : To test receiving in terms of controlled attention with reference to aesthetic aspects in discourse.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate / Postgraduate

- Rationale : Receiving in terms of controlled attention with reference to aesthetic aspects in discourse, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், சில முருகியல் கூறுகளின் வெளிப்பாடு பற்றிய கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Receiving : Controlled or Selected Attention ➢ Affectives
ஏற்றல் : கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  When you happen to go to a library what kind of books will you choose for reading. Indicate your choice in the given three point scale.

  நீங்கள் நூலகத்திற்குச் செல்ல நேர்ந்தால் எத்தகைய நூல்களைப் படிக்க விரும்புவீர்கள் என்பதை முபுள்ளிக் கணிப்பளவில் குறிப்பிடவும்.

  கணிப்பளவுக்கான எண்களின் விளக்கம் :
  3 – வழக்கமாக; 2 – எப்போதாவது; 1 – எப்போதும் இல்லை

- Question / item stem :

அ. உள்நாட்டு வெளிநாட்டு அரசியல், பொருளாதாரம் பற்றிய நூல்களைப் படிப்பேன்.	3	2	1
ஆ. சுயவேலைவாய்ப்புத் திட்டம் பற்றிய நூல்களைப் படிப்பேன்.	3	2	1
இ. சமையல் குறிப்பு, அழகுக்குறிப்பு போன்ற நூல்களைப் படிப்பேன்.	3	2	1
ஈ. கணிதவியல், வணிகவியல், பங்குகள் பற்றிய செய்திகளைத் தரும் நூல்களைப் படிப்பேன்.	3	2	1

ஊ. வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு மனநிறைவோடு வாழ அறிவுரைகளைத் தரும் நூல்களைப் படிப்பேன். 3 2 1

ஊ. என் வீட்டின் சுற்றுப்புறங்களை அழகுபடுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளைத் தருகின்ற நூல்களைப் படிப்பேன். 3 2 1

எ. முக்கிய தலைவர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படிப்பேன். 3 2 1

ஏ. காதல், நகைச்சுவை, துப்பறியும் கதைகளை மட்டும் படிப்பேன். 3 2 1

ஐ. அறிவியல், பொறியியல் போன்ற நூல்களைப் படிப்பேன். 3 2 1

விடை: தேர்வுக்குரியவர் தம் விருப்பப்படி 'அ' முதல் 'ஐ' வரையுள்ள தொடர் ஒவ்வொன்றுக்கும் ஒரேயொரு கணிப்பினை உரியவகையில் குறிக்க வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - preference for reading
- Objective - ability level : To test receiving in terms of controlled with reference to individual's preference for reading.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Receiving in terms of controlled with reference to individual's preference for reading, is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், ஒரு தனியொருவரின் வாசிப்பிற்கான முன்னுரிமை பற்றிய கட்டுப்பாடு (அ) தெரிவுக் கவனிப்பு வாயிலாக ஏற்றல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

322000 AFFECTIVE / **RESPONDING**

துலங்கல்

322100 AFFECTIVE / RESPONDING / **ACQUIESCENCE IN RESPONDING**

துலங்கல் இசைவு

Responding : Acquiescence in Responding ➢ Genesis

துலங்கல் : துலங்கல் இசைவு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the development of generic forms of literature may be given.

  இலக்கிய வகை வடிவங்களின் வளர்ச்சி பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Give your opinion on each of the following statements pertaining to the three lullabi songs of different authors, by marking 'Yes' or 'No'.

  கொடுக்கப்பட்டுள்ள மூன்று கவிஞர்களின் பாடல்களை அடியொற்றிய கூற்றுக்கள் ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் கருத்தினை ஆம் / இல்லை என்ற இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

  பாடல் 1 :

  ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
  ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
  . . . .
  . . . .

  மின்னல் ஒளியே விலைமதியா ரத்தினமே
  கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே!

  மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
  காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே !

  வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
  தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி !

  எல்லாம் கடவுள்செயல் என்று துடைநடுங்கும்
  பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்தவளே !

வாயிலிட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே!

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி யென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்து நீ கண்ணுறங்கு.

– பாரதிதாசன்

பாடல் 2 :

ஆராரோ! ஆரரிரோ
அம்மா! நீ கண்ணுறங்கு
பேரேதோ! ஊரெதுவோ!
பெற்றவர்கள் யாரெவரோ!
சீராரும் காவேரித்
தேவி திருவருளால்
வாராமல் வந்துதித்த
மாமணியே கண்ணுறங்கு.

அதிகாரம் என்று சொல்லி
அநியாயம் செய்தறியோம்
சதிகாரத் தந்திரத்தால்
சம்பாதித் துண்பதில்லை
துதிபாடிப் பொய்பேசிச்
சுகித்திருக்கும் சூதறியோம்
கதிகேடு வந்து விடக்
காரணங்கள் இல்லையம்மா!
வேலையின்றிக் கூலி கொள்ளும்
விந்தைகளைக் கற்றறியோம்
கூலியின்றி வேலை கொள்ளும்
கொடும் பாவம் செய்தறியோம்
காலை யென்றும் மாலை யென்றும்
காலமின்றிப் பாடுபட்டு
நாலு பணம் வந்தாலும்
நல்ல சுகம் செய்து வைப்போம்.

– நாமக்கல் கவிஞர்

பாடல் 3 :

ஆராரோ? ஆரிரரோ? ஆரிவரோ? ஆராரோ?
மாமணியோ? முத்தோ? மரகதமோ? மன்னவர்தம்

தாம முடிமீது
    தயங்கும் வயிரமதோ?

கற்கண்டு, சீனி
    கனியும் கனிந்தொழுகு
சொற்கொண்டு எமக்குச்
    சுகமளிக்கும் பூங்குயிலோ?

கண்ணுறங்கு, கண்ணுறங்கு
    கண்மணியே! கண்ணுறங்கு
ஆராரோ ஆரிரரோ?
    ஆரிவரோ? ஆராரோ?

– கவிமணி

பாடல்களை அடியொற்றிய கூற்றுக்கள் :

அ. தற்காலத் தாலாட்டுப் பாடல்கள் உள்ளடக்கத்தால் பல்வேறு காலத் தாலாட்டுப் பாடல்களிலிருந்து வேறுபடவில்லை. ஆம் / இல்லை

ஆ. தற்காலத் தாலாட்டுப் பாடல்கள், பாடல் வடிவத்தால் பல்வேறு காலத் தாலாட்டுப் பாடல்களிலிருந்து வேறுபடவில்லை. ஆம் / இல்லை

இ. தற்காலத் தாலாட்டுப் பாடல்கள் கவிதை நடையால் பல்வேறு காலத் தாலாட்டு பாடல்களிலிருந்து வேறுபடவில்லை. ஆம் / இல்லை

விடை: அ ஆ, மற்றும் இ – ஆம்

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Evolution - Similarity among lullaby songs
- Objective - ability level : To test <u>responding</u> in terms of acquiescence in responding with reference to lullaby songs.

- Name of the item format : Check list
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Responding in terms of acquiescence in responding with reference to similarity among lullaby songs of different poets, is tested at the identification level. *[Note :* The same tool can also be used to measure "willingness to respond"].

  இனங்காணுதல் நிலையில், பல கவிஞர்கள் எழுதிய தாலாட்டுப்-பாடல்களின் ஒற்றுமையைப் பற்றிய துலங்கல் இசைவு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Responding : Acquiescence in Responding ➢ Generics
துலங்கல் : துலங்கல் இசைவு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Responding : Acquiescence in Responding ➢ Aesthetics
துலங்கல் : துலங்கல் இசைவு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate the kind of activity you are likely to perform while reading the lines of aesthetic value (taken from the given poetry) by making a ✓ mark in the columns provided against each of them.

பாடலில் பயின்று வரும் முருகியல் பகுதிகள் சில கீழே கொடுக்கப்-பட்டுள்ளன. அவற்றைப் படிப்பதன் விளைவாக உங்கள் செயல் எப்படியிருக்கலாம் என்பதைக் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கணிப்பளவுப் பிரிவில் ✓ குறியிடுவதன் மூலம் சுட்டிக் காட்டுக.

கணிப்பளவுப் பிரிவுகளின் விளக்கம் :

ம.பா.செ. – மனப்பாடம் செய்வேன்

எ.ஆ. – எடுத்தாளுவேன்

ப.வி.வி – படித்து விட்டுவிடுவேன்

- Question / item stem :

பாடல் :

கண்ணீர் பெருகட்டும் கைகள் பிசைந்து அழட்டும் !
உண்ணிறைந்த நெஞ்சம் உடைந்து சிதறட்டும் !
விண்ணிருந்து மீன்கள் வெலவெலத்து உதிரட்டும் !
மண்ணிருக்கும் பூக்கள் மாளட்டும் ! மறையட்டும் !
ஆடும் மரங்களெல்லாம் அடியற்று வீழட்டும் !
அசைகின்ற பூங்கொடிகள் அத்தனையும் சாயட்டும் !
கூவும் குயிலினங்கள் கூட்டோடு தொலையட்டும் !
குளிர்ந்து வரும் இளங்காற்றுக் கொதிப்பேறிப் போகட்டும் !
ஊருக்கு உழைத்தவனை உத்தமனைக் கண்மணியை
வீரர்க்கு வீரனென வேற்றவரும் போற்றிவரும்
சீருக்கு நாயகனை சிந்தனையின் தம்பியினைப்
போருக்கு முறையறியார் புறம் போக்கிக் கொன்ற பின்னர்
நெஞ்சம் இருந்தென்ன! நினைப்பென்ன! மண்ணென்ன !
வஞ்சகந்தான் இங்கு வாழுமெனில் வகையறியா
நெஞ்சகந்தான் என்றும் நிலைக்குமெனில் இந்நாட்டைக்
கொஞ்சமுமே வைக்காது குமுறும் கடல் கொள்ளட்டும்!
இறந்தனை தோழா! எங்கோ ஏகினை எம்மை விட்டு ......
திறந்தன அன்பை நெஞ்சத் திண்மையை எண்ணி எண்ணி ......

– *கண்ணதாசன்*

முருகியல் கூறுகளுடைய பகுதிகள் :

அ. பிசைந்து அழட்டும் ! உடைந்து சிதறட்டும் !
வெலவெலத்து உதிரட்டும் ! ... ம.பா.செ / எ.ஆ. / ப.வி.வி

ஆ. நெஞ்சம் இருந்தென்ன! நினைப்பென்ன!
மண்ணென்ன! ... ம.பா.செ / எ.ஆ. / ப.வி.வி

இ. ஊருக்கு உழைத்தவனை உத்தமனை
கண்மணியை ... ம.பா.செ / எ.ஆ. / ப.வி.வி

ஈ. குளிர்ந்து வரும் இளங்காற்று கொதிப்பேறிப்
போகட்டும் ... ம.பா.செ / எ.ஆ. / ப.வி.வி

உ. கூவும் குயிலினங்கள் கூண்டோடு
தொலையட்டும் ... ம.பா.செ / எ.ஆ. / ப.வி.வி

விடை: மனப்பாடம் செய்வேன், எடுத்தாளுவேன் என்ற பகுதிகளில் குறியிடுவது எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Enumerative
- Literary input : Aesthetics : Aesthetics in discourse - literary appreciation
- Objective - ability level : To test responding in terms of acquiescence in responding with reference to literary appreciation.
- Name of the item format : Questionnaire - inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Responding in terms of acquiscence in responding with reference to literary appreciation, is tested at the suitability level.
  [*Note :* The mark under the column 'Memorize' denotes the acceptance of the practice. Here the same tool may also be used to measure 'willingness to respond'.]
  பொருத்த நிலையில், இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிய துலங்கல் இசைவு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Responding : Acquiescence in Responding ➢ Affectives
துலங்கல் : துலங்கல் இசைவு ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  indicate your feelings on each of the given statements pertaining to a short story in the given three point scale.

  சிறுகதை இலக்கியம் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் கருத்தை முப்புள்ளிக் கணிப்பளவில் குறியிட்டுக் காட்டுக.

  கணிப்பளவு எண்களின் விளக்கம் :

  3 - மிகத்தேவை; 2 – தேவை; 1 – தேவையில்லை

- Question / item stem :

அ. சிறுகதையின் தலைப்பு முழுக்கதையினையும் பிரதிபலித்ததாக இருத்தல்	3	2	1
ஆ. முடிவு எதிர்பாராததாக இருத்தல்	3	2	1
இ. உரையாடல் பாத்திரத்தின் நிலைக்கு ஏற்ப அமைதல்	3	2	1
ஈ. பாத்திரங்கள் நினைவில் நிற்பவையாக அமைதல்	3	2	1
உ. விறுவிறுப்பான நடை இருத்தல்	3	2	1
ஊ. பின்புலம் பொருத்தமாக அமைதல்	3	2	1
எ. வருணனைகள் அளவோடு அமைதல்	3	2	1
ஏ. தொடக்கம் சுறுசுறுப்பாக அமைதல்	3	2	1
ஐ. கதை மிகவும் குறுகியதாக அமைதல்	3	2	1

ஓ. கதை நிகழ்காலம் மிகக் குறைவாக அமைதல் 3 2 1

ஓ. ஒருபொருள் / ஒரு நிகழ்ச்சி / ஒரு கருத்துப்பற்றியதாக அமைதல் 3 2 1

ஔ. நனவோடை உத்தி, பின்னோக்கு உத்தி போன்ற உத்திகள் அமைதல் 3 2 1

க. கதையுடன் தொடர்பு இல்லாத நிகழ்ச்சி குறித்தும் விளக்கம் இடம் பெறல் 3 2 1

ங. நல்ல கருத்துள்ள கதையாகவும் இருத்தல் 3 2 1

ச. நிகழ்ச்சிகள் நிரல்முறையில் அமைதல் 3 2 1

ஞ. நிகழ்ச்சிகள் நிரலற்ற முறையில் அமைதல் 3 2 1

விடை: 'அ' முதல் 'ஒ' வரை – மிகத்தேவை. மற்றன தேவை.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Approach - appreciation of the salient features of a short story
- Objective - ability level : To test responding in terms of acquiescence in responding with reference to appreciation of salient features of a short story.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Responding in terms of acquiescence in responding with reference to appreciation of the salient features of a short story, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், ஒரு சிறுகதையின் சிறப்புக் கூறுகளுக்கான திறனாய்வு பற்றிய துலங்கல் இசைவு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

322200 AFFECTIVE / RESPONDING / *WILLINGNESS TO RESPOND*
துலங்கல் விருப்பு

Responding : Willingness to Respond ➢ Genesis
துலங்கல் : துலங்கல் விருப்பு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the development of generic forms of literature may be given.

  இலக்கிய வகை வடிவங்களின் வளர்ச்சி பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Some proverbs and phrases are given below. If you can recall any incident or story associated with them, state the same in brief.

  கொடுக்கப்பட்டுள்ள பழமொழி (அ) மரபுத்தொடர் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய கதையையோ அல்லது நிகழ்ச்சியையோ சுருக்கமாக எழுதுக.

- Question / item stem :

  அ. வானம் பொழிகிறது பூமி விளைகிறது
  ஆ. ஓட்டப்பம் வீட்டைச் சுடும்
  இ. பேராசை பெருநஷ்டம்
  ஈ. வாய்மையே வெல்லும்
  உ. ஊரோடு ஒத்து வாழ்

  விடை: வழி வழியாகச் சொல்லப்பட்டுவரும் தொடர்புடைய கதை அல்லது நிகழ்ச்சி எழுதப்பட வேண்டும்.

- Scoring procedure : Global quality scaling
- Literary input : Genesis : Evolution - Phrases and Proverbs.
- Objective - ability level : To test responding in terms of willingness to respond with reference to the stories or anecdotes associated with popular phrases and proverbs.
- Name of the item format : Direct questioning

- Administering mode : Written
- General educational level : L_1- Higher secondary / L_2 - Intermediate
- Rationale : Responding in terms of willingness to respond with reference to the stories associated with popular phrases and proverbs, is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், மரபுத் தொடர்கள் மற்றும் பழமொழிகளோடு தொடர்புடைய கதைகள் (அ) நிகழ்ச்சிகள் பற்றிய துலங்கல் விருப்பு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Responding : Willingness to Respond ➢ Generics

துலங்கல் : துலங்கல் விருப்பு வகைமையியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  A general briefing on generic forms and structures of literature may be given.

  இலக்கிய வகை அடிப்படையிலான வடிவங்கள் மற்றும் கட்டமைப்பு பற்றிய பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  What kind of literary work would you like to read during the vacation ? Give your response by indicating your choice as frequent, occasional, and not interested against each of the genres listed.

  விடுமுறைக் காலத்தில் எந்த வகை இலக்கியங்களைப் படிக்க விரும்புவீர்கள் என்பதைக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு இலக்கிய வகைக்கும் எதிரேயுள்ள முப்பிரிவுக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

அ. தனிப் பாடல்கள்	அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை
ஆ. நீண்ட கதைப் பாடல்கள்	அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை
இ. சிறுகதைகள்	அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை
ஈ. புதினங்கள்	அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை

உ. ஒரங்க நாடகங்கள் அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை

ஊ. புதுக்கவிதைகள் அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை

எ. இலக்கியத் திறனாய்வு நூல்கள் அடிக்கடி / எப்போதாவது / ஆர்வமில்லை

விடை: அடிக்கடி, எப்போதாவது என்பது மாணவரின் புத்தக வாசிப்பு ஆர்வ அளவைக் குறிக்கும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Interest on literary genres
- Objective - ability level : To test responding in terms of willingness to respond with reference to interest on literar genres.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Responding in terms of willingness to respond with reference to the interest on literary genres, is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், இலக்கியவடிவ வகைகளின் மீதான விருப்பம் பற்றிய துலங்கல் விருப்பு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Responding : Willingness to Respond ➢ Aesthetics
துலங்கல் : துலங்கல் விருப்பு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

...... *to be filled in later* ......

* * *

Responding : Willingness to Respond ➢ Affectives
துலங்கல் : துலங்கல் விருப்பு ➢ உணர்வியல்

❏ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate at least 3 portions of Manimekalai epic for each of the given topics.

  கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தலைப்புக்கும் அதனைப் பிரதிபலிப்பதாக அமையும் மணிமேகலைக் காப்பியப் பகுதிகளில் ஏதேனும் மூன்றை வரிசைப்படுத்தி எழுதுக.

- Question / item stem :

  மணிமேகலைக் காப்பியத்தில் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவதாக அமையும் சமுதாயம் மற்றும் சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதிகள்

  விடை: 1. சமுதாயம் – அ. பசியொழிப்பு
  ஆ. மதுவொழிப்பு
  இ. பரத்தையொழிப்பு
  ஈ. பொது அறிவுரைப் பகுதி

  2. சமயம் – அ. சமயத் தத்துவம்
  ஆ. புத்தர் பெருமை
  இ. விதிக் கோட்பாடு
  ஈ. நிலையாமை

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Ideology-literary Appreciation (theme)
- Objective - ability level : To test <u>responding</u> in terms of willingness to respond with reference to the appreciation of literary themes.
- Name of the item format : Direct questioning
- Administering mode : Written

- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Responding in terms of willingness to respond with reference to the appreciation of various themes of Manimegalai (epic) is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், மணிமேகலைக் காப்பியம் காட்டும் பல்வேறு கருத்துக்களைப் பற்றிய துலங்கல் விருப்பு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

322300 *AFFECTIVE / RESPONDING /* ***SATISFACTION IN RESPONSE***
துலங்கல் நிறைவு

Responding : Satisfaction in Response ➢ Genesis
துலங்கல் : துலங்கல் நிறைவு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Responding : Satisfaction in Response ➢ Generics
துலங்கல் : துலங்கல் நிறைவு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Responding : Satisfaction in Response ➢ Aesthetics
துலங்கல் : துலங்கல் நிறைவு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing about the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிய பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Based on the given poetic piece choose any two aesthetic aspects of your choice along with reasons from the alternatives provided.

  கொடுக்கப்பட்டுள்ள பாடலில் உங்களுக்கு மனநிறைவு தரும்படியாக உள்ள இரண்டு முருகியல் கூறுகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

- Question / item stem :

  பாடல் :

  ஏழைகள் நூற்றது ; எளியவர் நெய்தது ;
  கூழும் இல்லாதவர் குறைபல தீர்ப்பது ;

  கன்னியர் நூற்றது ; களைத்தவர் நெய்தது ;
  அன்னதா னப்பலன் அணிபவர்க் களிப்பது ;

  கூனர்கள் நெய்தது ; குருடர்கள் நூற்றது ;
  மானமாய்ப் பிழைக்க மார்க்கம் தருவது ;

  தாழ்ந்தவர் நூற்றது ; தளர்ந்தவர் நெய்தது ;
  வாழ்ந்திடும் உங்கட்கும் வாழ்த்துகள் சொல்வது ;

  I. *மிகவும் ஈர்க்கின்ற கலைக் கூறுகள் :*

  அ. ஓசைநயம்
  ஆ. அணிநயம்
  இ. சொல்வளம்
  ஈ. கருத்துச் சிறப்பு
  உ. செய்திச் செறிவு
  ஊ. தொடர் எளிமை
  எ. உணர்ச்சி வெளிப்பாடு

  II. *ஈர்ப்பதற்கான காரணங்கள் :*

  அ. சிந்தனைத் தூண்டல்
  ஆ. புலன் விருந்து
  இ. படைப்பாக்க உந்தல்
  ஈ. புதிய செய்திகள்
  உ. அறிந்த செய்திகள்

விடை: I - அ & இ ; II - அ & இ – பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Aspects in discourse - Appreciation
- Objective - ability level : To test responding in terms of satisfaction in response with reference to the appreciation of aesthetic features of a poetry.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1- Postgraduate
- Rationale : Responding in terms of satisfaction in response with reference to the appreciation of aesthetic features of a poetry, is tested at the suitability level.

  [Note : * The first is for measuring selection and other is for measuring satisfaction.]

  பொருத்த நிலையில், ஒரு கவிதையின் முருகியல் பண்புக் கூறுகளைப் பாராட்டும் பாங்கு பற்றிய துலங்கல் நிறைவு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Responding : Satisfaction in Response ➢ Affectives
துலங்கல் : துலங்கல் நிறைவு ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Based on the following poetry, complete each of the sentences by choosing alternatives.

  பின்வரும் பாடலின் அடிப்படையில், அவற்றின் கீழே கொடுக்கப்–பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல்–களிலிருந்து ஏதேனும் இரண்டு காரணங்களைத் தேர்ந்தெடுத்து முழுமையாக்குக.

- Question / item stem :

பாடல் :

என்னத்தைக் கண்டாய்
    இளம்பிள்ளை நீயறியாய்!
சொன்னத்தைக் கேளாய்
    துரையே! எனக் கொஞ்சிக்
கன்னத்தை முத்தமிட்டுக்
    கட்டி அணைத் தெனக்கு
என்னத்தை போல இதம்
    சொல்வார் யாரேயோ?

– தனிப்பாடல்

(இதய ஒலி நூலில் 'என் அத்தை' கட்டுரை)

I. இப்பாடலில் மன நிறைவு ஏற்படுவதற்கான காரணம்

. . . .

அ. ஒவ்வொரு சொல்லிற்கும் பொருள் அறிந்து படிப்பது
ஆ. உரைநடை போலப் படிப்பது
இ. இசையோடு பாடிப் படிப்பது
ஈ. சந்தநயம் தோன்ற வாய்விட்டுப் படிப்பது

II. இப்பாடலில் பொதிந்துள்ள கூறுகளில் சிறப்பாகக் கருதப்படுவது

. . . .

அ. உணர்வின் ஆழம்
ஆ. ஒலிநயம்
இ. பொருள்நுட்பம்
ஈ. சொல்லமைப்பு

விடை: I - அ & ஈ; II - அ & ஈ பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Enumerative
- Literary input : Affectives : Ideologies - appreciation of the feelings expressed in a poetry
- Objective - ability level : To test <u>responding</u> in terms of satisfaction in response with reference to the appreciation of the feelings depicted in a poetry.

- Name of the item format : Objective category - Multiple facet
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Responding in terms of satisfaction in response with reference to appreciation of the feelings depicted in a poetry, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், ஒரு கவிதையில் வெளிப்படுத்தப்படும் உணர்வு பற்றிய துலங்கல் நிறைவு வாயிலாகத் துலங்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

323000 AFFECTIVE / VALUING
தகவாக்கல்

323100 AFFECTIVE / VALUING / ACCEPTANCE OF VALUE
தகவு ஏற்பு

Valuing : Acceptance of Value ➢ Genesis
தகவாக்கல் : தகவு ஏற்பு ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  A general briefing on the generic contents of literature may be given.
  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்க வளர்ச்சி பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.
- Instruction to the student :
  Six poetry pieces and a prose piece along with a set of statements on them are given below. Give your opinion by choosing it from the given alternatives.
  ஆறு பாடல் பகுதிகளும் ஓர் உரைநடைப் பகுதியும் அவை தொடர்பான சில கூற்றுக்களும் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்று ஒவ்வொன்றையும் பற்றிய உங்கள் கருத்தைக் கொடுக்கப்பட்டுள்ளன– வற்றிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

- Question / item stem :

பாடல் பகுதிகள் :

வாழியாதன் வாழி யவினி
பால்பல வூறுக பகடுபல சிறக்க
வெனவேட் டோளே யாயே யாமே
வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞ லூரன் றன்மனை
வாழ்க்கை பொலிக வெனவேட்டேமே.

– ஐங்குறுநூறு ... ... (1)

ஒருநாட் செல்லலம் இருநாட்செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ

– புறநானூறு ... ... (2)

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

– திருக்குறள் ... ... (3)

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

– திருக்குறள் ... ... (4)

விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண
மேன்மேலும் முகம்மலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதும முகம் மலர்ந்தாரைக் காண்மின் காண்மின்.

– கலிங்கத்துப்பரணி ... ... (5)

ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத்து இடுவாராகின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே.

– விவேக சிந்தாமணி ... ... (6)

உரைநடைப் பகுதி :

கண்ணன் தனக்குச் சொந்தமான கால் ஏக்கர் நிலத்தை உழுதுவிட்டு தன்னுடைய குடிசைக்குத் திரும்பி வந்தான். பசியால் வந்த அவனுக்கு அவனுடைய மனைவி வீட்டில் உள்ள கூழைக் கொடுக்கிறாள். அவனும் உண்ட களைப்பால் வீட்டின் முன்பகுதியில் இருக்கும் திண்ணையில் கொஞ்சநேரம் ஓய்வெடுக்கப் படுக்கிறான். அந்த நேரத்தில் ஒரு பெரியவர், தனக்குத் தெரிந்த ஒரு உறவினரின் விலாசத்தைக் கேட்டு வருகிறார். திண்ணையில் படுத்திருக்கும் கண்ணனிடம், விவரத்தைக் கேட்கிறார். அந்தப் பெரியவரைத் தன்னுடைய பக்கத்தில் உட்காரும்படி கூறி 'ஐயா நீங்கள் தேடிவந்த உறவினர் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவர்கள் வைத்திருந்த நிலத்தை விற்றுவிட்டுப் பிழைக்க வழிதேடி நகரத்திற்குச் சென்று விட்டார்கள். தற்போது அந்த வீட்டில் யாரும் இல்லை' என்று கூறினான். இதைக் கேட்ட பெரியவர் பார்க்க வந்த உறவினர் இல்லையே என்று வருந்தினார். நீண்டதூரம் பயணம் செய்து வந்ததால் அவர் மிகவும் களைப்பால் இருப்பதை அறிந்த கண்ணன் தன்னுடைய மனைவியை அழைத்து அப்பெரியவருக்கு உணவு கொடுக்கும்படி கூறுகிறான். அவளும் தான் உண்ண வைத்திருந்த கூழை அப்பெரியவருக்கு இன்முகத்துடன் கொடுக்கிறாள். பெரியவருக்கு இருந்த பசியால் அந்தக் கூழும் அவருக்கு அமிர்தமாக இருந்தது. அவருடைய மனம் அவர்களை வாழ்த்தியது.

கூற்றுக்கள் :

அ. உழைப்பின் மீது நம்பிக்கை வேண்டும். ஆம் / இல்லை / முடிவு கூற முடியவில்லை

ஆ. பிறருக்கு உதவுவதால் நம்முடைய செல்வம் அழியும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ.

இ. செல்வம் பெருகப் பெருக விருந்தோம்பல் பண்பும் பெருகும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஈ. நமக்குப் புகழ் ஈட்டுவதற்காகப் பிறருக்கு உதவ வேண்டும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

உ. விருந்தினரை நெடுநாள் உபசரிக்க முடியாது. ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஊ. எத்துணைத் துன்பத்திலும் பிறருக்கு உதவ வேண்டும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

எ. பிறர் நல்வாழ்வில் நாம் மகிழ்வு கொள்ளலாம். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஏ. பிறருக்கு உதவுவதில் நாம் இன்பங்காண முடியும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஐ. செல்வத்தைத் திரட்டுவதில் முனைப்பாக இருக்கவேண்டும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஒ. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது சரிதான். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஓ. கேட்பவர்களுக்கு உதவ வேண்டும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

ஔ. தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும். ஆம் / இல்லை / மு. கூ. மு. இ

விடை: அ, உ, ஊ, ஏ, ஐ மற்றும் ஔ – ஆம்.

[The answers are expected to show the extent of acceptance of the value]

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evolution - Humanism
- Objective - ability level : To test valuing in terms of acceptance of value with reference to humanism in literature.
- Name of the item format : Questionnaire - Inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Valuing in terms of acceptance of a value with reference to humanism in literature is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், இலக்கியங்களின் மனித நேயக் கூற்றுக்கள் பற்றிய தகவு ஏற்பு வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Valuing : Acceptance of Value
தகவாக்கல் : தகவு ஏற்பு

➢ Generics
➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Valuing : Acceptance of Value
தகவாக்கல் : தகவு ஏற்பு

➢ Aesthetics
➢ முருகியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Valuing : Acceptance of Value
தகவாக்கல் : தகவு ஏற்பு

➢ Affectives
➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Based on the short story given below, record your opinion on each of the following statements by choosing one of the three alternatives provided.

  பின்வரும் கதையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் கருத்தை எதிரேயுள்ள மூன்று நிலைகளிலிருந்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் வெளிப்படுத்துக.

- Question / item stem:

சிறுகதை :

தெருக்கோடியில் இருந்த ஒரு முனிசிபல் விளக்கிற்குக் கீழே தினமும் ஒரு கிழவன் வந்து உறங்குவான். ஆனால் தற்போது அந்தத் தெருவிளக்கு மனிதர்களுக்கு வரும் இளமை, மூப்பு, சாக்காடு என்பது போல் அது தன்னுடைய மூப்புப் பருவத்தைக் காட்டும் வகையில் அதன் கல் உடம்பு காய்ந்தும், சிரத்தில் இருந்த கண்ணாடி ஒரு பக்கம் உடைந்தும் இருந்தது. உடைந்த தெருவிளக்காக இருந்தாலும், அந்தக் கிழவனைக் கொஞ்சமாவது தேற்றி வந்தது. ஆனால் ஒருநாள் காற்று அடித்து அதன் வெளிச்சமும் போய்விட்டது. பயன்படாத அந்த விளக்குக் கம்பத்தைத் தோண்டி எடுத்துவிட்டனர். பிச்சையெடுத்துத் திரும்பிய அந்தக் கிழவனுக்கு வெறும் குழிமட்டுந்தான் இருந்தது. அதனால் உலகம் சூனியமாய், பாழ் வெளியாய், அர்த்தமற்றதாய் இருப்பதாக உணர்ந்தான். மறுநாள் காலை அந்தக் கிழவன் இறந்து கிடந்தான். இப்போது ஒரு புது மின்சார விளக்குக்குக் கீழே குழந்தைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் மூப்பு என்பது ஒன்று இருக்கிறது அல்லவா?

– புதுமைப் பித்தன் (தெருவிளக்கு)

கூற்றுக்கள் :

அ.	பிறர் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை நினைப்பது உண்டு.	ஆம் / ஓரளவு / இல்லை
ஆ.	பழையன கழிதலும் புதியன வருதலும் அனைவர் வாழ்க்கையிலும் நிகழும்.	ஆம் / ஓரளவு / இல்லை
இ.	மூப்பு எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக இருக்காது.	ஆம் / ஓரளவு / இல்லை
ஈ.	வயோதிகரைப் பயன்படாதவர் எனக்கருதுவது தவறு.	ஆம் / ஓரளவு / இல்லை

விடை: 'அ' முதல் 'ஈ' வரை – 'ஆம்'. [Yes ((') may be treated as correct answer for all the questions].

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - Narration of human life
- Objective - ability level : To test valuing in terms of acceptance of value with reference to the narration of human life.
- Name of the item format : Questionnaire - inventory
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary
- Rationale : Valuing in terms of acceptance of a value with reference to the narration of human life, is tested at the identification level. இனங்காணுதல் நிலையில், மனித வாழ்க்கையைக் காட்டும் சிறுகதை எழுத்தாளரின் கூற்று பற்றிய தகவு ஏற்பு வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

323200 *AFFECTIVE / VALUING / **PREFERENCE FOR A VALUE***

தகவு விருப்பம்

Valuing : Preference for a Value ➢ Genesis

தகவாக்கல் : தகவு விருப்பம் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Valuing : Preference for a Value ➢ Generics
தகவாக்கல் : தகவு விருப்பம் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the genres of literature may be given.
  இலக்கிய வகைமை வகைகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Four pieces of poetries on desirable speech along with a set of statements are given below. Read them carefully and give your rating on each of the aspect you consider important, in the given five point scale.
  இனிய சொற்களைப்பற்றி வலியுறுத்தும் நான்கு பாடல் பகுதிகளும் அவை தொடர்பான சில கூற்றுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்குமான உங்களுடைய கணிப்பை அவற்றின் எதிரேயுள்ள ஐ ந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

  நேரிசை வெண்பா :
  இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
  வன்சொலால் என்றும் மகிழாதே – பொன்செய்
  அதிர்வளையாய் பொங்காது அழற்கதிரால் தண்ணென்
  கதிர்வரவால் பொங்கும் கடல்.
  – சிவப்பிரகாசர் ... ... (1)

  குறள் வெண்பா :
  இனிய உளவாக இன்னாத கூறல்
  கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
  – திருவள்ளுவர் ... ... (2)

  விருத்தம் :
  நகைமுகம் இனியசொலும் நல்ல செல்வம்
  நஞ்சமன்ன வஞ்சரையும் நயந்து வெல்லும்
  பகைஎவரும் ஆகாமல் பார்த்துக் கொள்க
  பகைநேரின் சமரசமாய்த் தீர்த்துக் கொள்க.
  – நாமக்கல் கவிஞர் ... ... (3)

கண்ணி :

இன்சொல் இனிதாகும் – பெண்ணே
இன்னல் செய்ய வேண்டாம்.
– பாரதிதாசன் ... ... (4)

கூற்றுக்கள் :

அ. இனிய சொற்கள் நமக்குப் பயனளிக்கும்.	5	4	3	2	1
ஆ. இனிமையற்ற சொற்கள் தீங்கு விளைவிக்கும்.	5	4	3	2	1
இ. இனிய சொற்கள் மற்றவர்களிடமிருந்து நம்மை மேம்பாடு அடையச் செய்யும்.	5	4	3	2	1
ஈ. இனிய சொற்களையே பேசவேண்டும் எனப் பிறர் விரும்புவார்.	5	4	3	2	1
உ. இனிய சொற்கள் பலருக்கும் விருப்பமாக அமையும்.	5	4	3	2	1

விடை: இ, உ ஆகிய பிரிவுகளுக்கு அதிகப்படியான மதிப்பு.
[It reveals preference for a value].

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - poems on pleasant speech
- Objective - ability level : To test valuing in terms of preference for a value with reference to poems on pleasant speech.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate
- Rationale : Valuing in terms of preference for a value with reference to poems on pleasant speech, is tested at the identification level. இனங்காணுதல் நிலையில், இன்சொல் பேசுவதை வெளிப்படுத்தும் கவிதைகள் பற்றிய தகவு விருப்பம் வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Valuing : Preference for a Value ➢ Aesthetics
தகவாக்கல் : தகவு விருப்பம் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the aesthetics of literature may be given.
  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Indicate the value of your appreciation on the simile used in the given Kuruntokai poem which narrates the love of an young man in the five point scale given.

  ஒரு பெண்ணின்பால் ஓர் இளைஞன் கொண்ட காதலை விளக்குவதாக அமையும் கீழேயுள்ள குறுந்தொகைப் பாடலின் உவமைகளை ஆய்ந்து, கொடுக்கப்பட்டிருக்கும் கூற்றுக்களுக்கு உங்கள் மதிப்பினை ஐந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  ஐந்நிலைக் கணிப்பளவுக்கான எண்களின் விளக்கம் :
  5 – மிகவும் ஏற்புடையது; 4 – ஏற்புடையது ; 3 – ஓரளவு ஏற்புடையது ;
  2 – எப்போதாவது ஏற்புடையது ; 1 – ஒருபோதும் இல்லை

- Question / item stem :

  பாடல் :

  இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
  நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
  ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
  கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
  வெண்ணெய் உணங்கல் போலப்
  பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே.
  – குறுந்தொகை

  கூற்றுக்கள் :

அ. தலைவனின் குற்ற உணர்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது.	5	4	3	2	1
ஆ. உறவினர்கள் தலைவனின் மெத்தனத்தை கடிந்துரைப்பதாக இருக்கிறது.	5	4	3	2	1

இ. பெற்றோரின் எதிர்ப்பை மீறமுடியாமல் குழம்பித் தவிக்கும் தலைவனின் இயலா–மையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. 5 4 3 2 1

ஈ. தலைவனின் நடத்தையைப் பொறுக்காத பெற்றோர்களின் சுடுமொழியாக இருக்கிறது. 5 4 3 2 1

உ. காதலின் வேட்கையால் மனம் துடிக்கும் தலைவனின் தவிப்பாக இருக்கிறது. 5 4 3 2 1

விடை: 'இ' பிரிவுக்கு அதிகப்படியான மதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Aspects in discourse - Simile
- Objective - ability level : To test <u>valuing</u> in terms of preference for a value with reference to the similes portrayed in a poetry.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : <u>Valuing</u> in terms of preference for a value with reference to the similes portrayed in a poetry, is tested at the suitability level. பொருத்த நிலையில் ஒரு கவிதையில் உவமை காட்டும் பொருள் பற்றிய தகவு விருப்பம் வாயிலாகத் <u>தகவாக்கல் உணர்வு</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Valuing : Preference for a Value ➢ Affectives
தகவாக்கல் : தகவு விருப்பம் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.
  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  A passage on 'one's responsibility in a society' and a set of statements on that passage are given below. Read them carefully and give your opinion on each of them in a three point scale provided.

  ஒரு சமுதாயத்தில் தனிமனிதனின் பொறுப்புணர்வுகளைப்பற்றி விளக்கும் ஓர் உரைநடைப் பகுதியும் அது தொடர்பான சில கூற்றுக்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நன்கு படித்துணர்ந்து கூற்றுக்கள் ஒவ்வொன்றுக்குமான உங்கள் கணிப்பினை அவற்றிற்கு எதிரேயுள்ள மூன்று நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  கணிப்பளவு எண்களின் விளக்கம் :
  3 – ஆம்; 2 – இல்லை; 1 – தெரியவில்லை

- Question / item stem :

  உரைநடைப்பகுதி :

  காந்திமகான் ஆதாரப் பயிற்சிப்பள்ளியை விட்டு வெளியேறும்போது "தம்பிகளே! வாழ்வில் பிற உயிர்களுக்குத் துன்பம் தராத தொழில்கள் இரண்டே இருக்கின்றன. ஒன்று, நீங்கள் ஏற்கப் போகும் ஆசிரியத் தொழில்; மற்றொன்று மருத்துவத் தொழில். இரண்டிலுங்கூட ஆசிரியத் தொழிலே சிறந்தது. மருத்துவத் தொழிலில் நோய், முதுமை, சீழ், உடல் உறுப்பு – இவற்றையே பார்த்துக்கொண்டு வாழவேண்டும். ஆசிரியத் தொழிலிலோ இளமை, அழகு, மலரும் குழந்தை உள்ளம் இவையே உங்கள் முன் எப்போதும் திகழ்ந்து கொண்டிருக்கும். இந்த அருமையான பணி உங்களுக்கு வாய்த்துள்ளது. அறியாமையில் அமிழ்ந்து புழுப்போல் நெளியும் ஏழை எளியவர்க்கு 'அ, ஆ' சொல்லித்தருவதோடு உங்கள் வேலை முடிந்துவிடவில்லை. கூட்டல், பெருக்கல், வகுத்தல், கழித்தல் ஆகிய கணக்குகளைக் கற்றுத் தருவதோடு உங்கள் வேலை முடிந்து விடுவதில்லை. உங்கள் வாழ்க்கையிலிருந்து, நீங்கள் வாழ்வதைப் பார்த்துச் சின்னஞ்சிறு குழந்தைகள் கற்பதே மிகுதி. ஒவ்வொரு குழந்தையோடும் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களின் இதயத்தில் இடம் பெறுங்கள். இந்த உலகத்தில் பெறுவதற்கு அரிய பெருஞ்செல்வங்களுள் எல்லாம் பெரியது இதயமே ஆகும். சேரி சேரியாக, கிராமம்

கிராமமாக, வீடு வீடாகச் சென்று உங்களிடம் படிக்கும் குழந்தைகளின் ஊர்ச்சூழல், மனநிலை இவற்றைப் புரிந்துகொண்டு பணியாற்றுங்கள். எந்த அளவு உங்கள் வகுப்புக் குழந்தைகளின் உள்ளங்களை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களோ அந்த அளவுக்கு உங்கள் தொண்டு சிறப்படையும் ...." என்று உளநூல் ஆசிரியர்கள் கூறிய சொற்கள் என் நெஞ்சில் இன்றும் உள்ளன.

அதனால்தான் கருங்கண்ணி ஆதார உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தொழில் ஏற்றதிலிருந்து விடுமுறை நாட்களில் இப்படிச் சேரி, குப்பம், ஊர் என்று பள்ளிப்பிள்ளைகள் வாழும் பல இடங்களையும் முறை வைத்துக் கொண்டு சுற்றி வரலானேன். பணக்காரர், ஏழை, உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பேதம் எதுவுமின்றி அந்தக் குழந்தைகள் இதயம் எல்லாம் அன்பு ஊற்றாக மலர்ந்து கமழ்வதை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கண்டு பூரித்துப் போவேன். குழந்தைகட்கு அன்பும் பண்பும் நிறைந்த ஒரு குடில் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் அனாதைப் பிள்ளைகள் படும் துயரை நினைக்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் எழும். இப்போது அந்தக்குடில் ஓரிடத்தில் ஒடுங்கி அமைந்துவிடாமல் ஊரெல்லாம் சேரியெல்லாம் தன்னுள் கொண்டு விளங்குவதாக உணர்ந்து வரலானேன்.

கூற்றுக்கள் :

அ. மக்கள் தாங்கள் விரும்புவது போல்தான் நடந்து கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் உணர்வு பெற முடிகிறது.	3	2	1
ஆ. எனக்கு விநோதமாகத் தோன்றுகின்ற நம்பிக்கைகளையும், மனப்பான்மைகளையும் மக்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரும் வாய்ப்பு ஏற்படுகிறது.	3	2	1
இ. நம்முடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பிறரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது.	3	2	1

ஈ. என் வாழ்க்கையில் என்னை எதிர் நோக்கியுள்ள பணிகள் பலவுள்ளன என உணர முடிகிறது. 3 2 1

உ. இந்நாள் வரை என் விடுமுறை நாட்களை வீணாகக் கழித்து விட்டேனோ என்ற உணர்வு பிறக்கிறது. 3 2 1

ஊ. மக்களுக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்வதால் புகழ் பெறலாம் என நினைக்கத் தோன்றுகிறது. 3 2 1

எ. என் வாழ்க்கையில் சிறந்த குறிக்கோள்களைக் கொண்டிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. 3 2 1

ஏ. ஆசிரியர் பணியில் இல்லாமல் வேறு பணிகளில் இருந்தாலும் பொதுத் தொண்டாற்றும் வாய்ப்புகள் கிடைக்கும் என்று உணர முடிகிறது. 3 2 1

ஐ. சின்னஞ் சிறுவர்களின் ஆளுமைத் திறனை வளர்ப்பதே நம் பணிகளின் பயனாக அமைய வேண்டும் என்று அறிய முடிகிறது. 3 2 1

ஒ. மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வு வேறுபாடு பாராட்டாத உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உணர முடிகிறது. 3 2 1

விடை: ஈ, ஊ, எ, ஏ, மற்றும் ஒ – ஆம். [This indicates the preference for a particular value].

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - Individual's responsibility in the society
- Objective - ability level : To test valuing in terms of preference for a value with reference to individuals responsibility in the society.
- Name of the item format : Rating scale

- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate.
- Rationale : Valuing in terms of preference for a value with reference to individual's responsibility in the society, is tested at the suitability level.

  பொருத்த நிலையில் சமுதாயத்துக்கான தனிமனிதக் கடமையை உணர்த்தும் இலக்கியம் பற்றிய தகவு விருப்பம் வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

323300 AFFECTIVE / VALUING / COMMITMENT
தகவீடுபாடு

Valuing : Commitment
தகவாக்கல் : தகவீடுபாடு

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  A general briefing on the generic contents of literature may be given.

  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்கங்கள் பற்றிய பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Various poetries of Subramania Bharathiar are given below. Based on them, a number of statements are given below. Indicate your opinion on each of them by choosing one of the options from the five point scale provided.

  சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பல்வேறு பாடல்களின் அடிப்படையில் சில கூற்றுக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றையும் பற்றிய உங்கள் கருத்தினை எதிரேயுள்ள இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடவும்.

- Question / item stem :

பாடல் :

ஆயிரம் உண்டிங்கு ஜாதி – எனில்
அன்னியர் வந்து புகல் என்னநீதி – ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் – தம்முள்
சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ. ... ... (1)

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டு இளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டி சைத்துத்
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம். ... ... (2)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.... ... ... (3)

சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம். ... (4)

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம். ... ... (5)

சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு
தன்னில் செழித்திடும் வையம். ... ... (6)

– பாரதியார்

கூற்றுக்கள் :

அ. நம்மிடம் காணும் வேற்றுமைகளை
நாமே களைந்து கொள்ள வேண்டும். ஏற்பு / மறுப்பு

ஆ. சமுதாயத்தில் வேரூன்றி விட்ட ஒரு
பழக்கத்தை நீக்குவதற்கான வழிகளைக்
காண வேண்டும். ஏற்பு / மறுப்பு

இ. அறியாமையை நீக்க எல்லோரும்
பங்கேற்க வேண்டும். ஏற்பு / மறுப்பு

ஈ. ஒரு கருத்தை ஒருவரிடம் உருவாக்கக் குழந்தைப் பருவத்திலேயே அதை வளர்க்க வேண்டும். ஏற்பு / மறுப்பு

உ. மாந்தர் இனத்துக்குள்ளே வேற்றுமையைத் தோற்றுவிக்கின்ற எந்த ஒரு பழக்கத்தையும் உடனடியாகக் களைந்தெறிய வேண்டும். ஏற்பு / மறுப்பு

விடை: அனைத்து வினாக்களுக்கும் 'ஏற்பு'. ['acceptance' to all questions denotes his realisation of social goals for the betterment of the society].

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Volution - moral value
- Objective - ability level : To test valuing in terms of commitment with reference to moral values.
- Name of the item format : Questionnaire - inventory
- Administering mode : Written
- Educational level : L_1 - High school / L_2 - Intermediate
- Rationale : Valuing in terms of commitment with reference to moral values is tested at the suitability level.
  பொருத்த நிலையில், அறநெறிப் பண்புகள் பற்றிய தகவு ஈடுபாடு வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Valuing : Commitment ➢ Generics
தகவாக்கல் : தகவீடுபாடு ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the generic contents and themes of literature may be given.

  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்கம், கரு ஆகியவை பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

A poetry on untouchability and a set of statements suggesting ways and means to eradicate such social evils are listed below. Give your opinion on each of the statement in the three point scale provided.

தீண்டாமையை எதிர்ப்பதாக அமையும் பாடலின் அடிப்படையில், சமுதாயச் சீர்கேடுகளை அழிப்பதற்காகக் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் கீழே கூற்றுக்களாகத் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் உங்களுக்கு எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதை மூன்று நிலை கணிப்பளவில் குறிப்பிடுக.

கணிப்பளவு எண்களின் விளக்கம் :

3 – மிக முக்கியமானது; 2 – முக்கியமானது; 1 – அவ்வளவு முக்கியமில்லை

- Question / item stem :

தீண்டாமை பற்றிய பாடல் :

ஒற்றுமையாக உழைத்திடுவோம் – நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் – இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம்.

கூடி விருந்துண்ண வேண்டவில்லை – பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி எவரோடும் நட்பினராய்த் – தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டம் உண்டோ?

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு – சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்கள் என்று – நிதம்
பல்லவி பாடிப் பயன் எதுவோ?

வேதன் முகத்தில் உதித்தவரே – இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம் !
பாத மதில்வந்த பாவியரே – என்றும்
பாரில் இழிந்த அடிமைகளாம்!

வாயில் விஷம் உண்டு பாம்பினுக்கு – கொட்டும்
வாலில் விஷம் உண்டு தேளினுக்கு
தாயிற் சிறந்த பிரமனுக்கும் – இரு
தாளில் விஷம் உண்டோ? சாற்றுவீரே!

உச்சி மரத்திற் சுவைக்கனியும் – தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ?

சாதி இரண்டலால் வேறுளதோ? ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ!
ஆதி இறைவன் வகுத்ததுவோ– மக்கள்
ஆக்கிய கற்பனை தான் இதுவோ?

நாயனார் வந்த திருக்குலத்தை – உயர்
நந்தனார் வந்த பெரும் குலத்தைத்
தீயகுலம் எனத் தள்ளுவரேல் – அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ?

வேதிய ராலே மழைவருமேல் – வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ?
வாதமெ லாம்கட்டி வைத்திடுவோம் – ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம்.

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன் ? – கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர் – இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ?

மானமே வாழ்வின் உயிர்நிலையாம் – அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈனச் சாதியெனும் பேச்சினைப்போல் – நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ?

மன்னுயிர்க் காக முயல்பவரே – இந்த
மானிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே – என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர், அம்மா!

–கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

கூற்றுக்கள் (பகுதி I) : தீண்டாமைக் கேடுகளை ஒழிக்க

அ. அவர்களை வீட்டிற்கு எல்லா சமயத்திலும் அழைத்துச் செல்ல வேண்டும்.	3	2	1
ஆ. வாய்ப்பு ஏற்பட்டால் திருமண உறவை அவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.	3	2	1
இ. அவர்களின் சாதியில் சேர வேண்டும்.	3	2	1
ஈ. எந்தச் சாதியினராக இருந்தாலும் சமமாகப் பாவித்து நட்புக்கொள்ள வேண்டும்.	3	2	1
உ. அடிக்கடி அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று பழக வேண்டும்.	3	2	1
ஊ. தீண்டாமை ஒழிப்புக்காகப் பாடுபட வேண்டும்.	3	2	1

கூற்றுக்கள் (பகுதி II) : இன, மத வேறுபாடு ஒழிக்க

அ. எந்த மதத்தினராக இருப்பினும் சமமாகப் பாவித்து நட்புக்கொள்ள வேண்டும்.	3	2	1
ஆ. எல்லா மதக் கோவில்களுக்கும் அடிக்கடி செல்ல வேண்டும்.	3	2	1
இ. பிற மதத் திருவிழாக்களிலும் பண்டிகைகளிலும் வாய்ப்பு ஏற்படும்போது பங்கு கொள்ள வேண்டும்.	3	2	1
ஈ. எல்லா மதப் புனிதநூல்களையும் படிக்க வேண்டும்.	3	2	1
உ. எல்லா மத வழக்கங்களையும் கடைபிடிக்க வேண்டும்.	3	2	1
ஊ. பிற மதத்தில் சேர வேண்டும்.	3	2	1

விடை: பகுதி I : ஈ மற்றும் ஊ – மிகவும் முக்கியம்
இ – அவ்வளவு முக்கியமில்லை

பகுதி II : அ மற்றும் இ – மிகவும் முக்கியம்
உ மற்றும் ஊ அவ்வளவு முக்கியமில்லை
மற்றவை ஓரளவு முக்கியம்

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Measures to curb eradication of untouchability and religious fanaticism.
- Objective - ability level : To test valuing in terms of commitment with reference to measures to curb untouchability and religious fanaticism.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate
- Rationale : Valuing in terms of commitment with reference to measures for curbing untouchability and religious fanaticism, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், சமுதாயத்திலிருந்து நீக்கப்படவேண்டிய சாதி மத தீவிரவாதப் போக்கு பற்றிய தகவு ஈடுபாடு வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Valuing : Commitment ➢ Aesthetics
தகவாக்கல் : தகவீடுபாடு ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Valuing : Commitment
தகவாக்கல் : தகவீடுபாடு

➢ Affectives
➢ உணர்வியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.
  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  A free verse on the social problems faced by the lovers and a set of suggestions to overcome the problems are given. Read them carefully and record your views on each statement in the given five point scale.

  காதலர்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகளைப்பற்றிய புதுக்கவிதை ஒன்றும் அப்பிரச்சினைகளைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் மீதான உங்கள் கருத்தை ஐந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  கணிப்பளவு எண்கள் விளக்கம் :

  5 – மிகமிக ஏற்றுக் கொள்ளக்கூடியது; 4 – மிக ஏற்றுக் கொள்ளக் கூடியது;
  3 – ஏற்றுக் கொள்ளக் கூடியது; 2 – ஓரளவு ஏற்றுக் கொள்ளக் கூடியது;
  1 – ஏற்றுக் கொள்ள முடியாதது

- Question / item stem :

  புதுக்கவிதை :

  தண்டவாளங்களைப் போல்
  நெருங்கியிருந்தும்
  சந்திக்க முடியாமல்
  தண்டிக்கப்பட்டிருக்கிறோம் . . .

  கண்ணே!
  காலம் விநோதமான
  சர்வாதிகாரி
  உள்ளங்களை
  உள்ளங்கையில் வைத்து
  மென்று பார்க்கிறான் ...

அவன் வாயில்
வெற்றிலைச் சாறு
நம்
காதல் இதயக்
கனவுகளின் இரத்தம் !

உன்னைப் பற்றிச் சொல்லும்
வார்த்தைகளுக்கும்
அபூர்வ வீாசனை
நினைவுகளுக்கும்
நிலா ஒளிவளையம்
கற்பனைகளுக்கும்
தங்கச் சிறகுகள் .....

நீயே அழகு
உன்னைப் பற்றிய
எல்லாமே பின்
எப்படி இருக்கும்?

ஆயினும் பெண்ணே!
நான் என்ன செய்யட்டும்.

அப்பா கேட்கிறார்
நோட்டு
அச்சிடும் எந்திரம்
அம்மா கேட்கிறார்
கோலார் சுரங்கம்...

நீ கேட்கிறாய்
நறுமண மாலை...

நானும் யார் யாரையோ
கேட்கிறேன்
வேலை... வேலை.... வேலை

காதல்
அதுதான் தண்டிக்கப்பட்டிருக்கிறதே !

செயல்பாடுகள் :

அ. வேலை தேடி அலைவதைவிடச் சொந்தத் தொழில் தொடங்க முயல்வேன்.	5	4	3	2	1
ஆ. பழமைவாதிகளைத் திருத்த முயல்வேன்.	5	4	3	2	1
இ. காதலுக்குத் தடைவிதிக்கும் பெற்றோர்களை எதிர்ப்பேன்.	5	4	3	2	1
ஈ. பணத்தின் ஆதிக்கம் இல்லாத சமுதாயம் உருவாக்கப் பாடுபடுவேன்.	5	4	3	2	1
உ. இன்றைய சமுதாய நிலையில் காதலிக்கும் உணர்வைத் தவிர்ப்பேன்.	5	4	3	2	1
ஊ. புதிய சிந்தனை உடையோர்களுக்கு ஆதரவு தருவேன்.	5	4	3	2	1
எ. வரதட்சிணை ஒழிப்புக்காகப் போராடுவேன்.	5	4	3	2	1
ஏ. காதல் திருமணம் புரிய முற்படுவோரைப் பாராட்டி ஆதரிப்பேன்.	5	4	3	2	1
ஐ. வேலைக்கு உத்தரவாதம் தரும் கல்வித் திட்டத்தை உருவாக்கும் சமுதாயத்தைப் படைக்க முயல்வேன்.	5	4	3	2	1
ஒ. என் வாழ்நாளில் எந்தச் சிக்கலிலும் என்னை உட்படுத்திக் கொள்ளளும் நிலையைத் தவிர்ப்பேன்.	5	4	3	2	1

விடை: அ, ஈ, எ, ஏ மற்றும் ஐ – உயர்ந்த மதிப்பீட்டைப் பெறவேண்டும்.

[Note : The score in each aspect may be taken as the quality of a commitment to the particular sub-aspects. The total score may be taken as a measure of commitment to the social goals].

Scoring procedure : Analytical

- Literary input : Affectives : Ideologies - Poet's views on social stigma
- Objective - ability level : To test valuing in terms of commitment with reference to a poet's view on social stigma.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate
- Rationale : Valuing in terms of commitment with reference to a poet's view on social stigma, is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், சமூகப்பிரச்சினைகள் தொடர்பான ஒரு கவிஞரின் கருத்து பற்றிய தகவு ஈடுபாடு வாயிலாகத் தகவாக்கல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

324000 AFFECTIVE / ORGANIZATION

ஒருங்கமைத்தல்

324100 AFFECTIVE / ORGANISATION / CONCEPTUALIZATION OF VALUE

தகவுக் கருத்துருவாக்கம்

Organization : Conceptualization of Value ➢ Genesis
ஒருங்கமைத்தல் : தகவுக் கருத்துருவாக்கம் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the generic contents of literature may be given.

  இலக்கிய வகை அடிப்படையில் உள்ளடக்கம் பற்றிப் பொதுவான வளர்ச்சிகளை விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Based on the following passage, a set of statements are given below. Make an analysis and give your opinion on each of the statements in a two point scale.

கீழ்வரும் உரைநடைப்பகுதியின் அடிப்படையில் சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து, அவை ஒவ்வொன்றுக்குமான உங்கள் கருத்தை இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

உரைநடைப்பகுதி :

சங்க காலத்து இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டு நிலைகளாகக் கூறுகிறது. அகம் காதலையும், புறம் வீரம், கல்வி போன்ற சில கூறுகளையும் விவரிப்பதாகும். அகத்தில் களவு, கற்பு என்ற இரண்டும் அமைய, புறத்தில் கொடையும் வீரமும் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கேற்ப இலக்கியங்கள் பாடப்பட்டன.

பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில் நுட்ப அறிவும் இன்றைய வாழ்க்கையைப் பெரிதும் மாற்றியுள்ளது. தற்கால இலக்கியங்களும் பலவகையில் மாறியிருக்கின்றன. அவை இன்றைய மனிதவாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாய், இயல்பாய்க் கூறுவதாய் உள்ளன. அன்றைய மரபுகள் தற்கால இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றனவா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

கூற்றுக்கள் :

அ. சங்க இலக்கியத்தில் கூறப்படுகின்ற வீரம், காதல் தற்கால இலக்கியங்களில் பெரிதும் காணப்படுகிறது. — ஆம் / இல்லை

ஆ. அன்றைய இலக்கியங்களில் வீரம், காதல் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. — ஆம் / இல்லை

இ. சங்க இலக்கியங்களில் அகப்பாடல்களில் காதலைவிட வீரம் இன்றியமையாத கூறாக இருக்கின்றது. — ஆம் / இல்லை

ஈ. எந்தவிதமான கருத்துகளும் உள்ளடக்கமாகக் கொண்டு இலக்கியங்கள் தோன்றலாம் என்ற நிலை தற்காலத்தில் இருந்து வருகிறது. — ஆம் / இல்லை

உ. தற்கால இலக்கியங்களில் வீர உணர்வை விடக் காதல் உணர்வே அதிகமாக இருக்கிறது. ஆம் / இல்லை

ஊ. எந்த விதமான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு எழுதினாலும் காதலும் வீரமும் வேண்டியிருக்கிறது. ஆம் / இல்லை

எ. வீர உணர்வு மக்களிடம் இருந்தாலும் தற்கால இலக்கியங்கள் அவற்றை ஒரு கூறாகக் கொண்டு பிரதிபலிப்பதில்லை. ஆம் / இல்லை

ஏ. தற்கால இலக்கியங்கள் இன்றைய மனித– வாழ்க்கையின் நிலையைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளன. ஆம் / இல்லை

விடை: அ, ஈ மற்றும் ஏ – ஆம்

அ, இ மற்றும் ஊ – இல்லை

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evolution - Background information
- Objective - ability level : To test organisation in terms of conceptualization of a value with reference to a background information about the society.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate & Postgraduate
- Rationale : Organisation in terms of conceptualization of a value with reference to a background information about the society, is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், சமுதாயப் பின்னணி தொடர்பான தகவல் பற்றிய தகவுக் கருத்துருவாக்கம் வாயிலாக ஒருங்கமைத்தல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Organization : Concepturalization of Value ➢ Generics
ஒருங்கமைத்தல் : தகவுக் கருத்துருவாக்கம் ➢ வகைமையியல்

- Instruction to the teacher.

  A general briefing on the contents and themes of various literary genres may be given.

  இலக்கிய வகை அடிப்படையிலான உள்ளடக்கம், கரு ஆகியவைகளைப் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Five poems highlighting the feelings of a girl's love are given below. Each one of them differs from the other in many respects. Read them in the light of their background and give your assessment on each of the statement by making a ✓ mark in the binary scale provided.

  ஒரு பெண்ணின் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஐந்து பாடல்களும் அவற்றை அடியொற்றி சில கூற்றுக்களும் கொடுக்கப்-பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்குமான உங்கள் கருத்தை ஆம் அல்லது இல்லை என்று குறிப்பதன் மூலம் வெளிப்படுத்துக.

- Question / item stem :

  பாடல்கள் :

  கண்தர வந்த காம ஒள்ளெரி
  என்புற நலியினும் அவரொடு பேணிச்
  சென்றுநா முயங்கற்கு அருங்காட் சியமே
  வந்தஞர் களைதலை அவராற் றலரே
  உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
  குப்பைக் கோழித் தனிப்போர் போல
  விளிவாங்கு விளியின் அல்லது
  களைவோ ரிலையானுற்ற நோயே.
  – குறுந்தொகை ... ... (1)

  இதுமற் றெவனோ தோழி துனியிடை
  இன்ன ரென்னு மின்னாக் கிளவி
  இருமருப் பெருமை யீன்றணிக் காரான்
  உழவன் யாத்த குழவியி னகலாது

பாஅற் பைம் பயி ராரு மூரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே.

– குறுந்தொகை ... ... (2)

யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

– குறுந்தொகை ... ... (3)

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பஎன்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.

– குறுந்தொகை ... ... (4)

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரைத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே.

– குறுந்தொகை ... ... (5)

கூற்றுக்கள் (பகுதி I) :

ஒருவர் தன் உள்ளப் போராட்டங்களிலிருந்து நீங்குவதற்கு

அ. பிறரை நோகடிக்காமல் தன்னைத் தானே
தேற்றிக் கொள்ள வேண்டும். ஆம் / இல்லை

ஆ. பிற பணிகளில் ஈடுபட்டு அந்தப் போராட்டங்களை மறக்க முயலவேண்டும். ஆம் / இல்லை

இ. இவ்வகைப் போராட்டங்கள் பிறருக்கும் உள்ளதாக எண்ணிப்பார்த்துத் தம்மைத் தேற்றிக் கொள்ள வேண்டும். ஆம் / இல்லை

ஈ. இவ்வாறான போராட்டத்தைத் தாங்கிக் கொள்வதற்குத் தம்மைத்தாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஆம் / இல்லை

உ. இவ்வாறான போராட்டத்திற்குக் காரணமான பிறரைக் கடிந்து கொள்ள வேண்டும். ஆம் / இல்லை

ஊ. போராட்ட உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆம் / இல்லை

கூற்றுக்கள் (பகுதி II):
ஒருவர் இன்னொருவர் மீது வைத்திருக்கின்ற அன்பின் பெருக்கம்

அ. அவர் செய்யும் உதவியால் அறியப்படும். ஆம் / இல்லை

ஆ. அவர் இல்லாதபோது ஏற்படுகின்ற மனவருத்தத்தால் அறியப்படும். ஆம் / இல்லை

இ. அவருக்காக, எந்தச் சூழ்நிலையிலும் பரிந்து பேசுகின்ற மனப்பான்மையால் அறியப்படும். ஆம் / இல்லை

ஈ. அவரது அன்பின் காரணமாக வருகின்ற துன்பத்தை வலிந்து ஏற்றுக்கொள்ளும் தன்மையில் அறியப்படும். ஆம் / இல்லை

உ. அவருடைய பகைவர்களைத் தாமும் பகைவராகக் கருதுவதால் அறியப்படும். ஆம் / இல்லை

ஊ. அவர் பகைவர்களுக்குக் கெடுதல் செய்வதால் அறியப்படும். ஆம் / இல்லை

விடை: பகுதி I : உ மற்றும் ஊ – இல்லை; மற்றன ஆம்
பகுதி II : உ மற்றும் ஊ – இல்லை; மற்றன ஆம்

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Poetry - Poet's expression on the inner feelings of a distressed girl.
- Objective - ability level : To test organisation in terms of conceptualisation of value with reference to a poet's expression on the inner feelings of a distressed girl.
- Name of the item format : Check list
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate & Research
- Rationale : Organisation in terms of conceptualisation with reference to a poet's expression on the inner feelings of a distressed girl, at the identification level.

  இனங்காணுதல் நிலையில், மனம் தளர்ந்துபோன ஒரு இளம் பெண்ணின் உள்ளுணர்வுகள் தொடர்பான ஒரு கவிஞரின் வெளிப்பாடு பற்றிய தகவுக் கருத்துருவாக்கம் வாயிலாக ஒருங்கமைத்தல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Organization : Concepturalization of Value ➢ Aesthetics
ஒருங்கமைத்தல் : தகவுக் கருத்துருவாக்கம் ➢ முருகியல்

❑ *Illustrative Example*

...... to be filled in later ......

* * *

Organization : Concepturalization of Value ➢ Affectives
ஒருங்கமைத்தல் : தகவுக் கருத்துருவாக்கம் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.
  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

  Instruction to the student :

  Based on two characters and the incidents associated with them are provided in a short story written by Puthumaipittan along with a few statements highlighting the related activities. Indicate your opinion on each of them in a three point scale.

  கீழேயுள்ள புதுமைப்பித்தன் சிறுகதையின் இரு பாத்திரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் சில கூற்றுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வொவ்வொரு கூற்றுக்குமான உங்களது கருத்தை மூன்றுநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  கணிப்பளவுக்கான எண்களின் விளக்கம் :
  3 – ஒப்புக்கொள்கிறேன்; 2 – ஒப்புக்கொள்ளவில்லை;
  1 – முடிவெடுக்க முடியவில்லை

  Question / item stem :

  சிறுகதை : திறந்த ஜன்னல்

  சாயங்காலம்.

  சிறு பசி என்ற நினைப்பைச் சாந்தி செய்ய ஒரு ஹோட்டலுக்குள் சென்றேன்.

  கூட்டத்திலே இடம் கிடைப்பது கஷ்டம்தான்; எனினும், என் அதிர்ஷ்டம் ஒரு மேஜை காலியாயிருந்தது.

  போய் உட்கார்ந்தேன்.

  ஏதோ வேண்டியதைச் சொல்லிவிட்டு, என்னத்தையோ பற்றி யோசித்துக்கொண்டு இருந்துவிட்டேன். அவன் வைத்துவிட்டுப் போனதையும் கவனிக்க வில்லை.

  மறுபடியும், "என்ன ஸார் வேண்டும்?" என்ற குரல் கேட்டது.

"முன்பே சொல்லியாகிவிட்டதே!"என்று நினைத்துத் திரும்பினேன்.

அவன் கேட்டது என்னையல்ல; என் எதிரிலிருந்த ஒருவரை. மெலிந்த தேகம்; கிழிந்த சட்டை, ஆனால் அழுக்கில்லை ; கிழிசல் தைக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று வாரம் கத்தி படாத முகம் ; சோர்வடைந்திருந்தாலும் கண்களில் ஒருவிதப் பிரகாசம் தென்பட்டது.

கீழே குனிந்து, மேஜைக்கு அடியிலிருந்த கைகளைக் கவனித்து-விட்டு, ஒரு பெருமூச்சுடன், (அது வெகு மெதுவாக வந்தது) "அரை கப் காப்பி!" என்றார்.

முகத்தில் 'பசி' என்பது ஸ்பஷ்டமாக எழுதியிருந்தது.

கையில் சில்லரையில்லை போலும் ! இதனால்தான் கீழே கவனித்துப் பார்த்துக்கொண்டார். பார்ப்பானேன்? நினைவில் இல்லாமலா போய்விடும்? யாரோ என்னைப்போல் இலக்கிய உலகத்தில் வேலை செய்பவர் என்ற முடிவிற்கு வந்தேன். அவர்களுக்குத்தானே இந்தக் கதி வரும்! சகோதரத் தொழிலாளி என்ற பாசம் ஏற்பட்டது. உதவி செய்யவேண்டுமென்ற ஆசை. தர்ம உணர்ச்சியால் அல்ல, சகோதர பாசத்தால்.

எப்படி ஆரம்பிப்பது? கோபித்துக்கொள்வாரோ என்னவோ? பக்குவமாகச் சொல்லிப் பார்த்தால் என்ன குடி முழுகிப்போகிறது?

"தங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!" என்று மனமறிந்து பொய் கூறினேன்.

"பார்த்திருக்க முடியாது!"

இது தடையுத்தரவு மாதிரி இருந்தது. இருந்தாலும் இன்னொரு தடவை.

"எனக்குப் பசி பிராணன் போகிறதே! தங்களுக்கு உடம்பிற்கு என்ன?" என்று காப்பிக் கோப்பையைக் கூர்ந்து நோக்கினேன்.

"பசியாமல் ஏன் ஓட்டலுக்கு வரவேண்டும்? " என்றார்.

"மறந்து போயிருக்கும்; அதனாலென்ன? நீங்கள் இன்று என்னுடைய விருந்தினராக இருக்க வேண்டும். இன்று என் பிறந்தநாள்!" என்றேன்.

"காசைக் கண்டபடி இறைக்காதேயும்" என்றார்.

"பாதகமில்லை. தயவுசெய்து..."

"சரி, உமதிஷ்டம்" என்றார். இருவரும் குதூகலமாகச் சாப்பிட்டோம். குதூகலம் என்னுடையது ; அவர் மௌனமாகத்தான் சாப்பிட்டார். இடையிலே இரண்டொரு வார்த்தை சிக்கனமாக இருப்பதைப்பற்றி. வெகு கூச்சமுள்ள பிராணி போலும்! இந்த ரகத்தை எனக்கு நன்றாகத் தெரியும். இலக்கியத்தில் இது எதிர்பார்க்கக் கூடிய விஷயமே. மிகவும் கஷ்டப்பட்டவர். அதனால்தான் சிக்கனத்தில் அதிகக் கருத்து!

ஒரு குழந்தையைப் போஷிப்பதைப்போல் மனம் கோணாமல் நாசூக்காகச் செய்தேன். 'பில்' ஏறக்குறைய ஒரு ரூபாயை எட்டிவிட்டது.

எழுந்திருந்தோம். மௌனமாக அவர் முன்சென்றார். பணத்தைக் கொடுக்க சில நிமிஷம் தாமதித்தேன்.

நேராக வெளியே சென்று ஒரு பளபளப்பான 'ஹில்மன்' காரில் கூசாமல் ஏறி உட்கார்ந்தார் அந்த மனுஷர்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பைத்தியமோ என்ற சந்தேகம்.

மோட்டார் டிரைவர் இயற்கையான சாவதானத்துடன் காரை விட்டுக்கொண்டு போய்விட்டான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'ஹோட்டல் காஷியர்' என்னமோ தெரிந்தவர்போல் விழுந்து விழுந்து சிரித்தார்.

நான் விழித்தேன்.

"அவன் பெரிய லக்ஷாதிபதி. பெரிய கருமி, கஞ்சன். யார் தலையையும் தடவுவதில்—இந்தச் சாப்பாட்டு விஷயத்தில்தான்—ஒரு பைத்தியம். இன்று நீர் அகப்பட்டுக் கொண்டீர்போலிருக்கிறது!" என்றார்.

நானும் சிரித்தேன். எதற்கு என்று எனக்குத் தெரியாது.

"தர்மம் செய்வதில் எவ்வளவு கஷ்டம் உண்டு பார்த்தீரா?" என்றார்.

"நான் தர்மம் செய்யவில்லையே!" என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

கூற்றுக்கள் :

அ.	எனக்கு அன்று பசியில்லாமல் இருந்திருந்தால் அத்தன்மையான மனிதரைக் காணும் வாய்ப்பை பெற்றிருக்க மாட்டேன்.	3	2	1
ஆ.	கருமியாய் இருந்திருந்தால் நான் அவருக்காகப் பணத்தை செலவளித்திருக்கமாட்டேன்.	3	2	1
இ.	அந்த மனிதர் உதவி தேவையில்லை எனக் கூறியிருந்தால் நான் அவமானப்பட்டிருப்பேன்.	3	2	1
ஈ.	அவர் ஏழை என்று கூறியிருந்தால் நான் அதிகம் செலவழித்திருப்பேன்.	3	2	1
உ.	என்னிடமும் தேவையான பணமே இருந்திருந்தால் அவரைக் கவனித்திருக்கவே மாட்டேன்.	3	2	1
ஊ.	நான் ஏமாற்றப்பட்டிருப்பதற்காக அந்த நபரைத் திட்டியிருப்பேன்.	3	2	1
எ.	இதற்குப் பிறகு பிறருக்கு உதவுவதை விட்டுவிடுவேன்.	3	2	1
ஏ.	ஒட்டலில் சாப்பிடுவதையே விட்டுவிடுவேன்.	3	2	1
ஐ.	நான் ஒட்டலிலோ வேறு இடங்களிலோ தெரியாத நபர்களிடம் பேசமாட்டேன்.	3	2	1
ஒ.	எனக்கொரு வாய்ப்புக் கிடைத்தால் அந்த நபரைப் பதிலுக்கு ஏமாற்றுவேன்.	3	2	1

விடை: அ முதல் ஊ வரை ஒப்புக்கொள்கிறேன்; எ முதல் ஒ வரை ஒப்புக்கொள்ளவில்லை.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Approach - Narration of characters.
- Objective - ability level : To test organization in terms of conceptualization of a value with reference to a narration of characters.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- Educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate

Rationale : Organization in terms of conceptualization of a value with reference to a narration of characters, is tested at the identification level.
இனங்காணுதல் நிலையில், நடந்த ஒரு நிகழ்வில் வெளிப்படும் கதைப்பாத்திரப் பண்புகள் பற்றிய தகவுக் கருத்துருவாக்கம் வாயிலாக ஒருங்கமைத்தல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

324200 *AFFECTIVE /* ORGANISATION / ***ORGANIZATION OF A VALUE SYSTEM***

தகவுமுறை ஒருங்கமைத்தல்

Organization : Organization of a Value System ➢ Genesis
ஒருங்கமைத்தல் : தகவுமுறை ஒருங்கமைத்தல் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on history of literary development may be given.

  இலக்கிய வளர்ச்சி வரலாறு பற்றிய பொதுவான விளக்கம் தரலாம்.

  Instruction to the student :

  A passage narrating the ancient Tamil society and its literary activities are given below along with certain statements on them. Give your opinion on each of them in a five point scale.

  பண்டைக்காலத் தமிழகத்தின் சமுதாய நிலையையும் இலக்கியப்-பாங்கையும் விவரிக்கும் ஓர் உரைநடைப் பகுதியும் அது தொடர்பான சில கூற்றுக்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்குமான உங்களுடைய கருத்தை ஐந்நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

  கணிப்பளவு எண்களுக்கான விளக்கம் :

  5 – முழுமையும் சரி ; 4 – சரி; 3 – ஓரளவு சரி; 2 – எப்போதாவது சரி;
  1 – சரியில்லை

- Question item / stem :

  உரைநடைப்பகுதி :

  சங்க காலத்து இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரு நிலைகளில் பகுத்தன. அவற்றில் முறையே அகம் காதலையும்

புறம் வீரத்தையும் அன்றைய மக்கட் பண்புகளாக எடுத்துக் கூறின. அகத்தில் களவு, கற்பு என்ற இரண்டும் அமைய, புறத்தில் கொடையும் வீரமும் பெரிதும் வலியுறுத்தப்பட்டன. எட்டுத்தொகையுள், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருளை எடுத்துக்காட்டும். பத்துப்பாட்டினுள் மதுரைக்காஞ்சி புறப்பொருளைப் பற்றி விளக்கமாகக் கூறும். மற்றும் நெடுநெல்வாடை, பட்டினப்பாலை ஆகியவற்றில் அம்மன்னர்களின் போர் நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. மன்னர்கள் அறப்போர் முறையைத் தழுவிப் போர் புரிய, புலவர்கள் அவர்களுக்கு அறிவுரை கூறியும், போரைத் தவிர்த்தும், சந்து செய்வித்தும் வாழ்ந்தமையைக் காணலாம். இவ்வாறு இலக்கிய வரலாற்றின் தொடக்கநிலையில் தோன்றிய புற இலக்கியங்கள் தொல்காப்பியர் வகுத்த புறத்திணைப் பாங்கை மேற்கொண்டு வாழ்ந்த சூழ்நிலை சங்க இலக்கியங்களின் பாடுபொருளாக விளங்கின. சங்கம் மருவியகால நிலையில் புலவர்கள் நல்வாழ்விற்காக மக்களுக்கு அறிவுரை புகட்டிய தன்மையும், வாழ்க்கைக்கு வேண்டிய நெறி முறைகளைக் கூறிய பாங்கும் சிறப்பான ஒன்று.

கூற்றுக்கள் :

அ. பண்டைய இலக்கியங்கள் அனைத்திலும் பெரும்பாலும் அக வாழ்க்கையான களவும் கற்பும்தான் பெரிதும் பாடப்பட்டன.	5	4	3	2	1
ஆ. பண்டைய இலக்கியங்கள் பெரும்பாலும் வீரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.	5	4	3	2	1
இ. மக்கள் வாழ்க்கை நிலை சீர்குலைந்து போயிருந்த காலத்தில் பெரும்பாலும் அறக்–கருத்துகளைப் புகட்டும் இலக்கியங்களே தோன்றின.	5	4	3	2	1

ஈ. பண்டைய இலக்கியங்களில் காதல், வீரம் என்ற இரண்டு மட்டுமே கூறப்பட்டன. 5 4 3 2 1

உ. பண்டைய இலக்கியங்களுள் வீரம், காதல், அறம், வாழ்க்கை நெறி ஆகிய அனைத்துத் தகவுகள் இருப்பினும் இலக்கிய வகைக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் ஒன்றிரண்டு கூறுகள் மட்டும் முதன்மை பெற்றுள்ளன. 5 4 3 2 1

விடை: 'இ' மற்றும் 'உ' தொடருக்கு அதிக மதிப்பீடும் மற்றவைகளுக்கு அதைவிடக் குறைந்த மதிப்பீடும் எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evolution - Background information as protrayed in the Sangam literature.
- Objective - ability level : To test organization in terms of organization of a value system with reference to the background information as portrayed in the sangam literature.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate / L_2 - Advanced
- Rationale : Organization in terms of organization of a value system with reference to the background information as portrayed in the sangam literature, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், சங்க இலக்கியம் காட்டும் சமுதாயப் பின்னணிகளைப் பற்றிய தகவு முறை ஒருங்கமைத்தல் வாயிலாக ஒருங்கமைத்தல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Organization : Organization of a Value System ➢ Generics
ஒருங்கமைத்தல் : தகவுமுறை ஒருங்கமைத்தல் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Organization : Organization of a Value System ➢ Aesthetics
ஒருங்கமைத்தல் : தகவுமுறை ஒருங்கமைத்தல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Organization : Organization of a Value System ➢ Affectives
ஒருங்கமைத்தல் : தகவுமுறை ஒருங்கமைத்தல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Read the given short story along with a set of questions and a series of possible responses to each of them. Indicate your view on each of the response in the binary scale provided.

  கொடுக்கப்பட்டுள்ள சிறுகதையின் அடிப்படையிலான வினாக்களும் அவற்றிற்குரிய விடைகளாகக் கருதப்படும் பல்வேறு கூற்றுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் உரிய தகவு முறை ஒருங்கமைப்புப் பொருத்தத்தை இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question item / stem :

  சிறுகதை : சாயங்கால மயக்கம்

  எனது சொந்த ஊரிலிருந்து வந்து வெகுநாட்களாகி விட்டது.

  ஊர் ஆசை என்பது, கட்குடி மாதிரி, ஒரு போதை வஸ்து. அந்த ஆசை வந்துவிட்டால், அதற்கு மாற்றுக் கிடையாது. போய்த்தான் தீரவேண்டும். இந்த ஊர்ப்பித்தம், காதலைப் பார்க்கினும், தேசபக்தி கடவுள் பக்திகளைப் பார்க்கினும் மிகக் கொடூரமானது. அதன் ஏகச் சக்ராதிபத்தியம் மனத்தில் என்னென்ன கனவுகளையெல்லாம் எழுப்பும் தெரியுமா?

அன்று சின்னப் பையனாக இருக்கும்பொழுது தோழனுடன் ஆற்றங்கரையில் சண்டை போட்டது முதல், நான் முதலில் விடியற்கால ஸ்நானத்திற்குச் செல்லும் இன்பம் முதல், எல்லாச் சிறு அற்பச் சம்பவங்களும் – அடே, அதில் என்ன மோகம்!

ஊருக்குப் போனேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரவருணி நதிக்கரையில் ஒரு சிறு கிராமம். சென்னையில் வசிப்பதால், ராஜீயக் கைதி சிறையில் அனுபவிக்கும் சிரமத்தையெல்லாம், தியாகம் செய்யாமல் அநுபவித்து–விடலாம். அதிலே ஊருக்குப் போக வசதி கிடைத்தது. இந்த உலகத்திலே கிறிஸ்து சொன்ன மோக்ஷ சாம்ராஜ்யம் கிடைத்துவிட்ட மாதிரியே இருந்தது.

ரயில் ஏறுவதும், வண்டி போவதும், ஸ்தூலத்தில் நான் ஊரை அநுபவிப்பதும் நடப்பதற்குப் பல மணிநேரத்திற்கு முன்னமேயே, நான் ஊருக்குப் போய்விட்டேன்.

ரயில், கடகட குப்குப் என்று, எனது தியானத்தைக் கலைக்க முயன்றது.

ரயில் செல்லச் செல்ல, சென்னையின் இரைச்சல், ஓம் என்ற ஹூங்காரம், நாகரிக யக்ஷனின் திருக்கண் நாட்டங்கள் – எல்லாம் மெதுவாக மறைந்தன. ஏன்? வேகமாகவே நான் ரயிலில் செல்லவில்லை.

வெளியே நிலா ... ஆனால் ....

ஆற்றங்கரை மணல் கரையில் பேராய்ச்சி கோயில் கண் பொட்டை–யாக்கும் மாலை மயக்கத்தில் இதன் கோபுரத்தளத்தில், எத்தனை நாவல்கள் எனது மன உலகத்தில் ஒரு வாழ்க்கையைச் சிருஷ்டித்தன!

அப்பொழுது, எங்கெங்கோ வாரியிறைத்த பிரம்ம தேவனின் சிதறுண்ட நம்பிக்கைகள்போல வாழ்க்கை எரியிட்ட கனல்கள் போன்ற நட்சத்திரங்கள்!

மேல் வானத்திலே அந்த மரமடர்ந்த இருட்டுத் திரைக்கு மேல் செவ்விருள்! அந்தத் தேவனின் சோக நாடகம்!

அந்தச் சாயங்காலம், சீதையின் சோகத்தையும், சுதேயின் பாஸ்டையுமே எப்பொழுதும் என் நினைவிற்குக் கொண்டுவருகிறது.

பேராய்ச்சி கோயில் உச்சித்தளத்தில் கையில் புஸ்தகத்துடன் நான்!

நிசப்தம் ...

பேராய்ச்சி, காளியின் ஸ்வரூபம் ... எங்கள் பெரியண்ணத் தேவருக்குக் குடும்பத் தெய்வம்—தலைமுறை தலைமுறையாகக் காத்துவந்த பேராய்ச்சி... பேராய்ச்சி! அதில் என்ன தொனி! எவ்வளவு அர்த்த புஷ்டி!

இருண்ட வெளிச்சத்தில் இருண்ட கோரமான சிலை...

தாயின் கருணை. என்ன நம்பிக்கை!

நாளைக்கு அம்மனுக்குக் கொடை.

நாளைக்கு இவ்வளவு நேரத்தில் இங்கு எப்படியிருக்கும்!

இந்த மௌன சுகம் மருந்திற்காவது கிடைக்குமா?

என் கண்கள் இருட்டில் அசட்டையாகத் துழாவுகின்றன.

கோயில் வாசலில் இரண்டு ஆட்டுக்கிடா.

பெரியண்ணத் தேவருடையவைதான்.... அம்மனுக்கு வளர்த்து விடப்பட்டவை.

வாழ்வு நாளைவரைதான் என்று அவற்றிற்குத் தெரியுமா? சித்திரபுத்திரன் மாதிரி, எனக்குத் தெரியும்.

எங்கெங்கோ புல்லையும் பூண்டையும் தின்ற கொழுப்பு முட்டி விளையாடுகின்றன; "டபார்!"

மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது!

பின்னுக்குச் சென்று மறுபடியும் ஓடிவந்து... "டபார்!"

இரத்தங் கண்டாகிவிட்டது! என்ன கொள்கைப் பிணக்கோ?

நாளைக்கு இரண்டினுடைய இரத்தமும் அந்தப் பலிபீடத்தில் கலக்குமுன், அதற்குள் என்ன அவசரம்?

அதுதான் சுவாரஸ்யம்!

அந்தச் சண்டைதான் வாழ்க்கையின் ரகசியம், தத்துவம், அதிலேதான் நம்பிக்கை வைத்து மனித நாகரிகம் இதுவரை வளர்ந்து

வந்திருக்கிறது. இனி ! அதைப்பற்றி எனக்குத் தெரியாது. 'நாளைக்குப் பலியாகப் போகிறோம்!' என்று தெரிந்தால், இந்த மாதிரி முட்டிக்–கொள்ள மனம் வருமா? வந்தால், முட்டிக் கொள்வதில், வாழ்க்கைப் போட்டியில், சுவாரஸ்யம் ஏற்படுமா?

"ஸார்! கொஞ்சம் நகர்ந்து உட்காருங்கள்!"

நான் ரயிலில்தான் உட்கார்ந்திருந்தேன். அந்த மாலை மயக்கந்தான். அந்த ஊர்ப் பைத்தியந்தான்! – புதுமைப் பித்தன்

வினாக்கள் (பகுதி I) : மோட்ச ராஜ்யம் கிடைத்துவிட்டது, ஏன்?

அ. சஞ்சலமற்ற வாழ்க்கை கிடைக்கப் போகிறது என்ற எண்ணத்தால் — பொருத்தம் / பொருத்தமில்லை.

ஆ. கிடைக்காதது கிடைத்துவிட்டதால் — பொருத்தம் / பொருத்தமில்லை.

இ. நீண்ட நாள் ஆசை நிறைவேறுவதால் — பொருத்தம் / பொருத்தமில்லை.

ஈ. விரும்புவதெல்லாம் கட்டுப் பாடின்றிக் கிடைக்கும் என்பதால் — பொருத்தம் / பொருத்தமில்லை.

வினாக்கள் (பகுதி II) : நாகரிகம் என்று குறிப்பிடுவது?

அ. சுகமான வாழ்க்கையை மேற்–கொண்டுள்ள மக்கள் கூட்டம் — பொருத்தம் / பொருத்தமில்லை.

ஆ. பெரிய பரப்பளவைக் கொண்டு விளங்கும் நகரம் — பொருத்தம் / பொருத்தமில்லை.

இ. மிகுதியான ஆரவாரம் நிறைந்த நகரம் — பொருத்தம் / பொருத்தமில்லை.

ஈ. அழகாக இருக்கும் நகரம் — பொருத்தம் / பொருத்தமில்லை.

வினாக்கள் (பகுதி III): நான் ஊருக்குச் செல்வதற்கான காரணம்

அ. விடுமுறையைக் கழிப்பதற்கு பொருத்தம் / பொருத்தமில்லை.

ஆ. அமைதியான சூழலில் இருப்பதற்கு பொருத்தம் / பொருத்தமில்லை.

இ. பாசப் பிணைப்பிற்கு இடம் கொடுப்பதற்கு பொருத்தம் / பொருத்தமில்லை.

ஈ. இளமைக்கால அனுபவங்களை மீண்டும் பெறுவதற்கு பொருத்தம் / பொருத்தமில்லை.

விடை: பகுதி I – 'அ' , பகுதி II – 'இ' மற்றும் பகுதி III – 'ஈ' ஆகியன பொருத்தம்

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : Ideologies - Childhood experience through a short story
- Objective - ability level : To test organization in terms of organization of a value system with reference to the childhood experience through a short story.
- Name of the item format : Check list
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Organization in terms of organization of a value system with reference to the childhood experience through a short story, is tested at the identification level.

  இனங்காணுதல் நிலையில், ஒரு சிறுகதையின்வழி காட்டப்படும் குழந்தைக்கால அனுபவங்கள் பற்றிய தகவுமுறை ஒருங்கமைத்தல் வாயிலாக ஒருங்கமைத்தல் உணர்வு நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

325000 AFFECTIVE / CHARACTERIZATION BY A VALUE
தகவுப் பண்புருவாக்கம்

325100 AFFECTIVE / CHARACTERISATION / GENERALIZED SET
பொதுமைக் கணம்

Characterization by a Value : Generalized Set ➢ Genesis
தகவுப் பண்புருவாக்கம் : பொதுமைக் கணம் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing about the origin and development of literature may be given.

  இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Two poetic verses having related themes on moral values are given below followed by a set of ten statements. By adopting the analogy that exists between the two verses, the given statements may be rearranged into five sets.

  அறக்கருத்துகள் அடங்கிய இரண்டு செய்யுட்கள் அவற்றின் கருத்து அடிப்படையில் இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை இரண்டுக்கு-மிடையேயுள்ள ஒப்புமையைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள பத்துக் கூற்றுக்களையும் ஐ ந்து தொகுதிகளாக வகைப்படுத்துக.

- Question item / stem :

  செய்யுள்கள் :

  ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
  ஓதலின் சிறந்தன்று ஒழுக்க முடைமை
  – காரிகை மேற்கோள்

  ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்.
  – திருக்குறள்

கூற்றுக்கள் :

அ. ஒழுக்கம் கல்வியைவிட உயர்வானது.

ஆ. ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்ப் போற்ற வேண்டும்.

இ. ஒழுக்கமில்லாக் கல்வி இன்னலைத் தரும்.

ஈ. ஒழுக்கமற்றவர் உயிரற்றவர் எனக் கருதப்படுவர்.

உ. கல்வி கற்றவர் ஒழுக்கத்தோடு வாழவேண்டும்.

ஊ. மனித வாழ்க்கையின் மேன்மை ஒழுக்கத்தினால் அமையும்.

எ. ஒழுக்கமும் கல்வியும் இணைந்தால் உயர்வு கிடைக்கும்.

ஏ. கல்வியால் ஒழுக்கத்தைப் பெறவியலும்.

ஐ. ஒழுக்கத்தால் கல்விப்பயனைவிட மிகுதியான பயன் கிடைக்கும்.

ஒ. ஒழுக்கம் நிலையான புகழ் அளிக்கும்.

விடை : சரியான தொகுதிகள் : 1. அ, இ, 2. ஆ, ஈ, 3. உ, ஏ, 4. ஊ, ஒ, 5. எ, ஐ

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Evolution - Moral values of the verses of didactic nature
- Objective - ability level : To test characterization by a value in terms of generalized set with reference to the moral values of the verses of didactic nature.
- Name of the item format : Objective category : Rearrangement
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary
- Rationale : Characterization by a value in terms of generalised set with reference to the moral values of the verses of didactic nature, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், கவிதைகளின் வழி அறநெறிப் பண்புகளை முன்னிலைப்படுத்தும் பாங்கு பற்றிய பொதுமைக் கணம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Characterization by a Value : Generalized Set ➢ Generics
தகவுப் பண்புருவாக்கம் : பொதுமைக் கணம் ➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Characterization by a Value : Generalized Set ➢ Aesthetics
தகவுப் பண்புருவாக்கம் : பொதுமைக் கணம் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Five groups of poetic descriptions consisting of aesthetic elements such as rhymes, alliteration, simile, metaphor, etc are given below. Indicate the aesthetic element that has affected you to a great extent, from each of the five groups.

  எதுகை, மோனை, உவமை, உருவகம் போன்ற முருகியல் கூறுகள் அடங்கிய வருணனைப் பாடல்கள் ஐந்து தொகுதிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலிருந்தும் உங்கள் மனதை மிகவும் ஈர்க்கும் வகையில் அமைந்த முருகியல் கூறு ஒன்றைச் சுட்டிக்காட்டுக.

- Question item / stem :

  பாடல் தொகுதிகள் :

  அ. "தாமரை பூத்த குளத்தினிலே – முகத்
  தாமரை தோன்ற முழுகிடுவாள்."

  "அழகு மாறிப் போகும் – நீ
  அறிந்து நட பெண்ணே!"

  "நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
  நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை."

"வான மழை நீயெனக்கு
வண்ணமயில் நானுனக்கு ;
பானமடி நீயெனக்குப்
பாண்டமடி நானுனக்கு."

ஆ. "தந்தையைப் பிரிந்து வந்தே
தனிமனை அமைத்த போதும்
முந்தையர் வகுத்த பாதை
முறை அணுப் பிசகாதாக."

"தண்ணிலவும் அவள் முகமோ!
தாரகைகள் அவள் நகையோ!"

"தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்க"

இ. "இட்டது நீ சட்டம் – என்
இன்பப் பெரு மாட்டி."

"படைபலங் கண்டோம்; நல்ல
பாசறை அமைப்போம்; தோன்றும்
தடைபல முறிப்போம் ; இன்பத்
தனிமனை அமைப்போம்"

"ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்
ஒரு தாமரைமுகம்! ஒரு சிறு மணியிடை"

"என்னென்பேன் அதோ பூரிக்கின்றது வெண்ணிலவும்
எழில் நீலவான் எங்கணும் வயிரக் குப்பை."

ஈ. "கோவைப் பழத்தினைப் போன்ற உதட்டினை
வஞ்சி, எனக்களிப்பாய்"

"வெளியிற் சொன்னால் வெட்கக்கேடு
வெள்ளை யப்பரே வெந்தது நெஞ்சம்"

"காய்தல் உவத்தல் அகற்றிய பொருளை
ஆய்தல் அறிந்த அறிவின் வடிவம்
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்."

உ. "பிள்ளைக் கனியினைக் காட்டி – இன்பம்
பெற்றவன் மற்றவர் பெற்றிடத் தந்தான்
வெள்ளை மனத்தொரு பெண்ணின் – நெஞ்சில்
வீழ்ந்தவன் நமையும் வீழ்ந்திடச் செய்தான் !"

"மங்கிற்றடி வெய்யில் – அதோ
மகிழ்ந்த தடி அல்லி!"

"வேற்கண்ணி யாளொருத்தி சோலை தன்னில்
விளையாட நின்றிருந்தாள் மயிலைப் போல."

"தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல் !"

விடை: ஒரு குறிப்பிட்ட முருகியல் கூற்றினையே ஒவ்வொரு தொகுதியிலும் சுட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Global quality scaling
- Literary input : Aesthetics : Aspects in isolation - Rhymes, Alliteration, Similie, Metaphor, etc.
- Objective - ability level : To test characterization of a value in terms of generalized set with reference to the aesthetic elements in isolation such as rhymes, simile, etc.
- Name of the item format : Direct questioning
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Characterization by a value in terms of generalised set with reference to the aesthetic elements in isolation such as rhymes, similes, etc., is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், கவிதையின் ஒலிநயம், உவமை போன்ற முருகியல் கூறுகள் பற்றிய பொதுமைக் கணம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Characterization by a Value : Generalized Set ➢ Affectives
தகவுப் பண்புருவாக்கம் : பொதுமைக் கணம் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literature may be given.
  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Four groups of poetry pieces (couplets) describing a particular aspect are given below. Identify the aspect which according to your opinion, has affected to a great extent, from each group.
  நான்கு தொகுதிகளாகக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட வருணனைகளைக் கொண்ட (குறளைச் சிறப்பிக்கும்) திருவள்ளுவமாலைப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் எந்தப் பண்புக்கூறு அதிகமான உணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுக.

- Question item / stem :

  <u>வருணனைப் பகுதி I :</u>

  அ. வள்ளுவரும் தம் குறள் வெண்பா அடியால் வையத்தார்
  உள்ளுவ எல்லாம் அளந்தார் ஓர்ந்து.

  ஆ. (சுருங்கிய) சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
  வல்லார் ஆர் வள்ளுவர் அல்லால்.

  இ. அறம் முதல் நான்கும் அகல் இடத்தோர் எல்லாம்
  திறம் உறத் தேர்ந்து தெளியக் குறள்.

  <u>வருணனைப் பகுதி II :</u>

  அ. இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
  செம்மை செறியின் தெளிவு பெற.

  ஆ. உள்ளுநர் உள்ளும் பொருள் எல்லாம் உண்டென்ப
  வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

  இ. தினைஅளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
  பனைஅளவு காட்டும் படித்தால்.

<u>வருணனைப் பகுதி III :</u>

அ. கடுகைக் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

ஆ. வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்இருள் நீக்கும் விளக்கு.

இ. வான்நின்று மண்நின்று அளந்ததே வள்ளுவனார்
தாம்நின்று அளந்த குறள்.

<u>வருணனைப் பகுதி IV :</u>

அ. வேத விழுப்பொருளை வெண் குறளால் வள்ளுவனார்
ஓத வழுக்(கு) அற்ற(து) உலகு.

ஆ. சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்தபொருள் எல்லாம்.

இ. அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

விடை: ஒரு குறிப்பிட்ட உணர்வுக் கூற்றினையே ஒவ்வொரு தொகுதியிலும் சுட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Global quality scaling
- Literary input : Affectives : Ideologies - Appreciation of literature in terms of its form and use
- Objective - ability level : To test <u>characterization by a value</u> in terms of generalized set with reference to appreciation of literature in terms of its form, content and use.
- Name of the item format : Direct questioning
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate

- Rationale : Characterization by a value in terms of generalised set with reference to appreciation of literature in terms of its form, content and use, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், இலக்கியத்தின் வடிவம், உள்ளடக்கம் மற்றும் பயன் ஆகியவை பற்றிய பொதுமைக் கணம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

325200 *AFFECTIVE* / CHARACTERISATION / ***CHARACTERIZATION***

பண்புருவாக்கம்

Characterization by a Value : Characterization ➢ Genesis
தகவுப் பண்புருவாக்கம் : பண்புருவாக்கம் ➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the origin and development of literature may be given.

  இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  A poetry which emphasises the view of 'universal oneness' is given below. Twelve such values collected from the poetries of different ages are also given below. Give your opinion on each of them in the given three point scale.

  உலக ஒற்றுமைக்கான உயர்ந்த கண்ணோட்டத்தை உணர்த்தும் பாடல் ஒன்றும் அவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட நடத்தைக் கூறுகள் பன்னிரண்டும் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூறுகள் ஒவ்வொன்றைப் பற்றியுமான உங்கள் மதிப்பீட்டை மூன்று நிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

கணிப்பளவு எண்களுக்கான விளக்கம் :

3 – மிகத்தேவை; 2 – ஓரளவு தேவை; 1 – தேவையில்லை

Question item / stem :

பாடல் :

மனிதரில் நீயுமோர் மனிதன் ; மண்ணன்று!
இமைதிற எழுந்து நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்துச் சுடர்முகம் தூக்கு !
மீசையை முறுக்கி மேலே ஏற்று !
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு ! நடத்து லோகத்தை
உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டோடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல் ஏறு மேன்மேல்
ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பைப்
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய் ; அகண்ட மாக்கு !
விலாசப் பார்வையால் விழுங்கு மக்களை !
அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேத மில்லை
உலகம் உண்ண உண் ! உடுத்த உடுப்பாய் !

– பாரதி தாசன்

நடத்தைக் கூறுகள் :

அ. தன் திறன் உணர்தல்	3	2	1
ஆ. தைரியமுடையவனாக விளங்குதல்	3	2	1

இ. எதனையும் இலகுவாக எடுத்துக் கொள்ளுதல்	3	2	1
ஈ. இன்னல்களை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்ளுதல்	3	2	1
உ. ஒருவருக்கொருவர் வரன்முறைக்குள் வாழ்தல்	3	2	1
ஊ. வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையோடு வாழ்தல்	3	2	1
எ. அதிகமான குறிக்கோள்களைக் கொண்டிருத்தல்	3	2	1
ஏ. எப்போதும் மேன்மேலும் உயர்வாக எண்ணுதல்	3	2	1
ஐ. அறிவைப் பெருக்குதல்	3	2	1
ஒ. பிறரோடு சார்ந்து வாழ்தல்	3	2	1
ஓ. தன்னல உணர்வு பெறுதல்	3	2	1
ஔ.வீரனைப் போல் வெளிக்காட்டிக் கொள்ளுதல்	3	2	1

விடை: 'அ'முதல் 'ஓ' வரை – உயர்ந்த மதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Poetry - on the code of conduct for a value based life
- Objective - ability level : To test <u>characterization by a value</u> in terms of characterization with reference to a poetry on the code of conduct for a value based life.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate

- Rationale : Characterization by a value in terms of characterization with reference to a poetry on the code of conduct for a value based life, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், ஒரு பண்பார்ந்த வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்க நெறியைக் கூறும் கவிதையைப் பற்றிய பண்புருவாக்கம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Characterization by a Value : Characterization ➢ Generics
தகவுப் பண்புருவாக்கம் : பண்புருவாக்கம் ➢ வகைமையியல்

❑ *Illustrative Example*

...... to be filled in later ......

* * *

Characterization by a Value : Characterization ➢ Aesthetics
தகவுப் பண்புருவாக்கம் : பண்புருவாக்கம் ➢ முருகியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :

  A general briefing on the aesthetics of literature may be given.

  இலக்கியத்தின் முருகியல் பண்புகள் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  Classify the following phrases into two groups based on the aesthetic elements that are built in with them.

  கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை அவற்றிலுள்ள முருகியல் பண்புகளின் அடிப்படையில் இரண்டு குழுக்களாகப் பிரித்து எழுதவும்.

- Question item / stem :

  அ. அறிவுச்சுடர் கல்வி

ஆ. கடல் போன்றது கல்வி

இ. வாழ்க்கைத் தெப்பம் கல்வி

ஈ. உயிர் போன்றது கல்வி

உ. கல்வி ஓர் விடிவெள்ளி

ஊ. பொருளுக்கு ஒப்பானது கல்வி

எ. மம்மர் தீர்க்கும் மருந்து கல்வி

ஏ. செல்வம் போன்றது கல்வி

விடை: அ, இ, உ, எ – ஒரு குழு (உருவகத் தொடர்கள்)

ஆ, ஈ, ஊ, ஏ – இன்னொரு குழு (உவமைத் தொடர்கள்)

- Scoring procedure : Analytical
- Literary input : Aesthetics : Aspects in isolation - Phrases builtin with aesthetic elements
- Objective - ability level : To test characterization by a value in terms of characterization with reference to the phrases builtin with aesthetic elements.
- Name of the item format : Objective category - Rearrangement
- Administering mode : Written
- General educational level : L_1 - Higher secondary / L_2 - Intermediate
- Rationale : Characterization by a value in terms of characterization with reference to phrases builtin with aesthetic elements, is tested at the suitability level.

  பொருத்த நிலையில், முருகியல் கூறுகள் அமைந்த தொடர்கள் பற்றிய பண்புருவாக்கம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Characterization by a Value : Characterization ➢ Affectives

தகவுப் பண்புருவாக்கம் : பண்புருவாக்கம் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  A general briefing on the appreciation of literatue may be given.

  இலக்கிய நயம் பாராட்டுதல் பற்றிப் பொதுவான விளக்கம் தரலாம்.

- Instruction to the student :

  A few statements of reasons for the emergence of the following pieces of Kannadasan's poetry are given below. Indicate the statements which according to your opinion, are considered as correct.

  வாழ்க்கை அனுபவங்களைப் பற்றிய கண்ணதாசனின் பாடல்கள் நான்கும், அவை ஒவ்வொன்றின் படைப்புக்கான காரணங்கள் அடங்கிய தொகுதிகள் நான்கும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியெனக் கருதப்படும் கூற்றுக்களை ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் சுட்டிக் காட்டுக.

- Question item / stem :

  பாடல்கள் :

  எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்--இங்கு
  இல்லாமை இல்லாத நிலை வேண்டும் ;
  வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை--நீங்கி
  வரவேண்டும் இந்நாட்டில் பொதுவுடைமை.
  – கண்ணதாசன் ... ... (1)

  அடிக்கிற கைதான் அணைக்கும்
  அணைக்கிற கைதான் அடிக்கும்
  இனிக்கிற வாழ்வே கசக்கும்
  கசக்கிற வாழ்வே இனிக்கும்.
  புயலுக்குப் பின்னே அமைதி
  துயருக்குப் பின் சுகம் ஒரு பாதி!
  – கண்ணதாசன் ... ... (2)

  சட்டி சுட்டதடா கை விட்டதடா
  புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா ;
  நாலும் நடந்து முடிந்த பின்னே
  நல்லது கெட்டது தெரிந்ததடா!
  – கண்ணதாசன் ... ... (3)

சொல்லுவார் வார்த்தையாவும்
தொல் புவி ஏற்பதில்லை ;
செல்வர்கள் வெற்றி பெற்றோர்
தின ஏடு கையில் உள்ளோர்
வல்லவர் பதவி கொண்டோர்
வார்த்தையே அரங்கம் ஏறும்.

– கண்ணதாசன் … … … … … … (4)

படைப்புக்கான காரணம் (பாடல் 1) :

அ. அவருக்கு ஏற்பட்ட நேரடி அனுபவம்

ஆ. பிறருக்கு ஏற்பட்ட அனுபவத்தின் கேள்வி ஞானம்

இ. கற்பனையில் காணப்பட்ட காட்சி மிகுதிகள்

ஈ. பண்டை இலக்கியங்களில் சொல்லப்பட்ட முன்னோர் கருத்துகள்

உ. பொழுது போக்கு

படைப்புக்கான காரணம் (பாடல் 2) :

அ. அவருக்கு ஏற்பட்ட நேரடி அனுபவம்

ஆ. பிறருக்கு ஏற்பட்ட அனுபவத்தின் கேள்வி ஞானம்

இ. கற்பனையில் காணப்பட்ட காட்சி மிகுதிகள்

ஈ. பண்டை இலக்கியங்களில் சொல்லப்பட்ட முன்னோர் கருத்துகள்

உ. பொழுது போக்கு

படைப்புக்கான காரணம் (பாடல் 3) :

அ. அவருக்கு ஏற்பட்ட நேரடி அனுபவம்

ஆ. பிறருக்கு ஏற்பட்ட அனுபவத்தின் கேள்வி ஞானம்

இ. கற்பனையில் காணப்பட்ட காட்சி மிகுதிகள்

ஈ. பண்டை இலக்கியங்களில் சொல்லப்பட்ட முன்னோர் கருத்துகள்

உ. பொழுது போக்கு

படைப்புக்கான காரணம் (பாடல் 4) :

அ. அவருக்கு ஏற்பட்ட நேரடி அனுபவம்

ஆ. பிறருக்கு ஏற்பட்ட அனுபவத்தின் கேள்வி ஞானம்

இ. கற்பனையில் காணப்பட்ட காட்சி மிகுதிகள்

ஈ. பண்டை இலக்கியங்களில் சொல்லப்பட்ட முன்னோர் கருத்துகள்

உ. பொழுது போக்கு

விடை : பெரிதும் எதிர்பார்க்கப்படும் காரணங்கள்

1 – அ & ஆ
2 – அ & ஆ
3 – அ & ஆ
4 – அ & ஆ

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives - Ideologies - poems on life experience
- Objective - ability level : To test characterization by a value in terms of characterization with reference to poems on life experience.
- Name of the item format : Check list
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Characterization by a value in terms of characterization with reference to poems on life experience, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில் வாழ்க்கை அனுபவங்களை வெளிப்படுத்தும் கவிதைகள் பற்றிய பண்புருவாக்கம் வாயிலாகத் தகவுப் பண்புருவாக்கம் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

326000 *AFFECTIVE / .... **Anything not covered***
விடுபட்டவை

327000 *AFFECTIVE / **GENERAL***
பொது

PSYCHOMOTOR DOMAIN
செயற்களம்




Fig. 8 *Components of Psychomotor Domain (Per.)*

Source Pon Subbiah, *Assessment in Language and Literature : A Conceptual Framework*

PSYCHOMOTOR DOMAIN
செயற் களம்

331000 PSYCHOMOTOR / IMITATION
போலச் செய்தல்

331100 PSYCHOMOTOR / IMITATION / IMPULSION
உட்தூண்டல்

Imitation : Impulsion
போலச் செய்தல் : உட்தூண்டல்

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The use of gesticulation and voice modulation for an effective presentation of poems highlighting the social trends, may be explained with examples.
  இலக்கியங்களில் அமைந்துள்ள சமுதாயச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்குரிய மெய்யசைவுகளுக்கான சாத்தியக் கூறுகள் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Indicate your opinion in the binary scale whether the following poems on social problems consist of the factors of impulsion.
  சமுதாயச் சூழலைப் பிரதிபலிப்பதாக அமையும் கீழ்க்காணும் பாடல்களில் உட்தூண்டலை ஏற்படுத்தும் கூறுகள் உள்ளனவா என்பதை இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

  அ. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
  செய்வோம் – வீணில்
  உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்.
  – பாரதியார்

  உண்டு / இல்லை

ஆ. ஏரோட்டும் ஏழை இதயம் குமுறினால்
போராட்டமே எழுமே! – புவியிலே
போராட்டமே எழுமே!
குடும்பம் குடும்பமாய்ப் பிச்சை எடுத்தலையும்
கொடுமைகளை இனிச்சகியோம்
– ப. கோ. கல்யாணசுந்தரம்

உண்டு / இல்லை

இ. எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை – நீங்கி
வரவேண்டும் இந்நாட்டில் பொதுஉடைமை
– கண்ணதாசன்

உண்டு / இல்லை

விடை: அ, ஆ, இ – மெய்யசைவுக்கான இடம் உள்ளதால் 'உண்டு' என்பதே எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Genesis : Poetry - Background
- Objective - ability level : To test imitation in terms of impulsion with reference to background of poetry.
- Name of the item format : Rating scale
- Administering mode : Written
- General educational level : L_1 - Graduate
- Rationale : Imitation in terms of impulsion with reference to background of poetry, is tested at the suitability level.
  பொருத்த நிலையில், பாடல்களின் பின்னணிச் செய்திகள் பற்றிய உட்தூண்டல் வாயிலாகப் போலச் செய்தல் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Imitation : Impulsion
போலச் செய்தல் : உட்தூண்டல்

➢ Generics
➢ வகைமையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  Gesticulation possiblities that are available in the form & structures of various literary genres may be explained with examples.

  பல்வேறு வகைமை வடிவப்பாடல்களில் மெய்யசைவுக்கான சாத்தியக்கூறுகள் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Indicate your opinion in the binary scale whether the following poems of different genres consist of the factors of impulsion.

  கீழ்க்காணும் பல்வேறு வகைமை வடிவப் பாடல்களில் உட்தூண்டலை ஏற்படுத்தும் கூறுகள் உள்ளனவா என்பதை இருநிலைக் கணிப்பளவில் குறிப்பிடுக.

- Question / item stem :

  பாடல் வரிகள் :

அ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (குறள்)
– திருவள்ளுவர்

உண்டு / இல்லை

ஆ. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே ! (கண்ணி)
– இராமலிங்க அடிகள்

உண்டு / இல்லை

இ. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது ! சிறுத்தையே வெளியில் வா !
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில் ! (வெண்பா)
– பாரதிதாசன்

உண்டு / இல்லை

விடை: அ, ஆ, இ – மெய்யசைவுக்கான இடம் உள்ளதால் 'உண்டு' என்பதே எதிர்பார்க்கப்படுகிறது.

- Scoring procedure : Analytical
- Literary input : Generics - poetry - Different forms
- Objective - ability level : To test imitation in terms of impulsion with reference to different forms of poetry.
- Name of the item format : Check list
- Administering mode : Oral & written with observation.
- General educational level : L_1- Graduate
- Rationale : Imitation in terms of impulsion with reference to different forms of poetry, is tested at the identification level.
  இனங்காணுதல் நிலையில், பல்வேறு வகைவடிவப் பாடல்கள் பற்றிய உட்தூண்டல் வாயிலாகப் போலச் செய்தல் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Imitation : Impulsion ➢ Aesthetics
போலச் செய்தல் : உட்தூண்டல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

...... to be filled in later ......

* * *

Imitation : Impulsion ➢ Affectives
போலச் செய்தல் : உட்தூண்டல் ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :
  The possibility of physical movements to reflect caused by the affective features of literature may be explained.

இலக்கியத்தின் உணர்வுக் கூறுகளை வெளிப்படுத்தும் விதமாய் அமையும் பாங்கு பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read the following couplets highlighting the affective factors , with appropriate voice modulation and gestures.

  உணர்வியல்கூறுகளை வெளிப்படுத்துவதாகவுள்ள கீழ்வரும் குறட்பாக்களை மெய்யசைவுகளோடும் குரல் ஏற்ற இறக்கத்தோடும் படிக்கவும்.

- Question / item stem :

  ஆ. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
  கீழல்லார் கீழல் லவர்.

  – திருவள்ளுவர்

  ஆ. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
  தான்நோக்கி மெல்ல நகும்.

  – திருவள்ளுவர்

  விடை: உணர்வியல் கூறு மெய்யசைவோடும் ஒலி ஏற்ற இறக்கத்தோடும் விளக்கப்பட வேண்டும்.

- Scoring procedure : Analytical
- Literary input : Affectives : poetry - Ideologies
- Objective - ability level : To test imitation in terms of impulsion with reference to poetry - idealogies.
- Name of the item format : Direct Questioning
- Administering mode : Oral
- General educational level : L_1 - Graduate
- Rationale : Imitation in terms of impulsion with reference to reading of a poetry, is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், உணர்வுக் கூறுகளைப் பிரதிபலிப்ப-தாகவுள்ள சில இலக்கியப் பகுதிகளை படித்தல் பற்றிய உட்தூண்டல் வாயிலாகப் போலச் செய்தல் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

331200 *PSYCHOMOTOR* / IMITATION / ***OVERT REPETITION***

வெளிப்படச் செய்தல்

Imitation : Overt Repetition
போலச் செய்தல் : வெளிப்படச் செய்தல்

➢ Genesis
➢ வளர்மையியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The general rules of metre and the segmentation procedures to be followed while reading and writing of a variety of poems that were in usage from time to time may be explained.

  பல்வேறு காலகட்டங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் பாவின் இனங்கள் பற்றிய பொதுவான கூறுகளையும் அவற்றைச் சீர்பிரித்துப் படிப்பது மற்றும் எழுதுவதற்கான வழிமுறைகளையும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  ஆசிரியர் கூறும் விளக்கத்தின். அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வகைக்கும் ஏற்ற ஒவ்வொரு பாடல் எழுதவும்.

- Question / item stem :

  a. வெண்பா

  b. ஆசிரியப்பா

  விடை: வெண்பா, ஆசிரியப்பாக்களில் அமைந்த பாடல்கள் முறையாக எழுதப்படவேண்டும்.

- Scoring procedure : Enumerative
- Literary input : Genesis : Poetry - Metres
- Objective - ability level : To test imitation in terms of overt repetition with refrence to the poetry - metre.
- Name of the item format : Direct Questioning
- Administering mode : Written
- General educational level : L_1 - Postgraduate

- Rationale : Imitation in terms of overt repetition with reference to poetry metre, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், பாவினங்களின் பொதுக் கூறுகள், அவற்றைச் சீர்பிரிக்கும் பாங்கு போன்றவற்றை வெளிப்படச் செய்தல் வாயிலாகப் போலச் செய்தல் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Imitation : Overt Repetition ➢ Generics
போலச் செய்தல் : வெளிப்படச் செய்தல் ➢ வகைமையியல்

❑ *Illustrative Example*

- Instruction to the teacher :
  The body movements and voice modulation that require for the presentation of a literary form may be explained.
  ஓர் இலக்கிய வடிவத்தைப் படிப்பதற்குரிய மெய்யசைவு மற்றும் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் பற்றி விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :
  Read aloud the following prose passage with voice modulation and gesture.
  கீழ்வரும் உரைநடைப் பகுதியை குரல் ஏற்ற இறக்கத்தோடும் மெய்யசைவுகளோடும் உரக்கப் படிக்கவும்.

- Question / item stem :
  ஒரு மலைச்சாரல். சூரியஒளியும் உள்ளே புக முடியாத நெருக்கமான சோலை. இனிய தென்றல் காற்று வேகமாக வீசுவது மத்தள ஒலியாகவும், சூரியனின் ஒளி விளக்காகவும், குயிலோசை இனிய குழலோசையாகவும், மயில் மேகத்தைக் கண்டு ஆடுவது நாட்டியமாகவும், குரங்குகள் வேடிக்கை பார்ப்பது நாடகம் பார்க்கும் மக்களாகவும் விளங்குகின்றன. அக் காட்சியைக் கண்டு அப்பொழுது உள்ளே நுழைந்த குழந்தை தன் தாயைப் பார்த்து ஆச்சரியத்தோடு 'அம்மா! எத்தனை அழகான சோலை! ஆ! ஆ! மயில் ஆடுவதைப் பாருங்களேன். குயில் கூவுவதைப் பாருங்களேன். குரங்கு வேடிக்கை செய்வதைப் பாருங்கள்! என்றது. அம்மா குழந்தையை நோக்கி " மிக

அழகாக இருக்கிறது இல்லையா ? என்ன ? நாம் இங்கேயே தங்கி விடலாமா?" என்றாள். அதற்குக் குழந்தை அம்மாவைப் பார்த்து, "இரவு வந்து விட்டால் எனக்குப் பயமாக இருக்குமே என்ன செய்வது ?" என்றது.

விடை: பொருத்தமான ஒலி ஏற்ற இறக்கங்களோடும் மெய்யசைவுகளோடும் படிக்கப்பட வேண்டும். [Observe the exclamatory expressions whether the examinee reads them with proper modulation and gestures].

- Scoring procedure : Analytical
- Literary input : Generics : Prose - Narration
- Objective - ability level : To test imitation in terms of overt repetition with reference to narration in a prose form of literature.
- Name of the item format : Direct Questioning
- Administerative mode : Oral
- General educational level : L_1 - Higher secondary
- Rationale : Imitation in terms of overt repetition with reference to prose form of a literature being followed for narration, is tested at the production level.
  வெளிப்படுத்துதல் நிலையில், உரைநடை வகை இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்துவது போன்றவற்றை வெளிப்படச் செய்தல் வாயிலாகப் போலச் செய்தல் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Imitation : Overt Repetition ➢ Aesthetics
போலச் செய்தல் : வெளிப்படச் செய்தல் ➢ முருகியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  The likely gestures of body and voice modulation while uttering poetic verses with full of similes, may be explained with examples.

  உவமைக் கூறுகள் அடங்கிய செய்யுட் பகுதிகளைப் படிக்கும்போது ஏற்படும் மெய்யசைவுகளைப் பற்றியும் குரல் ஏற்ற இறக்கங்களைப் பற்றியும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read aloud the following poetry to reveal its nature with appropriate voice modulation and body gestures.

  கீழ்வரும் பாடலின் தன்மையை உணர்ந்து அதன் உணர்வுகளுக்கேற்ப குரல் ஏற்ற இறக்கத்தோடும் உரிய பாவனைகளோடும் படிக்கவும்.

- Question / item stem :

  தூண்டிற் புழுவினைப் போல் – வெளியே
  சுடர் விளக்கினைப் போல்
  நீண்ட பொழுதாக – எனது
  நெஞ்சந் துடித்த தடீ!
  கூண்டுக் கிளியினைப் போல் – தனிமை
  கொண்டு மிகவும் நொந்தேன்!
  வேண்டும் பொருளை யெல்லாம் – மனது
  வெறுத்து விட்ட தடீ!

  – பாரதியார்

  விடை: 'தூண்டிற் புழுவினைப் போல்', 'சுடர் விளக்கினைப் போல்', 'கூண்டுக்கிளியினைப் போல்' – ஆகியவை உரிய பாவனைகளோடு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

- Scoring procedure : Global quality scaling
- Literary input : Aesthetics : Aspects in isolation - Usage of similes
- Objective - ability level : To test <u>imitation</u> in terms of overt repetition with reference to the usage of similes.
- Name of the item format : Direct Questioning
- Administering mode : Oral
- General educational level : L_1 - Higher secondary
- Rationale : <u>Imitation</u> in terms of overt repetition with reference to the usage of similes, is tested at the production level.

  வெளிப்படுத்துதல் நிலையில், உவமைகளை இலக்கியப் பகுதியில் பயன்படுத்துவது போன்றவற்றை வெளிப்படச்செய்தல் வாயிலாகப் <u>போலச் செய்தல்</u> நுண்தேர்வு செய்யப்படுகிறது.

* * *

Imitation : Overt Repetition
போலச் செய்தல் : வெளிப்படச் செய்தல்

> ➢ Affectives
> ➢ உணர்வியல்

❑ ***Illustrative Example***

- Instruction to the teacher :

  In any poetry, certain phrases acquire special importance. This may be explained with examples.

  செய்யுட் பகுதிகளில் ஒரு சில தொடர்கள் மட்டும் மிகச்சிறப்புடன் அமைந்துவிடுவது பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறலாம்.

- Instruction to the student :

  Read aloud the following poetries with appropriate voice modulation and gestures in order to get their aims reflected.

  கொடுக்கப்பட்டுள்ள பாடல்களின் நோக்கம் வெளிப்படும்படியாக, பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்தோடும் மெய்யசைவோடும் அவற்றைப் படித்துக் காட்டவும்.

- Question / item stem :

  அ. தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
